# ஆசிரிய தீபம்



## சர்வதேச ஆசிரியர் தின சிறப்பு மலர்



95 / 96

கோறளைப்பற்று
கல்விப் பிரதேச ஆசிரிய ஒன்றியம்.

இலக்கிய ஓடையில்
இலக்கிய நூலிது - ஆசிரிய
தீபங்களால் சுடர் ஏற
பிரகாசமாய் ஒளிர்கிறது ..
வாழ்த்துக்கள் ! வாழ்த்துக்கள் !

இலங்கை வங்கி அறிமுகப்படுத்தியுள்ள
பல விஷேட அம்சங்களை
உள்ளடக்கிய

# "மகளிர் பொற்கணக்கு"
# (KANTHA RAN GINUM)

அன்பார்ந்த மகளிருக்கு !

உங்கள் எதிர்காலம் சுபீட்சம் பெற, இலங்கை வங்கி காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து வழங்கும் இலவசக் காப்புறுதியும், ஏனைய வசதிகளும்,

தகமைகள்

i. வயது எல்லை; 16 முதல் 60 வரை.
ii. ஆரம்ப வைப்பு குறைந்தது 500/- ஆகக் குறைந்த மாதாந்த தவணைப் பணம் 250/-
iii. "ஜனசக்தி"யில் இணைக்கப்பட்டோருக்கு ஆரம்ப வைப்பு 200/- மட்டுமே.

நன்மைகள்

i. சாதாரண சேமிப்பு கணக்கிலும் பார்க்க அதிகரித்த வட்டி
ii. அடகுக் கடன்களுக்கு குறைந்த வட்டி.
iii. இலகு கடன் வசதிகள் குறைந்த வட்டி வீதங்களில் (13 முதல் 15 வரை)
iv. வருடம் தோறும் அதிஷ்டலாபச் சீட்டுகள் மூலம் பரிசில்கள்.
v. இலவசக் காப்புறுதி (Life Insurance)

மேலதிக விபரங்களுக்கு அண்மையிலுள்ள இலங்கை வங்கி முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

இலங்கை வங்கி தேசத்தின் வங்கியாளர்.

# ஆசிரிய தீபம்



## சர்வதேச ஆசிரியர் தின சிறப்பு மலர்



95 / 96

கோறளைப்பற்று கல்விப் பிரதேச ஆசிரிய
ஒன்றியம்.



# சமர்ப்பணம்

மரங்களில் பூக்கும் பூக்கள்- யாவும்
காய் ஆகி விடுவதில்லை.
அஃதே!
மனதில் உதிக்கும் எண்ணங்கள் - யாவும்
செயல் வடிவம் பெறுவதில்லை.
நுணுக்க மெனும் கருவியினால்
நுகர முடிந்த சுடர்களே
ஆசிரிய தீபமாக பிரகாசிக்க
அழகிய ஆக்கங்கள் யாவும்
அருமையாக உவந்து அளித்திட்ட
தமிழ் தாயின் பாதத்திற்கு
எம் மகத்தான பணியினை
மண்டியிட்டுச் சமர்ப்பிக்கின்றோம்.



# தமிழ்த் தாய் வாழ்த்து



காதொளிருங் குண்டலத்தாள்
கனிமொழியாள் வாழ்க
கைக்குவளை யாபதி கொள்
கன்னிகையாள் வாழ்க!

மேதகுமென் மார்பிடைச்சிந்
தாமணியாள் வாழ்க
மின்னுமணி மேகலை சூழ்
மெல்லிடையாள் வாழ்க!

சீதமலர்ப் பாதமொளிர்
சிலம்புடையாள் வாழ்க
சேர சோழ பாண்டியர் தஞ்
செல்வ மகள் வாழ்க!

நீதியுறுஞ் செங்கோலாய்த்
தூயகுறள் தாங்கும்
நிகரறியாச் செந்தமிழ்த்தாய்
நீடூழி வாழ்க! வாழ்க!!

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!



# ஆசிரியர் வாழ்த்து கீதம்

கண்ணைத் திறந்து கருத்துக்கள் ஈந்த
கணக்காயர் கூட்டம் வாழியவே
எண்ணத்தில் செயலில் இளமை மிளிர்
எங்கள் ஆசார்கள் வாழியவே
(கண்ணைத் திறந்து)

பொன்னை நெல்லை பொருளென மதித்து
போகம் காட்டி வாழாமல்
எண்ணை எழுத்தை இரு விழியாக
எண்ணும் நல் ஆசார்கள் வாழியவே
(கண்ணைத் திறந்து)

நிலையாய் நிற்கும் கல்விக்கு எந்த
நேரமும் பணியே செய்துவரும்
மலை விளக்காய் மிளிரும் ஆசார்
மங்களம் பெற்றிங்கு வாழியவே
(கண்ணைத் திறந்து)

ஆசார் நிலையை உயர்த்துதற்கு நம்
அரசும் கையது கொடுத்துவிட்டால்
நேசம் நிலவும் நீங்கும் மடமை
நீடூழி வாழ வழி பிறக்கும்
(கண்ணைத் திறந்து)

பெற்றாரும் மற்றாரும் கற்போரும் என்றும்
பேணியே காக்கும் கல்விதனை
நற்குருவாக நாட்டிலே துலங்கும்
நல்லாசார் ஒன்றியம் வாழியவே
(கண்ணைத் திறந்து)

வாழைச்சேனைக் கல்வி ஒன்றியம்
வாழும் ஆசார் கூட்டமது
வேளை தோறும் விதி சுடர்பரப்பி
மேதினி தன்னில் வாழியவே
(கண்ணைத் திறந்து)

# மலர் வெளியீட்டுக் குழு

ஆலோசகர்:

**திரு. சி. நாகேந்திரம்**
(பிரதேச கல்விப்பணிப்பாளர், கோறளைப்பற்று)

மலராசிரியர்:

**திரு. சா. மோகனதாஸ்**
(பகுதித் தலைவர், மட்/பேத்தாழை விபுலாநந்த வித்தியாலயம், வாழைச்சேனை.)

நிருவாக உறுப்பினர்கள்:

| | |
|---|---|
| திரு. ந. வெ. அருள்சீலன் | ஆசிரியர் |
| திரு. கே. ஜெயானந்தமூர்த்தி | ,, |
| திரு. தே. இளங்கோ | ,, |
| திரு. த. வை. சுப்பிரமணியம் | ,, |
| திரு. கே. சுப்பிரமணியம் | ,, |
| செல்வி. மு. இந்திராதேவி | ,, |
| திருமதி. ரா. செல்வராஜா | ,, |
| திரு. க. சோமநாதன் | ,, |
| திரு. க. கதிர்காமநாதன் | ,, |
| திரு. வி. மகேஸ்வரன் | ,, |
| திரு. க. பரமானந்தராஜா | ,, |
| செல்வி. ம. வசந்தி | ,, |

கல்விபண்பாட்டு அலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு, வ. கி. மா.
செயலாளர் அவர்களின்

# ஆசிச்செய்தி

வாழைச்சேனை கல்விக் கோட்ட ஆசிரியர் ஒன்றியம் 06. 10. 96 அன்று ஆசிரியர் தினத்தினை உரியமுறையில் கொண்டாட உள்ளதை அறிந்து பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். அக் கொண்டாட்டத்தினையொட்டி வெளியிடப்ப டவிருக்கின்ற ''ஆசிரிய தீபம்'' என்ற சிறப்பு நூலுக்கு ஆசியுரை வழங்குவ தில் மனநிறைவு அடைகின்றேன்.

ஆசிரிய சேவையின் சிறப்பு அம்சங்களைப்பற்றி பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டு இருப்பதனை நாம் அறிவோம். அவற்றுக்கு மேலாக புதிதாக கூறுவதற்கு ஒன்றுமில்லை என்றபோதும் இது ஒரு முக்கியமான சேவை என் பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

ஆசிரியர்கள் மாணாக்கர்களுக்கு அறிவுத்தீபம் ஏற்றுபவர்கள். அதனை திறம்பட அவர்கள் செய்வதற்கு தமது அறிவினை நாளாந்தம் வளர்த்துக் கொள்வது மிக அவசியமாகும். அதற்கு ஆசிரியர்கள் தொடர்ந்து படிக்க வேண்டியது தவிர்க்க முடியாது. இக் கருத்தினை ''ஆசிரிய தீபம்'' என்ற சொல் மிகத்தெளிவாக விளக்கி நிற்கின்றது. ஆசிரிய சமூகம் சிறப்புடன் வாழ வும் நற்சேவை செய்யவும் எனது மனநிறை வாழ்த்துக்களும் ஆசிகளும்.

சுந்தரம் டிவகலாலா
செயலாளர்

மாகாணகல்வித் திணைக்களம்
திருகோணமலை.

## மாகாண கல்விப்பணிப்பாளர் அவர்களின்

# ஆசிச்செய்தி

கோறளைப்பற்று கல்விப்பிரதேச ஆசிரியர்கள் ஒன்றுகூடி ஆசிரிய தினம் கொண்டாடப்படுவது வரவேற்கப்படக் கூடியதொன்றாகும்.

இப்படியான ஒரு நிகழ்ச்சியை முன்னிட்டு வெளிவரவிருக்கும் "ஆசிரிய தீபம்" சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். இந்நிகழ்ச்சியின் போது மாணவர்களும், ஆசிரியர்களும் பாராட்டப்பட இருப்பது ஒரு சிறந்த அம்சமாகும். இந்நிகழ்ச்சி அவர்களை மேலும் உற்சாகத்துடன் செயற்படத் தூண்டும் என்பதில் ஐயமில்லை.

மிகவும் கஷ்டமான காலகட்டத்தில், கஷ்டமான பிரதேசமாகிய வாழைச்சேனை கோட்டத்தில் கடமையாற்றும் ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள் ஆவார்கள். அவர்களுடைய தன்னலமற்ற சேவை தொடரவும், அதன் பலனாக அப்பகுதி மாணவர்கள் சகல கலைகளும் கற்று வல்லவர்களாக மிளிரவும் வாழ்த்துகின்றேன்.

ஒவ்வொரு ஆசிரியரும் "நல்ஆசான்" என்ற பெயர் பெறக்கூடியதாக அயராது உழைத்தல் வேண்டும். சமூகத்தில் ஆசிரியரின் நிலை உயருதல் வேண்டும்.

பாடசாலை நேரத்திற்கு மேலதிகமாக பாடசாலையில் தங்கி மாணவர்களை இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஊக்குவிக்கவும், அடைவுமட்டம் குறைந்த மாணவர்களுக்கு மேலதிக கற்பித்தலில் ஈடுபடவும் ஆசிரியர்கள் முன்வர வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**செல்வி. தி. பெரியதம்பி**
மாகாண கல்விப் பணிப்பாளர்
திருகோணமலை.

## வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்கள
## மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளரின்
# ஆசிச்செய்தி

''ஆசிரியர் ஞான விளக்குகளாவர்'' என்றார் தத்துவ மேதை சோக் கிறட்டீஸ் அத்தகைய சிறப்புமிக்க ஆசிரியர்களை கௌரவிக்கும் நோக்கத் துடன் ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் மாதம் 6ம் திகதி அவர்களைப் பாராட்டுமுகமாக விழா கொண்டாடிவருவது பாராட்டத்தக்க விடயமாகும்.

இந்நிலையில் கோறளைப்பற்று கோட்ட (வாழைச்சேனை) மட்டத்தி லான ஆசிரியர்களை கௌரவிப்பதற்காக விழா எடுப்பதும், ஆசிரிய தீபத் தினை வெளியிடுவதையும் இட்டு பாராட்டுகின்றேன்.

மாறிவரும் உலகுக்கு ஏற்ப ஆசிரியர் தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். ஆசிரியர் தான் பெற்ற அறிவை மாணவர்களுக்கு ஊட்டுவதோடு நின்று விடாமல் அவர்களுள் மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக் கொண்டு வருபவர்களாகவும் இருக்க வேண்டும். இந்நிலையில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்.

கோறளைப்பற்று கோட்ட ஆசிரியர்களுக்கும், கல்வி அதிகாரிகளுக்கும் பாராட்டுகள் தெரிவிப்பதுடன், மாணவர்கள் கல்வி வளர்ச்சியடைய எனது நல்லாசிகள்.

**திரு. எஸ். மகாலிங்கம்**
மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர்

மாகாண கல்வித்திணைக்களம்,
திருகோணமலை.

முன்னை நாள் வடக்கு கிழக்கு மாகாண
கல்வி கலாசார, விளையாட்டுத்துறை செயலாளர் அவர்களின்

# ஆசிச்செய்தி

உலக ஆசிரிய தினத்தை முன்னிட்டு வாழைச்சேனைக் கல்விக்கோட்ட ஆசிரிய ஒன்றியத்தால் வெளியிடப்படும் 'ஆசிரிய தீபம்' சிறப்பிதழுக்கு இவ் வாசியுரையினை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். மாதாவிற்கும் பிதா விற்கும் அடுத்த உயர் ஸ்தானத்தில் விளங்குபவன் ஆசிரியன். இளம் சமுதா யத்தினரை அறிவுடைய, பண்புடைய, திறன்மிக்க, நாட்டிற்குகந்த நற்பிர சைகளாக உருவாக்கும் பாரிய பொறுப்புவாய்ந்த பணியினை மேற்கொண் டுள்ளவர்கள் ஆசிரியர்கள். குருவே சகலதுமாக அக்காலத்தில் விளங்கிய பாரம் பரியம் எமக்குண்டு. இன்று ஆசிரியர்களது நிலை சமுதாயத்தில் உயர்ந்து நிற் கிறது. கணிப்பிலும், சம்பளத்திட்டத்திலும், பயிற்சி வசதிகளிலும் ஆசிரியர்க ளுக்கு உயர்வான இடம் வழங்கப்பட்டுள்ளது. எமது நாட்டில் ஏற்படுத்தப் பட்டுள்ள ஆசிரிய சேவை காலங்கடந்ததென்றாலும் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளமை பாராட்டுதற்குரியதாகும். இந்த நாடு, எமது சமுதாயம் ஆசிரி யர்களது சிறப்பான சேவையிலேயே தங்கியுள்ளது. முழுமனதுடனும், அர்ப் பண சிந்தனையுடனும், தியாக உணர்வுடனும் ஆசிரியர்கள் தம் சேவையினை வழங்க வேண்டியது மிக அவசியமாகும். பல்வேறு வேதனைகளின், சோதனை களின் மத்தியில் எமது ஆசிரியர்கள் இன்றைய அசாதாரண நிலையில் எமது வடகிழக்கு மாகாணத்தின் பலபகுதிகளில் கடமையாற்றுகின்றார்கள். ஆயினும் அவர்கள் தம் சேவையினை வழங்க பின்நிற்கக் கூடாது. வழமைப்பிரகாரம் பிரகாசிக்க உள்ள ஆசிரிய தீபத்தின் வெளியீட்டுக்கு காரணமாக இருந்த அனைவரையும் பாராட்டுவதுடன், ஆசிரிய தீபம் எமது ஆசிரிய மணிகளின் உள்ளங்களில் சேவை ஒளியினை தொடர்ந்தும் ஏற்றி வைக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**திரு. க. தியாகராசா**
முன்னைநாள் செயலாளர்
திருகோணமலை.

மட்டக்களப்பு மாவட்டக் கல்விப் பணிப்பாளரின்

# ஆசிச்செய்தி

மாணவர்களிடத்தில் நல்லெண்ணங்களை வளர்க்கும் கோயில்களாகப் பாடசாலைகள் அமைந்துள்ளன. அப்பாடசாலைகளிலே தெய்வங்களாக வீற்றிருப்பவர்கள் ஆசிரியர்கள் கல்விக் கண்ணைத் திறப்பவர்கள் இவ்வாசிரியர்கள். எனவே, இவ்வாசிரியர்கள் பல்வேறு பெருமைகளுக்குரியவர்கள்.

மாணவர்களிடத்தே நல்லெண்ணங்களை மட்டுமல்லாமல் அவர்களின் அறிவு, திறன் முதலியவற்றையும் வளர்ப்பவர்கள்; வெளிக் கொணர்பவர்கள். மாணவர்களின் தேடலுக்கு வழிசமைப்பவர்கள். இவ்வாறு ஆசிரியர்களின் பெருமைகளை அடுக்கிக்கொண்டே போகலாம். காரணம், அத்தனை பெருமைக்கும் உரியவர்கள் அவர்கள்.

பெருமை மிக்க இவர்களது சேவையின் முக்கியத்துவம் உணரப்பட்டு அவர்கள், ''ஆசிரியர் சேவை'' என்ற அமைப்புக்குள் கொண்டுவரப் பட்டுள்ளார்கள் இச்செயற்பாடு போற்றப்படவேண்டியதொன்று.

சேவையின் சிகரமாக விளங்கும் ஆசிரியர்களின் பெருமைகளை நினைந்து பாராட்டும் வகையிலே உலக ஆசிரியர் தினம் வருடந்தோறும் இப்போது கொண்டாடப்பட்டு வருகிறது. அத்தினத்தை வாழைச்சேனைக் கல்விக் கோட்டமும் கொண்டாடுகின்றது. கொண்டாட்டத்தின் ஓரம்சமாக ''ஆசிரிய தீபம்' எனும் பெயரிலே சஞ்சிகை ஒன்றும் வெளியிடப்படுகின்றது. இச்சஞ்சிகைக்கு என் நல்லாசிகள்.

சஞ்சிகை வெளிவர முன்னின்று உழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் என்பாராட்டுக்கள்.

''சேவை ஒன்றே நம் குறி''

**திரு. எஸ். மனோகரன்**
மாவட்ட கல்விப்பணிப்பாளர்

மாவட்ட கல்வித்திணைக்களம்,
மட்டக்களப்பு.

பிரதேச கல்விப் பணிப்பாளர் அவர்களின்

## ஆசிச்செய்தி

கோறளைப்பற்று கல்விப் பிரதேச ஆசிரியர்கள், ஆசிரியர் தினத்தை யொட்டி வெளியிடும் ''ஆசிரிய தீபம்'' சஞ்சிகைக்கு ஆசி வழங்குவதில் மகிழ் சியும் பெருமிதமும் அடைகிறேன்.

எல்லா தொழில்களுக்கும் மேலான தொழிலாக எல்லாத் தொழிலையும் செய்ய கற்பிக்கும் ஆசிரியர்கள் சிறப்புடையவர்கள் மேலானவர்கள். புனிதமா னதொழிலை ஆற்றுகின்ற ஆசிரியர்கள் மாதா பிதாவுக்கு அடுத்த முக்கியத் துவம் உடையவர்களாகக் கருதப்படுகிறார்கள் அதனால்தான் மாத,பிதா, குரு, தெய்வம் என்று வழங்கப்படுகிறது. கால மாற்றத்துக்கு ஏற்ப கல்விக் கொள்கைகள் மாற்றமடைகின்றன கல்வி கொள்கைகட்கு ஏற்ப வேகமாக மாறுபடும் அறிவுபூர்வமான செயற்பாடுகளை கற்பிக்க ஆசிரியர்கள் தயாராக இருக்க வேண்டும். ஆசிரியர்கள் தொடர்ந்து கற்பதன் மூலமும், வாசிப்பதன் மூலமும் சிறந்த ஆசிரியராக தமது தொழில் திறனை விருத்தி செய்து கொள் வதனால் நல்லாசிரியனாக திகழமுடியும். நல்லாசிரியர்கள் செய்யும் சேவை மதிக்கப்படவேண்டும் வாழ்த்தப்பட வேண்டும், இதனடிப்படையில் கோறளைப் பற்று கல்வி பிரதேசம் உலக ஆசிரிய தினத்தை கொண்டாடுவது பாராட்டப் பட வேண்டியதொன்றாகும். இவ்வாண்டு ஆசிரிய தினத்தின் போது ஆசிரி யர்களிடையே விளையாட்டுப் போட்டி, கவிதை, கட்டுரை, விவாத பேச்சுப் போட்டிகள் நடத்தப்படுவது ஆசிரியர்களை உற்சாகப் படுத்தி. கௌரவிக்கும் ஒரு செயற்பாடாகும். இச் செயற்பாடுகள் தொடர்ந்தும் நடைபெற இறை வன் நல்லருள் புரிய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். என் நல் வாழ்த் துக்கள் உரித்தாகுக.

திரு. சி. நாகேந்திரம்
பிரதேச பிரதிக்கல்விப்பணிப்பாளர்

பிரதேசக் கல்வி அலுவலகம்,
வாழைச்சேனை.

## இணைப்பு அதிகாரி அவர்களின்
# ஆசிச்செய்தி

வாழைச்சேனைப் பிரதேசம் கல்வியியல் நடவடிக்கைகளில் அண்மைக் காலமாக புதிய பரிணாமத்தைக் கண்டு வருவது யாவரும் அறிந்த ஒன்றே. இத்தகைய கற்றல் - கற்பித்தல் தொடர்பான செயற்பாடுகளில் ஆசிரியத் தொழிற்படையானது வண்டிச் சக்கரத்தின் அச்சாணிபோன்றதாகும்.

இவ்வாறானதொரு ஆசிரியத் தொழிற்படையைக் கொண்ட எமது பிர தேசத்தில் சருவதேச ஆசிரியதினத்தை முன்னிட்டு அவர்களை கௌரவிப்பதும். பாராட்டுவதும் தவிர்க்க முடியாததும் இன்றியமையாததுமான கடமை என் பதை உணர்கின்றேன்.

இவ்வகையில் இப்பிரதேச ஆசிரியர்களை கௌரவிக்கும் அம்சங்களில் ஓர் அம்சமான இந்த ''ஆசிரிய தீபம்'' என்னும் சஞ்சிகை வருடாவருடம் வெளிவருவது குறித்து மகிழ்வெய்துவதோடு எமது வளமான வருங்காலச் சந்ததியின் வளமான வழிகாட்டிகளை உருவாக்கும் ஆசான்களுக்கு இவ் ஆசிச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**திரு. ஆர். துரைராசசிங்கம்**
இணைப்பு அதிகாரி

பிரதேச கல்வி அலுவலகம்
வாழைச்சேனை.

## தீபம் சுடர்விட முன் …………

இன்றைய சிறார்களே நாளைய பிரஜைகள் என்பதை நினைவில் கொண்டு, அவர்களின் நலன் கருதி உழைத்து நிற்கும் ஆசிரியர்களை கருத்தில் எடுத்து உலகளாவிய ரீதியில் ஆசிரிய தினமானது கொண்டாடப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. அவ்வகையில் வாழைச்சேனை கல்விக் கோட்டமானது வருடந்தோறும் இத்தினத்தை தவறாது கொண்டாடி வருகின்றது.

இவ்விழாவைச் சிறப்பிக்குமுகமாக ''ஆசிரிய தீபம்'' எனும் சஞ்சிகையானது மூன்றாவது இதழாக வெளிவருவதையிட்டு பெருமையும் மகிழ்சியும் அடைகின்றேன்.

இத்தீபம் சுடர்விட குறுங்கதைகள், கட்டுரைகள், கவிதைகள், பேட்டி நிகழ்ச்சி, துணுக்குகள் மற்றும் இன்னோரன்ன பல ஆக்கங்களும், இவற்றோடு ஆசிச் செய்திகளும், வாழ்த்துச் செய்திகளும் இத்தீபச் சுடரை பிரகாசிக்கச் செய்கின்றன.

மேலும், குறிப்பிட்ட காலத்திற்குப்பின் கிடைக்கப்பெற்ற ஆக்கங்களை பிரசுரத்திற்காக ஏற்றுக்கொள்ள முடியாதவிடத்தும், நூலுக்கான ஆக்கங்களை திருத்தியும் ஏற்றவிடத்து குறைப்புச் செய்தும், குறிப்பாக எல்லோருக்குமான ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்ததினை அனைத்து ஆசிரிய பெருந்தகைகளும் ஏற்றுக்கொள்வர் என்றே நம்புகின்றேன். அத்துடன் குறுகியகால எல்லைக்குள் நூலுக்கான ஆக்கங்களை அளித்த யாவரும் இவ்வேளையில் போற்றுதற்குரியவர்களே.

இத்தீபமானது எதிர்வரும் காலங்களிலும் புதுப்பொலிவுடன் பிரகாசிக்க இறைவனை வேண்டி இந்நூல் வெளிவரும் வரை என்கூடவே இருந்து என்னையும் என் குழாத்தையும் வழிநடத்திய ''சக்தி''க்கும் நன்றிகூறி, உங்கள் முன் இவ் ஆசிரிய தீபத்தை பிரகாசிக்கச் செய்கின்றேன்.

இவ்வண்,

**திரு. சாமித்தம்பி - மோகனதாஸ்**

*மலராசிரியர்.*

# கோறளைப்பற்றுப் பிரதேச அதிபர் / ஆசிரியர் விபரம்

## மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி

திரு. நா. கதிர்காமத்தம்பி - அதிபர்
திரு. நா. குணலிங்கம்
திரு.ச. சிவநேசராசா
திரு. ச. மகேஸ்வரன்
திரு. ந. பத்மநாதன்
திரு. த. தர்மபாலன்
திரு. த. அகிலன்
திரு. நா. மகாலிங்கம்
திரு. அ. ஜெயஜீவன்
திரு. பா. கணேசமூர்த்தி
திரு. ந. வெ. அருள்சீலன்
திரு. சி. முருகவேள்
திரு. தே. இளங்கோ
திரு. எ. றே. செலர்
திரு. யோ. கி. கொன்ஸ்ரன்ரைன்
திரு. த. பிரபாநந்தன்
திரு. மு. ஜமுனானந்தா
திருமதி. ப. கனகசிங்கம்
திருமதி. பு. அழகரெட்ணம்
செல்வி. சீ. லோகேஸ்வரி
செல்வி. மு. சுகுணா
திருமதி. சி. குணலிங்கம்
திருமதி. கி. மாரிமுத்து
திருமதி. ரா. செல்வராசா
திருமதி. பா. வசந்தகுமார்
திருமதி. சா. நிமலன்
திருமதி. பா. வாமதேவன்
திருமதி. க. கணேசன்
திருமதி. பூ. பாலசுப்பிரமணியம்
திருமதி. பூ. சிவநாதன்
திருமதி. சு. ராஜரெட்ணம்
செல்வி. மு. இந்திராதேவி
திருமதி. ச. விஜயரெட்ணம்
திருமதி. இ. மகாலிங்கம்
திருமதி. அ. சிவநேசராசா
செல்வி. த. பரமேஸ்வரி
செல்வி. க. தவமலர்
அருட்சகோதரி மேரி றஞ்சனா
திருமதி. ல. நடேசன்
திருமதி. சி. சோமநாதன்
செல்வி. கு. சுபத்திரா
செல்வி. பெ. ரஜினி
திருமதி. யோ. வர்ணகுலசிங்கம்
செல்வி. சி. அனட்

## மட்/கிரான் மகா வித்தியாலயம்

திரு. த. சிவநாதன் - அதிபர்
திரு. கா. அருமைராசா
திரு. கா. சுப்பிரமணியம்
திரு. மு. உருத்திரமூர்த்தி
திரு. ல. அ. ராஜரெட்ணம்
திரு. நீ. ஆனந்தன்
திருமதி. பூ. செபஸ்தியான்
செல்வி. பி. ஜீ. ஜெயவீரரெட்ணம்
திருமதி. கௌ. தர்மதாஸ்
செல்வி. கௌ. கோபாலப்பிள்ளை
திருமதி. சோ. சுந்தரம்
திருமதி. ஆர். எம். தேவகுமார்
செல்வி. அ. கமலாதேவி
செல்வி. இ. பத்மராணி
செல்வி. ஏ. அரியமலர்
செல்வி. வ. கருணையம்மா
செல்வி. ஞா. விமலாதேவி
செல்வி. பொ. சிவமதி
திருமதி. வீ. அனந்தராஜா
செல்வி. மே. இராசநாதன்
திருமதி. பி. பேரின்பநாயகம்
செல்வி. ந. யோகராணி
செல்வி. யோ. முத்துக்குமார்
செல்வி. ச. ராஜேஸ்வரி

## மட்/கல்குடா நாமகள் வித்தியாலயம்

திரு. சோ. அழகரெட்ணம் - அதிபர்
திரு. வீ. அரசரெத்தினம்
திரு. வே. கார்த்திகேசு
திரு. க. பாலச்சந்திரன்
திரு. க. பரமானந்தராஜா
திரு. ரீ. அருணகிரிநாதன்
திருமதி. தி. தேவரெட்ணம்
திருமதி. மே. ராஜகோபால்
செல்வி. சு. யோகமலர்
திருமதி. ஜெ. ஆனந்தசபாவதி
திருமதி. லி. பரமானந்தராஜா
திருமதி. ஹே. சதாசிவம்

## மட்/கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயம்

திரு. க. தவராஜா - அதிபர்
திரு. வ. மகேஸ்வரன்
திரு. எஸ். கே. விஜயநாதன்
திரு. சி. சிவாநந்தன்
திரு. பூ. ரவீந்திரன்
திரு. எம். விவேகாநந்தன்
திருமதி. நா. பிரான்சிஸ்
செல்வி. டெ. ஜெயவீரரெட்ணம்
திருமதி. அ. சௌந்தரராஜன்
திருமதி. க. மகேஸ்வரன்
திருமதி. எம். பவானந்தலிங்கம்
செல்வி. வை. தியாகராஜா
திருமதி. பீ. அருள்ராஜா
செல்வி. பு. மோகனகௌரி
திருமதி. எஸ். அமுதா

## மட்/கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலயம்

திரு. சீ. பஞ்சாட்சரம் - அதிபர்
திரு. பா. இராசையா
திரு. பூ. தர்மபாலன்
திரு. மா. தவராஜா
திரு. எஸ். கலையரசன்
திரு. அ. அருளேந்திரன்
திரு. ந. பாஸ்கரன்
திரு. எம். ஜேசுதாசன்
திருமதி. சௌ. அருளேந்திரன்
திருமதி. க. லோகிதராஜா
திருமதி. மோ. சுங்கேஸ்வரன்
திருமதி. நி. சுந்தரம்
திருமதி. கி. ஜெயஜீவன்
செல்வி. என். எம். ஜெயமாலா
செல்வி. சி. ரதிதேவி
செல்வி. க. தவராணி
செல்வி. ம. வாசுகி
செல்வி, எஸ். தர்ம ஈஸ்வரி
திரு. க. வேலாயுதம்

## மட்/முறக்கொட்டான்சேனை இராமகிஸ்ன மிசன் வித்தியாலயம்

திரு. த. சுதாகர் - அதிபர்
திரு. த. ரமேஸ்
திரு. சு. சுப்பிரமணியம்
திரு. மு. மகேந்திரன்
திரு. கே. எம். மகேஸ்வரன்
திரு. பா. உதயகுமார்
திரு. க. குலேந்திரன்
திரு. கே, சுந்தரலிங்கம்
திருமதி. நி. ஜெயரஞ்சினி
செல்வி. ப. சிவசுப்பிரமணியம்
செல்வி. வே. சிவயோகநாயகி
திருமதி. சா. சுப்பிரமணியம்
திருமதி. பீ. குணசீலன்
செல்வி. வீ. சாந்தம்
திருமதி. ம. யோகராசா
செல்வி. இ. தனலெட்சுமி
திருமதி. எஸ். மாதுளகுமரன்
செல்வி. எஸ். சுபத்திரா
செல்வி. ரி. பவானி
செல்வி. பி. தர்மராஜா

## மட் பேத்தாழை விபுலானந்தா வித்தியாலயம்

திருமதி ஜீ. தம்பிப்பிள்ளை - அதிபர்
திரு. சா. மோகனதாஸ்
திரு. த. சந்திரலிங்கம்
திரு. கே. லோகிதராஜா
திரு. கே. தங்கராஜா
திருமதி. சி. சந்திரா
திருமதி. த. தேவராஜா
திருமதி. ம. உமாபதிசிவம்
திருமதி எம். அற்புதராஜா
திருமதி. ப. ராஜகோபால்
திருமதி. கீ. லோகநாதன்
செல்வி. சி. தவமலர்
திருமதி. தெ. ராஜ்மோகன்
திருமதி. ஜே. சந்திரலிங்கம்
திருமதி. எம். புஸ்பராஜ்
திருமதி. சி. ரெட்ணசிங்கம்
திருமதி. க. அகிலன்
திருமதி. சு. மோகனதாஸ்
செல்வி. பி. சாவித்திரி

## மட்/புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயம்

திரு. பெ. புண்ணியமூர்த்தி - அதிபர்
திரு. எம். சி. பற்றசன்
திருமதி. சோ. சந்திரமோகன்
திருமதி. சு. கார்த்திகேசு
திருமதி. சோ. மகேந்திரநாதன்
செல்வி. ம. பைங்கிளி
செல்வி ம. வசந்தி
செல்வி. க. இராஜமேனகா
திருமதி. அ. சுந்தரமூர்த்தி
செல்வி. ஜீ. இ. அவுட்ஸ்கோன்
திருமதி. தி. ஜெயசேகர்
திருமதி. ஜெ. யோகானந்தன்
திருமதி. அ. ஜெ. கிறிஸ்ரோ றெக்ஸ்
திருமதி. எஸ். ஜெயானந்தமூர்த்தி
திருமதி. சௌ. நடேசன்
செல்வி, கே. புஸ்பலதா
திருமதி. சு. பிரபாகரன்
திருமதி. வி. பற்றிக்

## மட்/சந்திவெளி சித்தி விநாயகர் வித்தியாலயம்

திரு. க. கிருஷ்ணபிள்ளை - அதிபர் ✓
திரு. ம. சிவசுந்தரம்
திரு. ஏ. மகேசன் ✓
திரு. து. முரளீதரன்
திருமதி. சோ. செல்லையா ✓
செல்வி. க. றோகினி ✓
திருமதி. க. ஆசிர்வாதம்
திருமதி. இ. சண்முகதாஸ்
திருமதி. த. தாமோதரம் ✓
செல்வி. சா. நளாயினி ✓
செல்வி. எம். கமலநாயகி ✓
செல்வி. ஏ. எல். ஜுட்டி பிரியா
செல்வி. ஜெ. செபஸ்தியான்
செல்வி. ச. நிர்மலா
செல்வி. மு. மின்னல்கொடி ✓
செல்வி. எஸ். பரமேஸ்வரி ✓
செல்வி. இ. நவறாஜினி

## மட்/மீராவோடை அ. த. க. பாடசாலை

திரு. க. சிமியோன் - அதிபர்
திரு. மு. தவராசா
திரு. சே. ஜெயானந்தமூர்த்தி
செல்வி. ச. தமயந்தி
திருமதி. உ. பிறேமலவன்
செல்வி. மு. நிர்மலா
செல்வி. ஆ. தவமணி

## மட்/வெம்பு அ. த. க. பாடசாலை

திருமதி. ச. இராசையா - அதிபர்
திரு. த. கணபதிப்பிள்ளை
திருமதி. த. சுகுமாரன்
திருமதி. வி. சந்திரபால
திருமதி. பி. சுரேந்திரா
செல்வி. இ. சாரதாதேவி
திரு. எஸ். பொன்னுத்துரை

## மட்/கல்குடா சிங்கள கலவன் பாடசாலை

ஜெ. சி. பீற்றஸ்

## மட்/திகிலிவெட்டை அ. த. க. பாடசாலை

திரு. சி. குழந்தைவேல் - அதிபர்
திரு. சீ. சண்முகநாதன்
திரு. நா. உருத்திரேஸ்வரன்
செல்வி. த. ரஞ்சிதமணி

## மட்/கல்மடு விவேகானந்த வித்தியாலயம்

திரு. சீ. செல்வராஜா - அதிபர்
திரு. க. சோமநாதன்
திரு. த. வை. சுப்பிரமணியம்
திருமதி. த. தர்மராசா
செல்வி. க. நிர்மலாதேவி

## மட்/கோரகல்லிமடு அ. த. க. பாடசாலை

திருமதி. மா. கலாமோகன் - அதிபர்
திருமதி. ச. சிவரெத்தினம்
செல்வி. ச. நவமணி
திருமதி. நி. சுப்பிரமணியம்
செல்வி. சி. யோகமலர்
திருமதி. எம். ஜெயராஜன்
செல்வி. பூ. கலாபதி
செல்வி. வே. கருணாவதி
செல்வி. ஆ. சந்திராவதி
செல்வி. பூ. தெய்வமணி
செல்வி. எஸ். எல். சுபாங்கினி

## மட்/நாசிவந்தீவு அ. த. க. பாடசாலை

திரு. க. சதாசிவம் - அதிபர்
திரு. க. சித்தரஞ்சன்
செல்வி. த. அந்தோனியம்மா
செல்வி. ச. சத்தியலெட்சுமி
செல்வி. த. கலைச்செல்வி

## மட்/சுங்கான்கேணி அ. த. க, பாடசாலை

திரு. த. இதயராஜா - அதிபர்
திரு. இ. ரவிச்சந்திரன்
திரு. ஏ. ஜே. என். இக்னேசியஸ்
திருமதி. றே. இதயராஜா
திருமதி. வா. நாகராசா

## மட்/கிரான் விவேகானந்தா வித்தியாலயம்

திருமதி. ச. கிருஷ்ணப்பிள்ளை - அதிபர்
திரு. ஆர். ஜீவரெட்ணம்
செல்வி. மு. பாக்கியம்
திருமதி. சு. ஞானப்பிரகாசம்
திருமதி. தே. பாக்கியராஜா
திருமதி. சா. சௌந்தரராஜன்
திருமதி. சி. தவராஜா
செல்வி. க. சாந்தி
செல்வி. பொ. லலிதா
திருமதி. சீ. தவசீலன்
செல்வி. பூ. இராசமணி
திருமதி. தெ. சிவஞானம்
செல்வி. வை. என். டயஸ்

## மட்/கோறளங்கேணி அ. த. க. பாடசாலை

திரு. வே. ஈஸ்வரமூர்த்தி - அதிபர்
திருமதி. கோ. ஆபிரகாம்
செல்வி. க. கலைச்செல்வி
திருமதி. சா. ரமேஸ்

## மட்/பாலையடித்தோணா ஸ்ரீ முருகன் வித்தியாலயம்

திருமதி. மோ. சிவப்பிரகாசம் - அதிபர்
திருமதி. மே, சாமித்தம்பி

## மட்/பூலாக்காடு அ. த. க. பாடசாலை

திரு. கா. கிருஷ்ணப்பிள்ளை - அதிபர்

## மட்/புலிபாய்ந்த கல்

திரு. ஐ. மனோகரதாஸ் - அதிபர்
திரு. தி. விஜிதன்

## மட்/வாகனேரி கோகுலம் வித்தியாலயம்

திரு. சா. பாலச்சந்திரன்
திரு. க. கதிர்காமநாதன்

## மட்/கருங்காலிச்சோலை

திரு. மு. தேவரெட்ணம் - அதிபர்
திருமதி. க. துரைராஜா
திருமதி. பு. கங்கேஸ்வரன்

## மட்/விநாயகபுரம் விநாயகர் வித்தியாலயம்

திருமதி. ஜீ. ஸ்ரீஸ்கந்தராஜா - அதிபர்
திருமதி. ச. பேரின்பராஜா
திருமதி. வ. நிமலன்
திருமதி. த. யோகநாதன்

## மட்/கோறளங்கேணி திருமகள் வித்தியாலயம்

திரு. வ. மாணிக்கவேல்

## மட்/முருக்கன்தீவு சிவசக்தி வித்தியாலயம்

செல்வி. த. தவமலர்

## மட்/முறுத்தானை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்

திரு. சி. பத்தினியன்

## மட்/மயிலங்கரச்சை மலைமகள் வித்தியாலயம்

திரு. செ. மகேந்திரன்

## மட்/பறங்கியாமடு பாரதி வித்தியாலயம்

திருமதி. ப. நவசிவாயம் திரு. கு. கமலசேகரன்

## மட்/சிறுதேன்கல் சித்தி விநாயகர் வித்தியாலயம்

திருமதி. பே. மனோகரதாஸ்

## மட்/தரவை ஸ்ரீ கலைவாணி வித்தியாலயம்

திருமதி. ரு. ஞானபாஸ்கரன்

## மட்/குடும்பிமலை குமரன் வித்தியாலயம்

திரு. க. இரத்தினசிங்கம்

*இத்தகவல் 1995 ஜுன் 01 திகதியன்று ஆசிரியர் குழாத்திலுள்ள ஆசிரியர் எண்ணிக்கை அடிப்படையிலே எடுக்கப்பட்டது.*

---

*நல்ல ஆசிரியர் ஒருவர் ஆயிரம் போதகர்களுக்குச் சமன். நாட்டின் இளைஞர்களே செழிப்பின் பாதுகாவலர்கள்.*

---

# ஒளியை நோக்கி

சர்வ வல்லமையுள்ள இறைவனின் கிருபையால் இவ்வுலகம் படைக்கப்பட்டதற்கும், இவ்வுலகை நல்வழிப்படுத்த அவ்விறைவனே குருவாய் வந்ததற்கும் பல ஆதாரங்கள் உண்டு. இறைவனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட அந்த குருவானவர் பணியானது தற்பொழுது ஆசிரியர்களினால் தொடரப்பட்டு வருகின்றதனால்த்தான்அப்பணியின்அவசியம் உணரப்பட்டதும், அதனைத்தொடர்ந்து ஆசிரியர்கள் மக்களால் மதிக்கப்பட்டதும் கண்கூடு ஆகின்றது.

எப்பொருளைப் படைத்தவனும் அப்பொருளைப் பற்றிய விளக்கத்திற்கும், அப்பொருளின் நீண்டகால நிலவுகைக்குமாக முதலில் குருவாக பணியாற்றிப் பின்னர் வெவ்வேறு பணியில் ஈடுபடுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகும். இவ்வுலக நீடிப்பும் அப்படியே ஆசிரியர்களில் தங்கியுள்ளது.

ஆசிரியர்கள் இல்லாத உலகம் சூரியன் இல்லாத உலகத்திற்கு ஒப்பாகும். எப்பொழுது சூரியன் சூரிய ஒளியைப் பரப்புவதில்லையோ அப்பொழுது சூரியன் இருக்கும் இடமும் யாருக்கும் தெரிவதில்லை. எவ்வாசிரியர் ஞான ஒளியை அல்லது அறிவொளியைப் பரப்புவதில்லையோ அவ்வாசிரியன் இருக்கும் இடமும் யாருக்கும் தெரிவதில்லை. சூரியன் சூரியனாக இருப்பது ஒளியைப் பரப்புவதினாலாகும் அதேபோல ஆசிரியனும் ஆசிரியனாக இருப்பது ஞான ஒளியை பரப்புவதினாலாகும். எந்தவொரு ஆசிரியனும் தனது பரந்த செயற்பங்குகளை செய்யத்தவறும் பட்சத்தில் அவனும் ஒளியற்ற சூரியனுக்கு ஒப்பானவன் ஆகின்றான்.

எமது உலகம் சுருங்கிக்கொண்டிருக்கும் அதேவேளையில் எமது சமுதாயம் விரிவடைந்து பிரபஞ்சச் சமுதாயமாக மாற்றமடைந்து கொண்டிருக்கின்றது. எமது பிரதேசச் சமுதாயம் தன்னிறைவு அடைவதற்கு பதிலாக பிரபஞ்சச் சமுதாயம் தன்னிறைவு அடையவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு சமுதாயத் தலைவர்களின் பங்களிப்புக்கள் இன்றியமையாதவைகளாகும்.

ஆசிரியர் ஒரு சமுதாயத் தலைவர் என்ற வகையில் சகல மக்களையும் அஞ்ஞான இருளிலிருந்து மீட்டு விஞ்ஞான ஒளியின் பால் கொண்டு செல்கின்றவராகவும் புதிய உலகத்தை அறிமுகஞ் செய்வதற்கு தேவையான வழிகாட்டலை வழங்குவதற்கு தன்னையே அர்ப்பணித்து கருமமாற்றக்கூடிய முன்னோடியாகவும் இருக்கின்றார். அழிவை நோக்கி சென்றுகொண்டிருக்கும் இவ்வுலகைக் காக்கும் பெரும் பொறுப்பு ஆசிரியர்களிடமே இருக்கின்றது. சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு பிரசையினுடைய மனப்பாங்குகளும் ஆசிரியர்களினூடாகவே கட்டியெழுப்பப்படுகின்றன. ஆகவே ஏதோ ஒரு சமுதாயம் தீங்கிழைக்கின்றதென்றால் அதற்கு ஏதோ ஒரு ஆசிரியன் அல்லது ஆசிரியர்கள் வித்திட்டார்கள். எனலாம்.

அபிவிருத்தி தொடர்பாக அன்று கல்வியிலாளர்கள் இட்ட வித்தின் விளைவுகள் இன்று வரையறைக்குட்பட்ட இயற்கை வளங்கள் தீர்ந்து போவதும், சுற்றாடல் மாசடைவதும், வீண் கலவரங்கள், போர்கள் போன்ற அழிவுச் செயல்கள் ஏற்படுவதுமாகப் பரிணமித்துள்ளன.

நுகர்வுச் சமுதாயத்திற்கு பதிலாக தர்க்க ரீதியான விவேகமுடைய, கூட்டான ஒத்துழைப்புடைய, சிக்கனமுள்ள, தேவையற்ற வீண்விரயங்களை தவிர்க்கக்கூடிய, இயற்கை வளங்களிலிருந்து உச்சப்பயனையடையக்

கூடிய, மனிதம் நிலைத்திருப்பதற்கு தேவை யான அடிப்படைத் தேவைகளை ஒவ்வொரு வருக்கும் பெற்றுக்கொடுக்கும் சமுதாயம் உரு வாக்கப்படவேண்டும். அதற்கான வித்தினை முதலில் இடுபவன் ஆசிரியனாகத்தான் இருக்க முடியும்.

இவ்வுலகம் தற்பொழுது ஆசிரியர் கையில் இருக்கின்றது. இதனை ஒளியின்பால் கொண்டு செல்ல ஆறு மணித்தியாலம் கடமையாற்றும் ஆசிரியர்களால் முடியாது மாறாக அயராது கடமையாற்றும் ஆசிரிய தீபங்களால் மாத் திரமே முடியும். என்று கூறினால் அது மிகை யாகாது. ஆசிரியன் மனம் வைத்தால் புதிய உலகை ஆக்கமுடியும். அவனே அதனை அழிக் கவும் முடியும் ஆக்கமா! அழிவா! இதுவே ஆசிரியனின் இன்றைய நிலைப்பாடு!

— முற்றும் —


**திரு. த. தர்மபாலன்**

மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி,

வாழைச்சேனை.


- கல்வி எனும் விதைகளைக் கணிசமான ஆழத்தில் விதைக்காத வரையில் அது ஆன்மாவில் எந்நாளும் முளைவிடாத வெறும் விதைகளாகவே இருந்து வரும்.

- மலை, இடம் மாறிவிட்டது என்பதைக்கூட நம்பலாம். ஆனால் மனிதன் குணம் மாறிவிட்டான் என்பதைச் சுலபத்தில் நம்பிவிட முடியாது.

- புன்சிரிப்பு என்பது குழந்தையும் புரிந்துகொள்ளக்கூடிய பாஷை.

- கிழவனுடைய அறிவு முதிர்ச்சியும், நடு வயதினர்க்குள்ள மனத்திடமும், இளைஞருடைய உற்சாகமும், குழந்தைகளின் இதயமும் தேவர்களே!

  (பாரதியார்)

- மாத்திரைகளைக் கண்டுபிடித்தவன் புத்திசாலி, அவைகளுக்கு மேலே சர்க்கரை பூசினானே அவன் மேதை.

  (ப்ளுபர்டு ப்ரிஃபஸ்)

- காது கொடுத்து கேட்பதில் துரிதமாயிரு, பேசுவதில் நிதானமாய் இரு சினங் கொள்வதில் மெதுவாயிரு.

  (ஜேம்ஸ்)

சிறுகதை

# இலட்சியம் ஈடேறுகின்றது

"பிள்ள வாசுகி, பிள்ள வாசுகி" என்ற அன்னையின் குரலில் விழித்துக்கொண்ட வாசுகி சுவரில் தொங்கிக் கொண்டிருந்த சுவர் மணிக்கூட்டின் மேல் விழிபுதைக்கின்றாள். மணி ஐந்தரையைக் காட்டி நின்றது. பாடசாலையில் நடைபெற இருக்கும் ஆசிரியர் தின விழா ஞாபகம் வந்ததும் வாசுகி படுக்கையைவிட்டு எழுந்துவிட்டாள். தனது கடமைகளை இயன்றளவு விரைவாக முடித்துக்கொண்டு, பாடசாலைக்குச் செல்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள் "அக்கா, அக்கா" என்ற தங்கையின் குரலைக் கேட்டும்...... என்றாள் அவள். "நீங்கள் இன்றைக்கு கட்டுவதற்கு பட்டுச்சாறி விளவுஸ் எல்லாம் எடுத்து வைத்திருக்கின்றேன், கட்டும்போது கூப்பிடுங்கள்" என்ற தங்கையின் வார்த்தை வாசுகியின் மனதை மேலும் வேதனைப்படுத்தியது. "கடவுளே என்னால் எந்த வேலையையும் தனியாக செய்யமுடியாத நிலைக்கு ஆக்கிவிட்டு, என்னை அணு அணுவாக ஏன்? இப்படி வதைக்கின்றாயோ!" என்று தனது மனதிற்குள் இன்றுமட்டுமல்ல என்று கால் பறிபோனதோ, அன்றில் இருந்து இந்த வார்த்தைகளை முணுமுணுக்கும் வாசுகி. தங்கை, அம்மா ஆகிய இருவரின் உதவியுடன் தன்னை அலங்கரித்துக்கொண்டு வெளியில் வந்தவள். அன்னையின் வழியனுப்பலுடன் பாடசாலை நோக்கிப் புறப்பட்டாள்.

தனது மகளின் உருவை உச்சியில் இருந்து உள்ளங்கால் வரை நோக்கும்போது, அவளின் விழிகள், பறிபோன காலை நோக்கி வட்டமிட்டன. வட்டணிச்ச முகமும், கரிய நீண்ட கூந்தலும், எனது மகளின் அழகை பெருகூட்டியும் கூட வறுமையின் பிடியில் சிக்கியதால், எனது மகளை ஊனம் உற்றவளாக பார்க்கின்றேனே. வாழ்க்கை பற்றிப் பேசும் போது, வாழ்க்கை என் காலுடன் போய் விட்டது என்று சொல்கிறாளே என்னதான் குறையிருக்கு, எந்த விஷயத்திலும் வாசுகி கெட்டிக்காரிதான். எனது ஆசை நிறைவேறி விட்டது. "சிங்கத்தின் கால் பழுதுபட்டாலும் சீற்றம் குறையாது." என்பது வாசுகியின் நடத்தையில் வெளிப்படுகிறதே. இவ்வாறு அன்னம் தனது மனக்குமுறலை தனக்குள்ளே சுழலவிட்டுக் கொண்டிருந்தவளின் நிலையை மாற்றிவிடுகின்றது, சின்ன மகளின் அழைப்பு. அழைப்புடன் அவசரமாக வெளிக்கிட்ட அன்னம் தனது சின்ன மகளுடன் பாடசாலை நோக்கி புறப்பட்டாள்.

பாடசாலை விழாக்கோலம் பூண்டிருந்தது. அலங்காரத் தோரணங்கள் வருபவர்களை வரவேற்பது போல் அசைந்தாடிக் கொண்டிருந்தன. அந்த தோரணங்களின் வரவேற்புடன் வாசுகி நுழைந்தாள். மாணவர்களும், ஆசிரியர்களும் சுறுசுறுப்புடன் பல்வேறு வேலைகளில் ஈடுபட்டு இருப்பதை கண்ணுற்றாள். தன்னால் இவ்வாறான வேலைகளை செய்யமுடியாதே, என்று தன்னைத் தாழ்த்திக் கொள்கிறாள். வாசுகியைக் கண்ட அதிபர் அவள்பற்றி, "எந்தவேலையிலும் சலிப்படையமாட்டாள் ஆசிரியரின் பண்புகள் நிறையப்பெற்றவள். மாணவர்களையும் ஆசிரியர்களையும் கவரும் விதத்தில் நடந்துகொள்ளும் தன்மை கொண்டவள். சிறந்த ஆளுமையுடையவள்." என மனதில் நினைத்துக்கொண்டு வாசுகியை வரவேற்றார். வாசுகி "வணக்கம் சேர்" என, அதிபரும் பதிலுக்கு வணக்கம் கூறிவிட்டு, வாசுகியின் பொறுப்புக்குரிய இடத்தையும் காட்டிச்சென்றார். தனது பொறுப்பை ஏற்ற வாசுகி அவ்விடத்தில் அமர்ந்துகொண்டு. தனது பொறுப்பில் கண்ணியம் கொண்டவளாக இருந்தாலும், அன்றைய சந்தர்ப்பம் அவளின் கடந்தகால நாட்களை இரை மீட்டுகின்றது.

வாசுகி சிறுவயதில் இருந்தே பிடிவாதம் கொண்டவள் மட்டுமல்ல, இவ்வாறான விழா என்றால்அவளின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. எல்லாவேலைகளிலும் தனது பங்கை பகிர்ந்து கொள்வாள். இவ்வாறான மாணவர்களை இன்று காணும்போது, வெந்தபுண்ணில் வேல் பாய்ந்ததுபோல் தோன்றுகின்றது. தாவணி பாவாடையுடன் நடமாடும் மாணவர்களைப் பார்த்து, இவ்வாறான உடையில் ஆசைப் பட்டதே வாசுகியின் இந்த நிலைக்குக் காரணம். வாசுகி 10ஆம் ஆண்டில் கல்வி பயிலும்போது, தனது தந்தை வன்செயலுக்கு பலியானார். இதனால் வாசுகியின் குடும்ப நிலை வறுமைக்குள் தள்ளப்பட்டது. வாசுகியின் கெட்டித்தனத்தை அறிந்த அன்னம் அவளின் கல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை. தனது மகளை படிப்பித்து வேலை பார்க்க வைக்கவேண்டும் என அன்னமும், கணவரும் ஆசைப்பட்டதை நிறைவேற்ற அயராது உழைத்தாள். வாசுகி தனது பாடசாலையில் நடைபெறப்போகும் ஆசிரியர் தின விழாவிற்கு தாவணி பாவாடை புதிதாக வாங்கித்தரவேண்டும் என அடம்பிடித்தாள். எவ்வளவு சொல்லியும் கேட்காத மகளை, தனது வழமையான தொழிலான விறகு எடுக்க அழைத்துச்சென்றாள், ஆனால் நடந்தது வேறு, வாசுகியின் கால் மிதிவெடியில் சிக்கிச்சிதைந்தது. ஆனால் அன்னம் இதைக் கண்டு தனது இலட்சியத்தைக் கைவிடவில்லை. மகளின் காலை சுகமாக்கியதுடன். பெரியாரின் உதவியுடன் தொடர்ந்தும் கல்வி கற்க அனுப்பினாள். வாசுகி படித்து ஆசிரியர்களுக்கான போட்டிப்பரீட்சையில் தேர்ந்து எடுக்கப்பட்டு பயிலுனர் ஆசிரியராக இப் பாடசாலையில் பதவியேற்றாள். இதுதான் பதவியேற்றபின் முதல்முறையாக நடைபெறும் ஆசிரியர் தினவிழா இந்த நிலைக்கு கொண்டுவந்த தனது தாயின் முயற்சியை எண்ணி தனக்குள் வியந்துகொள்கிறாள், இவ்வாறு கடந்தகால நிகழ்வை புரட்டிய வாசுகியின் சிந்தனையைக் கலைத்தது அதிபரின் வேண்டுகோள். ''ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் விழாவிற்காக ஒழுங்குசெய்யப் பட்டிருக்கும் மண்டபத்தினுள் வந்து அமரவும்'' என அழைத்தார். அனைவரும் மண்டபத்தை நோக்கி விரைந்துகொண்டிருந்தனர், வாசுகியும் ஆமைவேகத்தில் நடந்து வரும்போதே அங்கும் இங்கும் கண்ணை சுழல விட்டாள். மண்டபம் அதிகாரிகள், ஊர்மக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் என பல தரத்தினராலும் நிறைந்து காணப்பட்டது.

எல்லோரும் அமரவும், நிகழ்ச்சிகள் அதிபர் தலைமையில் ஆரம்பமாகவும் சரியாக இருந்தது. ஆசிரியர்களின் மகத்துவம் பற்றியும், அவர்களின் பணி பண்புகள் பற்றியும், ஆசிரியத் தொழிலின் புனிதத்தன்மை பற்றியும் பலராலும் பலவாறு உரைக்கப்பட்டது. கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. ஆசிரியர்களின் நல்லசெயல், நடத்தை என்பவற்றை பாராட்டி பரிசில்கள் வழங்கப்பட்டது. வாசுகியின் பெயர் ஒலிபெருக்கியில் ஒலிபரப்பப் பட்டது. லீவு எடுக்காத ஆசிரியர் புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகமான மாணவர்கள் தேர்ச்சியடைய உழைத்த ஆசிரியர், விசேட உதவி தேவைப்படும் மாணவர்களை ஊக்குவிப்பதில் சிறந்த ஆசிரியர் என புகழ்ந்தும், பாராட்டியும் பல பரிசில்களைப் பெற்றுக் கொண்டாள். வாசுகியின் மனவேதனை ஒரு புறம், மகிழ்ச்சி மறுபுறமாக பரிசில்களைப் பெற்றுக்கொள்ளும்போது''இவைகள் அனைத்தும் என்னால் கிடைத்த புகழ் அல்ல. என் இரு தெய்வங்களுக்கும் உரியது. எனது அன்னைக்கும். எனக்கு உதவிசெய்த பெரியாருக்கும் உரிய புகழாரங்கள்.'' என நினைத்துக் கொண்டு பரிசில்களைப் பெற்றுக்கொள்கிறாள். இதைக்கண்ட அன்னம் ''எனது மகளின் திறமையின் அளவு மட்டிடமுடியாதவை அவளின் முயற்சிதான் இவை எல்லாவற்றுக்கும் காரணம்'' என நினைத்து மனம் பூரித்து ஆனந்தக் கண்ணீர் விடும் வேளையில் மண்டபத்தை விட்டு அனைவரும் கலைவதை கண்ணுற்றாள்.

— முற்றும் —

செல்வி. பரமேஸ்வரி சாமித்தம்பி

மட் / சந்திவெளி சி. வி. வி.

# HOW TO HELP PUPILS TO LEARN ENGLISH

There is No Royal road to teaching. Yet certain methods should be followed if the goods are to be delivered. The following would be useful to the teacher and to the pupils.

a. Helping the pupils to develop the faculty of thinking.

b. Developing the ability to receive aptly and to reproduce what is heard.

c. Developing the skill of listening.

d. Facilitate reading.

e. Develop the ability to write.

Pupils should be able to listen attentively if they are to master the skills of speaking, reading and writing.

Usally pupils are confronted with the difficulty of reading because they fail to listen attentively. Pupils should listen to the teacher before they attempt to speak. Whether it is speech, reading or writing, pupils should listen to what is said very attentively. Listening involves correct reception, internalising what is said and reproduce what is said.

Before one attempts to teach reading, it would be useful if the pupils are helped to say aloud what is to be read. By doing so the pupils will be familiar with the material that is found in the reading material.

After the pupils are able to utter what is found in the reading material the pupils are asked to look at the book while the teacher reads aloud.

The pupils then read after the teacher sentence by sentence. Long sentences could be read in parts. For example. The men and boys go out into the jungle with their dogs. This sentence could be broken up into sense groups.

Men and boys, go out into the jungle, with their dogs. The pupils could read this sentence, thus, with their dogs, go out into the jungle, men and boys.

First the pupils read the last part of the sentence. secondly the pupils read the part of the sentence wihch is close to the last part of the sentence. Thus, go out into the jungle with their dogs. Finally the pupils read the entire sentence.

After the sentence is read aloud, pupils read the sentence silently. It would be useful to ask the pupils to read each sentence several times.

After the pupils are able to read, the pupils learn the spelling of the words. Learning the spelling of words facilitates writing.

**By Mr. Balendra Rasaiah**
Bt/Kinnaiyadi Saraswathy Vidyalaya,
VALAICHENAI

# கற்பித்தல் - கற்றல் துணைச்சாதனங்களும் அவற்றின் பயன்பாடும்

பாடசாலைகளில் நடைபெறும் கற்பித்தல் - கற்றல் செயற்பாடுகள் இன்று முன்னரிலும் பார்க்க வேறுபட்டுக் காணப்படுகின்றன. அவ்வேறுபாடுகளுக்கமைய தற்போதைய கற்பித்தல் - கற்றல் செயற்பாடுகளில் கற்பித்தல் சாதனங்களின் பயன்பாடு முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகக் கருதப்படுகின்றது.

கற்றல் அனுபவங்களைப் பெறும்போது பிள்ளைகள் காதால் கேட்பதன்மூலம் 30% மான அறிவையும், கண்ணால் பார்ப்பதன் மூலம் 50% அறிவையும், கேட்டுப் பார்த்து செயற்பாடுகளில் ஈடுபடுவதன்மூலம் 70% மான அறிவையும் பெற்றுக்கொள்கின்றனர்.

> ''நான் எதையும் செவிவழி கேட்டால் மறந்து விடுவேன்''
>
> ''கண்களால் பார்த்தால் ஞாபகத்தில் வைத்திருப்பேன்''
>
> ''செய்து பார்ப்பதன் மூலம் விளங்கிக் கொள்வேன்''

எனும் கருத்திலிருந்து புலன்களைத்தனித் தனியாகப் பயன்படுத்திப் பெறும் கற்றல் அனுபவங்களிலும் பார்க்க ஒரு சில புலன்களின் ஒன்றிணைப்பினால் கூடிய பயனுள்ளதும், பிழையற்றதும், நிலையானதுமான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். கற்றல் சாதனங்களைப் பயன்படுத்துவதன் மூலமே, ஒன்றுக்கு மேற்பட்ட புலனுறுப்புக்களை ஒன்றிணைத்து அனுபவங்களை வழங்க முடியும் என்பது ஆய்வுகளின்மூலம் கண்டு பிடிக்கப்பட்ட உண்மையாகும்.

கற்பித்தல் கற்றல் துணைச் சாதனங்களை 1. வகுப்பறைக் கற்பித்தல் துணைச் சாதனங்கள் 2. புறச்சாதனங்கள் என இரு வகையாகப் பிரிக்கலாம். வகுப்பறைக் கற்பித்தல் சாதனங்களுள்,

1. கட்புல சாதனங்கள்
2. செவிப்புலச் சாதனங்கள்
3. கட்புல செவிப்புலச் சாதனங்கள்
4. மாதிரியுருக்கள்
5. தன்வகைகள்
6. காட்சிப்படுத்தல்கள் அல்லது செய்து காட்டல்கள் என்பவை அடங்குகின்றன.

புறச்சாதனங்களுள் நிஜவாழ்க்கை அனுபவங்களான,

1. நாடகபாணி அனுபவங்கள்
2. இயல்பான நாடகங்கள்
3. நாடகங்கள்
4. பொம்மலாட்டம்
5. வெளிக்கள ஆய்வுகள்
6. கல்விச் சுற்றுலாக்கள்

என்பவை அடங்குகின்றன. எனவே கற்பித்தல் - கற்றல் சாதனங்களை, மாணவர்களின் முதிர்ச்சி அறிவுமட்டம் தேவை என்பவற்றை உணர்ந்து பயன்படுத்துவதன்மூலம் நாம் பின்வரும் பயன்களைப் பெறமுடியும்.

1. கற்றல் வேகமடையும்.

2. மாணவரை ஊக்குவித்து அவர்களின் கவனத்தை ஈர்க்கலாம்.

3. மாணவரைச் செயலூக்கத்துடன் இயங்கச் செய்யலாம்.

4. சிக்கலான எண்ணக்கருக்களை இலகுவில் விளக்கலாம்.

5. மாணவர் புத்தூக்கங்களுடன் பாடங்களைக் கற்பர்.

6. கற்றல் ஒரு விருப்புக்குரிய செயலாக மாறும்.

7. சொற்களின்மூலம் பெறும் விளக்கத்தை விட ஆழமான விளக்கம் ஏற்படும்.

8. மொழித்திறன், சொல்வளம், பேச்சுத்திறன் ஆகியவை விருத்தியடையும்.

9. ஆசிரியர் - மாணவர் தொடர்பு விருத்தியடையும்.

10. நேரத்தைச் சிக்கனமாகச் செலவிட வழியேற்படும்.

11. மாணவர்களின் வேறுபட்ட தன்மைகளுக்குப் பொருந்தும்.

எனவே நமது பாடசாலைகளில் எளிதாகவும், பரவலாகவும் பயன்படுத்தக்கூடிய சாதனங்களைத் தெரிவுசெய்து பயன்படுத்துதல் பயனுடையதாகும். பெரும்பாலும் ஆரம்பக் கல்வியைப் பெறும் மாணவர்களுக்கு துணைச் சாதனங்களைப் பயன்படுத்தி அனுபவங்களை வழங்குவதன்மூலம் எமது நோக்கங்களை இலகுவாக நிறைவுசெய்து கொள்ள முடியும்.

**திருமதி. J. தம்பிப்பிள்ளை**
(அதிபர்)
மட் / பேத்தாழை விபுலானந்த
வித்தியாலயம்.

❀ சிந்தனை மூட நம்பிக்கையின் எதிரி.

(ஷேக்ஸ் பியர்)

❀ மனம் விட்டுப் பேசுவதை விடச் சிறந்த அறிவு வேறு இல்லை.

(டிஸ்ஸராலி)

❀ சில சமயம் புயலைவிட அமைதி பயங்கரமாயிருக்கும்.

❀ நிலத்திற்கு அழகு நெல்லும் கரும்பும். குளத்துக்கு அழகு தாமரை பெண்ணுக்கு அழகு நாணம்.

(விளம்பி நாகனார்)

# ஆசிரியரின் பணிகள் பாடசாலையில் மட்டுமன்றி சமூகத்திலும் பரந்து செல்லும் சங்கிலித் தொடர்

இன்று ஆசிரியரின் பணிகள் அத்தொழிலின் தேவைக்கும் சமுதாயத்தின் எதிர்பார்ப்புக்களுக்கும் அமைய, அவர்களின் கடமைகளும், பொறுப்புகளும் அதிகரித்துள்ளது. இப்பெயருக்குரிய பொறுப்புக்கள், கடமைகள், நடத்தை ஒழுங்கு, சமுதாயத்தின் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றுக்கு ஏற்ற நடத்தையே ஆசிரியரின் பணிகளாகும்.

ஆசிரியரின் பணிக்கு விஞ்ஞான அடிப்படை தொடர்பான தத்துவம், கல்விக்கோட்பாடு, கல்வி உளவியல் துறைகளில் கோட்பாடுகளையும் அறிவுப் பரப்புகளிலும் தெளிவான விளக்கம் பெற்றிருக்கவேண்டும். ஓர் ஆசிரியன் தனது கடமைகளை தெளிவாக விளங்கிக் கொண்டால் தான் கற்பித்தல் தொழில்நுட்பத்தை வெற்றிகரமாகவும், திறமையுடனும் ஆற்றமுடியும்.

''ஆசிரியரின் பணி பற்றி ஆங்கில கல்விமானாகிய ஒ. எ. ஓயசர் எழுதிய Teacher Pupil and Tast'' எனும் நூலில் ஓர் ஆசிரியன் போதனாசிரியரும், நிபுணருமாகவும், சாதனை அளவிடுபவரும் மதிப்பிடுபவரும், நடத்தை கோட்பாடுகளை வெளியிடுபவரும், நன் நடத்தையை காப்பாற்றுபவரும், யாப்பு வல்லுனர் நீதிபதி, பாதுகாப்பு அதிகாரி, நண்பரும், வழிகாட்டி என்றும் இவையனைத்தும் வகுப்பறை கற்பித்தலை அடிப்படையாகக்கொண்டு செய்யவேண்டிய பணிகள் என எடுத்துரைக்கின்றார்.

ஓர் ஆசிரியனின் பாடசாலை நிர்வாகம் குறித்த பணிகளாக சேவை புரியும் பாடசாலை அதிபரின் தலைமையை ஏற்று நிர்வாக கடமைகளில் பங்குகொள்ளல், பாடத்துடன் தொடர்பான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல், ஆசிரியர் கூட்டங்களில் பங்குபற்றி ஏனைய ஆசிரியர்க்கிடையே அன்னியோன்னிய ஒத்துழைப்பை வளர்த்தல், பாடசாலை அபிவிருத்தி சபையில் உற்சாகத்துடன் செயற்படுதல், மாணவரின் விருப்பு, வெறுப்பு, திறமை பற்றி பெற்றோர்க்கு எடுத்துக்கூறல், மாணவரின் கல்வி வளர்ச்சி பாடசாலை வளர்ச்சி ஆகியவற்றில் பெற்றோரின் ஒத்துழைப்பு பெறுதல், பாடசாலையின் சுற்றாடலிலும், வெளியிலும் மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாட்டை பேணுதல். ஆசிரியர் தொழில்சார் கலந்துரையாடல்களில் பங்குகொள்ளல் என விரிவுபட்டு செல்கின்றது. ஆசிரியரின் பணிகள் பாடசாலையுடன் நின்றுவிடுவதில்லை அது சமூகத்தில் பரந்து நேரடியாகவும் மறைமுகமாகவும் குறுகியதாக நீண்டகாலப்பகுதியினுள்ளும் மனித வளர்ச்சியுடன் தொடர்பு கொண்டுள்ளது.

மேலும் ஆசிரியர் சமுதாய வளர்ச்சியில் உதவுவதுடன் வழிகாட்டுதல், பாடசாலையை சுற்றியுள்ள பிரதேசத்தில் இன, மத வேறுபாடு இன்றி சமூக கலாச்சார சமய நிறுவனங்களில் பங்குகொள்ளல், சமூக வளர்ச்சிக்கு சமூகத்தின் உதவியைப் பெறல், அரசின் கல்வி அபிவிருத்திக் கொள்கைக்கு ஏற்ப சமூக கருத்துக்களை மாற்றியமைத்தல் என விரிவுபட்டு பரந்து செல்லுகின்றது.

கல்வி நவீன எண்ணக் கருத்துப்படி வாழ்க்கை முழுவதும் சமூகத்தின் எல்லாத் துறைகளிலும் தொடர்ச்சியாக நடைபெறும் வலிமை வாய்ந்த நிகழ்வு ஆகையால் ஆசிரியனின் பணி பாடசாலையில் மட்டுமன்றி சமூகத்தில் எங்கும் பரந்து செல்லும் சங்கிலித்தொடராகும்.

செல்வி. ச. சத்தியலெட்சுமி
மட்/சிவன்தீவு அ. த. க. பாடசாலை,
வாழைச்சேனை.

# நல்லாசிரியன்

பாரினில் ஆன்மாக்கள் படுந்துயரம் தானறிந்து அருவமாய் நின்றசிவம்
அருளொடு குணம்குறி உருவமாகி வந்து
நேரினில் அடியார் தம்முன் நினதருள் நல்க எண்ணி
கோதற குவலயத்தில் குருவடிவாகி நின்று
தேரிஇல் சித்தத்தைத்தெளிய வைத்து சிவபதம் அருளினாற்போல்
மாணுறு மாணாக்கர்தம் மனத்திருள் அகற்றிக் கல்விப்
பேற்றினை அவன் பாலூட்டி பேதலி மனதை மாற்றி
பேறுகள் பலவும் பெறச்செய் பெற்றியன் ஆசிரியன்

மானிலந்தன்னில் வருத்தமுறும் மாந்தர்க்கெல்லாம்
தீதுஇல் அன்பினாலே சித்தத்தில் மகிழ்ச்சியூட்டி
ஆனில் நல் ஔடதத்தை அளவறிந்தூட்டி அன்னார்
நோய்பிணி அகற்றும் நோன்பினான் வைத்தியன்போல்
வானிமிர் மாணாக்கர்தம் வழித்துணையாக நின்று
மாண்புறு கலை ஞானத்தை வயதறிந்தளவாயூட்டி
நானிலந் தன்னில் நலம்பெற வேண்டுமென்ற
தீராக் கருணையுடன் சிறக்க வைப்பான் நல் லாசிரியன்

வானின் மழையின்றி வளர்பயிர்கள் வாடி வதங்கியங்கே
வன்கண் உலோபர் மனை வாடிநிற்கும் பரிசிலர்போல்
தேனின்துளி வரவை நோக்கித் தேய்ந்திருக்கும் நிலைகண்டு
தேனமுத மழைபொழிந்து செழித்து விழைந்துலகைக் காத்ததுபோல்
மானின்விழியார் மாணாக்கர் மயக்கையுடன் வழிதவறிச் சீர்கெட்டு
செய்வதறியாது திகைத்து நிற்கும் வேளையிலே
ஊனின் உயிராகி உள்மயக்கம் தானகல உற்ற கலைஞானத்தை
உரமாக ஓதி உணரவைத்து உள்தாகம் தணித்து உய்விப்பான் ஆசிரியன்

ஆசிரியனின்றி அனைத்துப் பதவியெங்கே
அனைத்துப் பெரியோர்களும் நல்லாசிரியன் பெற்றபிள்ளை
ஆதலினால் ஆசிரிய தீபமதை ஏற்றி அனைத்துலகும்
ஆசான் பெருமைதனை அறியவைத்தல் நம்கடனே
ஆசிரியன் தீபமதாய் அகிலமெங்கும் ஒளிகொடுக்க
அருங்கலைகள் சீர்பெருக அறிவொளி சுடர் விடவே
ஆசிரிய தீபமேற்றி அன்னாரைப் போற்றி நின்றால்
ஆரணிய வேடன் ஏகலைவன் துரோணரிடம் கற்ற வித்தைபோல் வருமே

**வே. ஈஸ்வரமூர்த்தி**
அதிபர்
மட்/கோறளங்கேணி அ. த. க. பாடசாலை

தீபமே உனை வாழ்த்துவதில்
ஆசிரிய தீபங்களை வாழ்த்தும் நினைவுறுகின்றோம்

சகலவிதமான மின்சார உபகரணங்களையும்
ஒரே கூரையில் பெற்றுக்கொள்ள
ஏதுவான வசதிகளுடன் கூடிய இடம்

# சிங்கர்

# SINGER

## திருமலை வீதி, மட்டக்களப்பு.

தீபமே என்றென்றும் உன் சுடர்
பிரகாசிக்க வாழ்த்துகின்றோம்

- நவநாகரீக உடைகள்
- சாறி வகைகள்
- கூறைச் சேலைகள்
- குழந்தைகளுக்கான உடைகள்

அனைத்தையும் பெற்றுக்கொள்ள

## நியூ மர்ழியாஸ்

இல. 44, பிரதான வீதி,
மட்டக்களப்பு.
☎ *065 - 2900.*

தீபமே உனை வாழ்த்துவதில்
அக மகிழ்கின்றோம்

- ☆ அன்பளிப்புப் பொருட்கள்
- ☆ அழகுசாதனப் பொருட்கள்
- ☆ விளையாட்டுப் பொருட்கள்
- ☆ வாசனைத் திரவியங்கள்

மற்றும் அனைத்து பொருட்களுக்கும்

## " ப வு சீ ஸ் "

58, பிரதான வீதி,
மட்டக்களப்பு.
☎ 065 - 2215.

# வகுப்பறை கற்பித்தலில் ஆசிரியனின் பங்கு

ஒரு பாடசாலையில் குறிப்பிட்ட வகுப்பறை ஒன்றில் ஆசிரியர் ஒரு பாடத்தை கற்பிப்பது என்பது அவர் சக்கரம் சுழல்வது போல் இயங்குவது அல்ல அது மிக கஷ்டமானதும், சிக்கலானதும் ஆசிரியரின் அறிவுக்கும் திறனுக்கும் ஆற்றலுக்கும் போட்டியிடும் செயற்பாடேயாகும். ஆசிரியர் என்பவர் கற்பித்தல் தொழிற்பாட்டில் திருப்தியும், வெற்றியும் பெறவேண்டுமாயின் கற்பித்தல் தொழிற்பாட்டில் பங்குகொள்ளும் ஆசிரியர் தான் புகட்ட இருக்கும் பாட அலகு பற்றிய முன்னறிவையும் அந்த பாடத்தின் நோக்கம் அதைக் கற்கும் மாணவர்கள் அடையும் அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றை சிறப்புடன் நன்கு தெரிந்தவராக இருத்தல் முக்கியமானதாகும். குறிப்பிட்ட வகுப்பொன்றில் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர் கற்றலுக்கு வழிகாட்டியாகவும் சுய கற்றலுக்கு மாணவரை தூண்டுபவராகவும் இருக்கவேண்டும். தன்னிடம் கற்க வந்திருக்கும் மாணவர்கள் பற்றிய அறிவு ஆசிரியருக்கு மிகவும் அவசியமானதாகும். அவர்களது வீட்டுச் சூழல், ஆற்றல், திறன், பாடப்பரப்பு பற்றிய அவர்களது முன்னறிவு ஆகிய அனைத்தையும் தெரிந்துகொள்ளல் வேண்டும் விரிவுரை முறை, கலந்துரையாடல் முறை, வினா விடை முறை எந்தமுறை மூலம் கற்பித்தால் வகுப்பிலுள்ள அனைவருக்கும் பயன் கிடைக்கும் என்பதை சிந்தித்து முடிவு செய்து தொழிற்படும்போதுதான் வகுப்பறை கற்பித்தல் தொழிற்பாட்டில் வெற்றிபெற முடியும், இல்லை எனில் வெறுமனே சக்கரம் சுழல்வது போன்றே இது அமையும்.

ஆசிரியர் ஒருவர் வகுப்பறையில் கற்றல், கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டு வெற்றி பெறவேண்டும் எனில் அவர் பாடத்தை முதற்கண் திட்டமிடுதல் அவசியமாகும். அவ்வாறு அவர் ஈடுபடும்போது வருட ஆரம்பத்தில் ஒவ்வொரு பாட அலகையும் நேர கால ஒழுங்கின்படி பிரித்துக்கொள்ள வேண்டும். அத்துடன் ஒவ்வொரு பாட அலகின் நோக்கம், தன்மை என்பனவற்றுக்கேற்ப கற்பித்தல் முறைகளையும் திட்டமிட்டுக்கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு பாட அலகு சம்மந்தமாக எடுக்க இருக்கும் தொழிற்திறன் திட்டங்களை ஆற்றல் கூடிய மாணவர்கள், திறமை குறைந்த மாணவர்கள் ஆகியோருக்கு வழங்கவிருக்கும் தொழிற்பாடுகள் கற்பிக்க இருக்கும் பாட சம்மந்தமான வினாக்கள் ஆகிய விடயங்களை குறிப்பிட்டதோடு ஒன்றில் பதிந்துவைத்து அதன் துணையுடன் ஆசிரியர் தனது நோக்கத்தில் இருந்து நழுவாது ஒழுங்காகவும் விரைவாகவும் கற்பித்தல் தொழிற்பாட்டில் ஈடுபடவேண்டும். அத்துடன் கற்றல் - கற்பித்தல் திறனும் செம்மையாக இருந்தால் மிக சிறப்புடையதொன்றாக இது விளங்கும். அடுத்ததாக ஆசிரியர் தமது கற்பித்தலில் சிறப்படைய வேண்டுமெனில் நாளாந்தம் பாட ஆயத்தம் செய்து கொள்வது மிக மிக அவசியமானதாகும். இந்த பாட ஆயத்த கடமைப்பாடானது கற்பித்தல் தொழிற்பாட்டை இலகுவாக்குவதோடு ஆசிரியர் ஈடுபட இருக்கும் தொழிற்பாடுகளில் ஒழுங்காகவும் நேரவிரயமின்மையும் செயற்படுவதற்கு உதவியாகவும் இருக்கும். பாட அலகின் தன்மை இந்த அலகை கற்பிப்பதனால் மாணவர்கள் அடையும் அறிவு, திறன் மனப்பாங்கு அப்பாட அலகின் எப்பகுதி மாணவர்கள் கூடுதலாக விளங்கிக் கொள்ளல் வேண்டும் என்பவற்றை ஆரம்பத்திலேயே நிர்ணயித்துக் கொள்வதால் கற்பித்தல் இலகுவானதாக அமைவதோடு ஆசிரியருக்கு எந்தவித சவாலையும் சமாளிக்கக்

கூடியதாகவும் இருக்கும். சுருக்கமாக ஆசிரியரின் ஆளுமையைப் பேணுவதற்கு இது பக்க பலமாக அமையுமெனலாம்.

மேலும் ஆசிரியனுடைய கற்பித்தல் திறனை விருத்தி செய்ய வருட பாட அலகை உப அலகுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் தேவையான நேரம் மாணவர் விளங்கிக்கொள்ள வேண்டிய பகுதி பயன்படுத்தக் கூடிய உபகரணங்கள் எவை என்பதை தீர்மானித்துக்கொள்ளல் வேண்டும். அவற்றுடன் மதிப்பீடும் பாட இறுதியில் நடத்துவதன்மூலம் மாணவர்கள் ஆசிரியர் கற்பித்த பாடத்தின் நோக்கத்தைப் பெற்றுக்கொண்டனரா என அறிந்துகொள்ளல் கற்பித்தல் அம்சங்கவின் முக்கிய அம்சமாகும். மாணவர்கள் தாம் கற்றவற்றை மீள்படுத்துவதற்காக வினாக்களை தெரிவுசெய்துகொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதன்மூலம் பாட அலகின் முக்கிய நோக்கத்தை மாணவர் பெறமுடியும். இதன்படி ஆசிரியர்களின் கற்றல் - கற்பித்தல் மேலும் சிறப்படைவதற்கு பாட ஆயத்தமட்டும் போதாது. ஆசிரியரிடத்தில் கற்கும் மாணவர்களின் ஆற்றல் அவரது சூழல் பாடம் தொடர்பான அவரது முன்னறிவு ஆகியவற்றை ஆசிரியர் அறிந்து அதற்கேற்ப தமது அன்றாட பாட ஆயத்தம் கற்பித்தலுக்கான உபகரணங்கள் போன்றவற்றை மேற்கொள்வதில் தான் கற்பித்தலின் சிறப்பு அமைந்துள்ளது எனலாம். ஒரு பாடத்தை ஆசிரியர் கற்றல் - கற்பித்தலில் எவ்வளவு காலம் அனுபவம் பெற்றிருப்பினும் ஆசிரியர் கற்பிப்பது புதிய மாணவர்களுக்கு என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

எனவே ஆசிரியர்கள் மாணவர்களின் தன்மைக்கு ஏற்ப அன்றாடம் பாட ஆயத்தம் செய்வது கவனத்திற்கு கொள்ளவேண்டும். அப்படி இருந்தால்தான் அங்கு கற்றலுடன் கற்பித்தலும் நடைபெறும். ஆகவே மாணவர் அனைவரையும் ஒன்றிணைத்து அன்பாக ஆசிரியர் வழிநடத்துவதுடன் கற்றல் - கற்பித்தலில் வெற்றியும் சிறப்பும் பெறுவதோடு ஆசிரியர் கற்பித்தலில் மட்டும் ஈடுபடாது கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிலும் மாணவர்களை வழிகாட்டுவதாகவும் அமையவேண்டும். ஆகவே இவ்வாறான கற்றல் - கற்பித்தல் முறைகளை ஒவ்வொரு ஆசிரியர்களும் கைக்கொள்வதன் மூலம் மாணவர்களிடமிருந்து சிறந்த பெறுபேற்றை நாம் நிட்சயமாக எதிர்பார்க்கலாம் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

ஆக்கம்:

**திரு. த. வை. சுப்பிரமணியம்**

மட் / கல்மடு விவேகானந்த வித்தியாலயம்,

கல்மடு - கல்குடா.

❀ கோபத்தையறியாதவன் முட்டாள். கோபப்படாதவன் அறிஞன். (கவி)

❀ தொழில் இல்லாத வாழ்வு குற்றம். கலை இல்லாத தொழில் மிருகத்தனம். (ரஸ்கின்)

# பூவையர் கவனத்திற்கு......

மிதமான உபயோகம், பலவகை உணவுகள், சத்துணவு சமநிலை ஆகியவை சத்துணவு அறிவியலாரின் திறவு மொழிகள் எனலாம். ஒரு குறிப்பிட்ட அளவிலேயே உடல் எடையை பாதுகாத்து வருவதுடன் வாழ்க்கையை பற்றி மகிழ்ச்சிகரமான மனப்பான்மையுடன் வளர்த்து வருதல் வேண்டும். இதுவே நீண்ட பயணம் செல்லும் நமது வாழ்க்கைப் பாதையில் பரிபூரணமான சுக நிலையை நோக்கி உயர்த்திக்கொண்டே செல்லும்.

### மரக்கறி புரியாணி (Vegetable Buriani)

### தேவையான பொருட்கள்

கோவா, போஞ்சி, கரட், லீக்ஸ் — 500 கிராம் (சிறியதாக வெட்டியது)
உருளைக்கிழங்கு - 300 கி.
தக்காளிப்பழம் - 150 கி.
நெய் - 3 மே. க.
பச்சை மிளகாய் - 5
பெ. சீரகம் - $\frac{1}{2}$ தே. க. (பொடியாக்கியது)
சிறியதாக வெட்டிய வெங்காயம் - 3 மே. க.
பூடு - 5-6
இஞ்சி - (புளியம் விதையளவு)
ஏலம் - 6
கராம்பு - 6
கறுவா - சுட்டுவிரற்பருமனும் 1'' நீளமும்
சம்பா அரிசி - $1\frac{1}{2}$ சுண்டு
உப்புத்தூள் - $2\frac{1}{2}$ தே. க.

### செய்முறை

1. $3\frac{1}{2}$ சுண்டு நீரை கொதிக்கவிட்டு அரிசியை களைந்து 1 தே. க. உப்பு, ஏலம், கராம்பு, கறுவா ஆகியவற்றுடன் பதமாக வேகவிடல்.
2. உருளைக்கிழங்கை அவித்து உரித்து $\frac{1}{4}$ அங்குல கனமுள்ள துண்டுகளாக வெட்டிக்கொள்க.
3. மரக்கறியை ஒரு துளி நீருமில்லாமல் வடியவிட்டு $\frac{1}{2}$ தே. க. உப்பு சேர்த்து 1 மே. க. நெய்யில் முக்காற்பதமாக வதக்கிக் கொள்க.
4. வேறு ஒரு பாத்திரத்தில் $1\frac{1}{2}$ மே. க. நெய்விட்டுக் காய்ந்தவுடன் பச்சை மிளகாய், பெ. சீரகப்பொடி, வெங்காயம், அரைத்த இஞ்சி, உள்ளி இட்டு பொன்னிறமாக வதக்கி, உருளைக்கிழங்கு, வதக்கிய மரக்கறி ஆகியவற்றை நன்றாகக் கலந்து, கடைசியாகச் சாதத்தைக் கலந்து கிளறியபின் இறிக்கிக்கொள்க.
5. மிகுதி $\frac{1}{2}$ தேக்கரண்டி நெய்யில் தக்காளிப்பழத்தை சிறு துண்டுகளாக வெட்டி $\frac{1}{4}$ தேக்கரண்டி உப்பு சேர்த்து சுருள வதக்கி புரியாணியிற் கலந்து கொள்க.
6. முந்திரிகை வற்றல், முந்திரிப்பருப்பு ஆகியவற்றை நெய்யில் பொரித்து போட்டுப் பரிமாறவும். (5 பேருக்கு போதுமானது)

### சிறுகுறிப்புகள்

1. புதியபாணை வெட்டமுன்னர் பாண் வெட்டும் கத்தியை பொங்கு நீரில் அமிழ்த்தித்துடைத்து உபயோகித்தால் வெட்டுவது இலகுவாக இருக்கும்.
2. கீரைவகை, கறிவேப்பிலை, ஆகியன ஓரிரு தினங்கள் வாடாமலிருப்பதற்கு இவற்றை ஈரச்சீலை, அல்லது வாழையிலையில் சுற்றி வைத்துக்கொள்க. வாயகன்ற கண்ணாடிப் போத்தலிலிட்டு மூடி அல்லது பொலித்தீன் உறைகளில் கட்டி குளிர்சாதனப்பெட்டியில் வைத்துப் பலநாட்களுக்கு வாடாமற் பாதுகாத்துக் கொள்ளலாம்.
3. கறி, குழம்பு, சொதி ஆகியவற்றில் உப்புக்கூடிவிட்டால் தேங்காய்ப்பாலில் சிறிது அரிசி மாவைக் கரைத்து சேர்த்துக் காய்ச்சி குறைத்துக் கொள்க.

**திருமதி. சா. நிமலன்**
(ஆசிரியை, மனைப்பொருளியல்)
மட் / வாழைச்சேனை இந்துக் கல்லூரி.

# வாழ்க்கைக்கேற்ற கல்வி

மனிதரில் மறைந்து இருக்கும் ஆற்றலைத் தோண்டியெடுப்பதால் ''கல்'' எனும் வினையடியில் பிறந்தது கல்வி என்பார்கள் பெரியோர்கள். இப்படிப்பட்ட கல்வியை நாம் எப்படிக் கற்கவேண்டும்? கற்றதன் பின்பு எவ்வாறு அதனைக் கடைப்பிடிக்கவேண்டும்? என்று எமக்கு இப்படிச் சொல்லிவைத்தார், ''அணுவைப் பிளந்து ஏழ்கடலை அதனுள் புகட்டி வைத்த'' தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக''

செந்நாப் போதர் அன்று சொல்லிச் சென்றதை இன்றும் நாம் எடுத்துக்கொண்டோம். என்றால் அதுவேதான் வாழ்க்கைக் கேற்ற கல்வி ஆகும் என அவர் எமக்குச்சொல்லியுள்ளார். தேவையானதை தெளிவாக தெரிந்துகொள்ளவேண்டும்என்றார். அதாவது கல்வி வாழ்க்கைகேற்றதாய் இருக்கவேண்டும். அல்லது''ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது'' எனும் பழமொழிபோல் நம் வாழ்க்கை அமைந்துவிடும்.

கல்வி என்பது ''அனுபவங்களை அனுபவங்களால் அனுபவங்களுக்கூடாக அளிப்பதாய் அமையவேண்டும்'' என்று சொன்னார் ஜோன் டுயி. ''வாழ்க்கை அமைப்பிற்கும் இயற்கையான சூழ்நிலைக்கும் இடையிலான சமமான அனுபவமே'' என்று கூறினார் பேர்டன் ரசல். ''மனிதத்தன்மையை மனிதர் பெற பயிற்சி அளிப்பது கல்வி'' என்ற வில்லியம் வோட்ஸ்வத்தின் கருத்தினையும் எடுத்துப்பாருங்கள். ''சுதந்திரமான சிந்தனையும், கலையை உணரும் அழகுணர்ச்சியும், இரக்க சிந்தனையும் படைப்பாற்றலும் வளர வழி அமைப்பதே கல்வி'' என்று கூறிய ரவிந்திரநாத்தாகூரின் கருத்தையும் நினைவு கூர்ந்து பாருங்கள். ஏன்? ''கல்வி ஒருவனை நல்ல மனிதப் பண்புடையவனாகவும், நற்குடி மகனாகவும் ஆக்குவதன் மூலம் நல்ல சமுதாயத்தை உருவாக்கவேண்டும்'' என்ற ரூசோவின் கருத்தையும் சிந்தித்துப் பாருங்கள்.

இவற்றையெல்லாம் சிந்தித்துப்பார்த்து நாம் விளங்கிக்கொள்வது யாது? தன்னையும் தான்வாழும் சூழலையும் தனியொருவன் அறிந்துகொள்ள துணைநிற்பதே கல்வி. அதாவது சமுதாயம் காண விளைகின்ற சான்றோனை உருவாக்கி நல்லதொரு குடிமகனை நமக்கு அளிப்பதே கல்வி. அதுமட்டுமல்ல கல்வி என்பது முன்னேற்றத்தை நோக்கி வளர்ச்சி பெறுவதாக, அறிவியல், கைத்தொழில் துறைகளை மென்மேலும் பயன்படுத்துவதாக அமைதல் வேண்டும். கல்வி பெறும் அடிப்படையில் அறிவு ஆற்றல் வாய்ந்தவர் என்றும், கைத்தொழில் ஆற்றல் வாய்ந்தவர் என்றும் வேறுபாடு இருக்கக் கூடாது. கலையும், விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் ஒன்றிணைந்த அறிவு சமூக வாழ்வில் இயற்கையைப் பயன்படுத்தக்கூடிய ஆற்றலைப் பிள்ளைகளிடம் வளர்க்கவேண்டும். பிள்ளைகளின் கற்றலானது அனுபவத் தொடர்ச்சியைக்கொண்டதாக படிப்படியாக ஆழத்திலும், பரப்பிலும் அதிகரித்துச்செல்வதாகப் பிள்ளையின் விருத்தியோடு தொடர்புற்றிருக்க வேண்டும். எனவே கல்வி என்பது மனித சக்திகளின் அமைப்பை பொறுத்து அவற்றை சமூக சேவைக்குப் பயன்படுத்தும் கலையும் சமூக முறையுமாகும். இதன்மூலம் சமூகமும், பாடசாலையும் ஒன்றுடனொன்று இணைகின்றன. எனவே பிள்ளைகள் நம்பிக்கையும் உறுதியும் ஆற்றலும் உள்ளவர்களாய் தமக்கும், சமூகத்திற்கும், நாட்டிற்கும் நற்பயன் நல்கும் குடிமக்களாக உருவாக்கப் படுவார்கள்.

இங்கு வலியுறுத்தப்படுவதெல்லாம் இது தான். கல்வி அறியாமை இருளை அகற்ற வேண்டும். கல்வியின் மூலம் தன்னுடைய வாழ்வை மனிதன் அமைக்கவேண்டும். கட்டுப்பாடு, அகிம்சை, பணிவு, ஈகை, இன் சொல். தியாகம் ஆகிய அறநெறிகள் வளர வேண்டும். மனிதன் சமூக இயல்பினன் ஆதல் வேண்டும். சிறந்த குடிமகன் உருவாக்கப்பட வேண்டும். சமூக வளர்ச்சிக்குக் கல்வி உதவ வேண்டும். இதனையேதான் ஔவையாரும் ''குடியுயரக் கோனுயரும்'' என்று தமது பாடலில் கூறியுள்ளார். சிறந்த குடிமகன் உருவானால் மட்டுமே சிறந்த சமூகம் அமைக்கப்படும்,

ஏன்? காந்தியடிகள் விரும்பிய ''சர்வோதயம்'' மலர்வதற்கும் வாழ்க்கைகேற்ற கல்வி தான் வேண்டும். குழந்தைகளிடமிருந்து முழு மனிதனை உருவாக்கி அவனுடைய ஆளுமை, அதாவது உடல், உள்ளம், ஆன்மா, இருதயம் என்பவற்றை ஒருமித்தவகையில் விருத்தி செய்து சாதி, மதபேதங்களை ஒளித்து சர்வோதயமான சமூகம் உருவாக்கப்பட வேண்டும் இதனால் நாடும் சிறப்படையும் நாட்டு மக்களும் சிறப்படைவர் என்பதில் ஐயமில்லை.

நல்லவர்கள் எல்லாம் வருக - நமது
நாடு செழித்திடவே வருக
செல்வர்களும் ஏழைகளும் வருக - கல்விச்
செல்வமிங்கு சேர்த்திடுவோம் வருக.

**திரு. சி. முருகவேள்**
மட் / வாழைச்சேனை இந்துக் கல்லூரி.

- கடவுளைத் தன்னில் காணாதவனுக்குக் கடவுள் இல்லை. (டால்ஸ்டாய்)

- ரோஜா செடியில் முள் இருப்பதற்காக வருந்தாதே முட்செடியில் மலர் இருப்பதற்கு மகிழ்வாய். (ஆவ்பரி)

- கற்பது கடினம். ஆனால் கற்பதை மறப்பது அதைவிடக் கடினம். (ஆவ்பரி)

- பார்வையின் உறுப்பு கண் அல்ல. அறிவே.

- வெற்றியின் தந்தை உறுதி. உறுதியின் தந்தை நம்பிக்கை. நம்பிக்கையின் தந்தை திறமை. திறமையின் தந்தை செயல். செயலின் தந்தை சிந்தனை. சிந்தனையின் தந்தை என்ன தெரியுமா? செருக்கடையாத மனப்பண்பு. (பாலயோகி)

ஆசிரிய தீபம் தொடர்ந்து சுடர் விட்டுப் பிரகாசிக்க
எமது நல்வாழ்த்துக்கள்

இல்லத்தரசிகளே !

தரமான பலசரக்குப் பொருட்களுக்கும்,
கொண்டாட்டங்களுக்கேற்ற கேக் தயாரிப்பதற்கான
பொருட்களுக்கும்,
கோயில் அபிஷேகப் பொருட்களுக்கும்
வாழையூரில் நாடவேண்டியது

ஸ்ரீ விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி, வாழைச்சேனை.
☎ 065 - 7297.

Best Wishes to "Asiriya Theepam"

**Licenced inland & Foreign liquor**

**wholesale & Retail Dealers.**

**KALKUDAH FOREIGN LIQUOR SHOP**
**Main Street, — VALAICHENAI.**

☎ 065 - 7266.

# பாவமா......?

# சாபமா.....?

## காட்சி I

*(பீஸ்மரின் அன்புப் படுக்கை அருகே துரியோதனன் வருகின்றான்)*

துரியோதனன்: (அழுதவண்ணம்) பிதாமகரே நான் தனிச்சவனாகி விட்டேன் என் உயிர் நண்பன் ராதேயனை இழந்து விட்டேன்.

பீஸ்மன்: மகனே! ஒரு சத்திரிய மன்னன் இவ்வாறு அழுவது பொருத்தமாகாது. இப்படி என் முகத்திற்கு எதிரே வா.

துரி: பிதாமகரே! என் தம்பிமாரோ துச்சாதனனோ இறந்தபொழுது நான் அழவில்லை. ஆனால் நண்பன் ராதயனை பறி கொடுத்தவுடன் நான் சகலவற்றையும் இழந்தே விட்டேன்.

பீஸ்மன்: துரியோதனா! ராதயனுக்கு இந்த உலகு தந்த ஒரே பரிசு தான் அவனுடைய இறப்பு. அவனை ராதயன் என்று அழைப்பது தவறு, அவன் குந்தேவன் ஆமாம் குந்தியின் மகன்.

துரி: (அதிர்ச்சியடைந்தவனாய்) என்ன குந்தி மைந்தனா?

பீஸ்மன்: கர்ணனுக்குத் தன் தாய் குந்தி என்பது எப்போதோ தெரிந்திருந்தும் அவன் உன்னைச் சேர்ந்து நின்று உனக்காகவே உயிர்விட்டான் மகனே.

துரி: பிதாமகரே கன்னன் குந்திச்சித்தியின் மகனா? என் விரோதிகளான பாண்டவர்களின் சகோதரனா? நம்பவே முடியவில்லையே. உண்மை தெரிந்திருந்தும் என் அணி சேர்ந்து நின்று எனக்காக உயிர்விட்டானா?

பீஸ்மன்: ஆமாம் இதுதான் உண்மை, நம்பு மகனே. ராதயன் என்று அழைக்கப்பட்ட கர்ணன் குந்தியின் மூத்த புதல்வன் அத்தகைய வீரனுக்காக என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## காட்சி II

போர்க்களத்திலே கர்ணனின் உயிரற்ற உடல் மண்ணில் புதைந்துவிட்ட தேர்ச்சில்லின் அருகே கிடக்கிறது.

ஏனைய சடலங்களை வீரர்கள் பொறுக்கி எடுக்கின்றனர். குந்தி கர்ணனின்சடலத்தை அடையாளம் கண்டு அருகே துவண்டு விழுந்து அழுகின்றாள். கிருஷ்ணருடன் அவ்விடம் வந்த பாண்டவர்கள் தாய் குந்திதேவியின் செயல் கண்டு திகைத்து நிற்கின்றனர்.

தருமர்: அம்மா! எமது பிரதான எதிரியின் அருகிலிருந்து தாங்கள் ஏன் அழுகின்றீர்கள்.

கிருஷ்ணர்: பெரியண்ணா! அவர் அழட்டும் வாருங்கள் நாங்கள் போவோம்.

தருமர்: இல்லை இந்த நிலையில் அம்மாவை விட்டுச் செல்லுவதா? முடியாது. அம்மா! அங்கதேசத்தரசன் கர்ணனின் உடலை வைத்துக்கொண்டு தாங்கள் ஏன் அழவேண்டும்.

குந்தி: (கண்ணீரை துடைத்துக்கொண்டு) இதோ நான் அழுகையை நிறுத்தி விட்டேன் போதுமா?போய் இறந்து கிடக்கும் போர்வீரர்களுக்கான இறுதிக்கிரிகைகளைச் செய்யுங்கள் போங்கள்,

அர்ச்சுனன்: தாயே! இந்த தேரோட்டியின் மகனுக்காக தாங்கள் ஏன் அழ வேண்டும்? காரணத்தை கூறுங்கள் அம்மா.

குந்தி: மகனே அர்ச்சுனா! நான் இப்போது உண்மையைக் கூறினால் நீங்கள் ஐவரும் பேரதிர்ச்சி அடைவீர்கள். உங்கள் விற்கள் தோள்களிலிருந்து விழுந்துவிடும்.

என்னைக் கண்ணீர் வடிக்க விட்டு அப்பாலே போய்விடுங்கள். பொங்கும் என் கண்ணீரை அடக்கினால் அது தேங்கி ஒரு சமயம் இந்த உலகத்தையே மூழ்கடிக்கச் செய்துவிடும்!

தருமர்: வாசுதேவா! தாங்களாவது அம்மாவை சாந்தமடையச் சொல்லலாகாதா? எதிரியான ராதேவன் இறந்தமைக்காக எம் அன்னை ஏன் துயருறவேண்டும்?

குந்தி: இவன் ராதேவன் அல்ல குந்தேவன் (எல்லோரும் அதிர்ச்சி அடைகின்றனர்)

தருமர்: என்ன குந்தேவனா? தங்கள் மகனா தாயே?

குந்தி: ஆமாம் கர்ணன் என் சொந்தமகன். உங்கள் மூத்த சகோதரன்.

அர்ச்சுனன்: என்னம்மா சொல்லுகிறீர்கள்! இவர் எங்கள் அண்ணாவா?

குந்தி: தலையசைக்க, கிருஷ்ணரும் ஆமோதித்துத் தலையசைக்கின்றார்.

தருமர்; இத்தகைய ஒரு முக்கியமான சம்பவத்தை எங்களிடம் தாங்கள் இது காலவரை மறைத்து வைத்திருந்தீர்களா? அம்மா இல்லை இல்லை இதை என்னால் நம்பவே முடியாது தாயே.

குந்தி: ஆமாம் மறைத்துத்தான் வைத்திருந்தேன்.

அந்த பெரிய கொடுமைக்காகத் தினந் தினம் நான் செத்துப் பிழைத்தேனடா மக்காள். தேரோட்டி மகன் என்று என் மகன் கர்ணனை ஒவ்வொரு முறையும் எவராது வசை கூறும்போது எனது இதயம் பிளப்பது போன்ற வேதனையை அடைந்தேன். வேதனையின் விளிம்பிலே நின்று துடிதுடித்த போதும் எவரிடமும் அந்த உண்மையைக் கூறமுடியாதவளாகத் துயருற்றேன்.

தருமர்: தாயே! தாங்கள் மறைத்த இந்த உண்மையினால்த்தான் இப்போரே நடந்தது. எண்ணற்ற உயிர்களைப் பலி வாங்கியது. தங்கள் நிலையினால் பாரத சமுதாயமே பெரும் பேரிழப்புக்களை சந்திக்க நேர்ந்தது, போர்க்களத்திலே ஏற்பட்ட ஒவ்வொரு உயிர்ப்பலிக்கும் தாங்களே பொறுப்பாளி. எங்கள் மூத்த உடன்பிறப்பைக்கொன்று கொலைகாரர்களாக எங்களை ஆக்கியதும், தாங்கள் உண்மையை மறைத்த கொடுஞ்செயலால் அல்லவா தாயே!

இதனால் பெண்கள் சமுதாயம் எந்தவொரு இரகசியத்தையும் நீண்ட நாட்கள் கட்டிக்காக்க முடியாமற் போகட்டும் என்று சபிக்கின்றேன்.

---

**திரு. சி. பஞ்சாட்சரம்**
(அதிபர்)
மட்/கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலயம்

---

கால் தடுமாறினால் சமாளித்துக்கொண்டு நிற்கலாம். ஆனால் நாக்குத் தவறினால் நீங்கள் மீளவே முடியாது. (ஒரு அறிஞர்)

# குறுக்கெழுத்துப் போட்டி

முயலுங்கள் பரிசு உண்டு. உடன் கீழே உள்ள ஆசிரியருக்கு தாங்களாகவே வெள்ளைத்தாளில் தயாரித்து அனுப்புங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 6 |
| 7 | 8 | | | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | | 18 |
| 19 | | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | | 35 | |

அடைக்கப்பட்டவை - 5, 9, 10, 17, 20, 27, 34, 36.

### இடமிருந்து வலம்

1. இராமனின் பாதம் பட்டு சாபம் நீங்கியவள்

7. இதற்கு கம்பன் சக்கரவர்த்தி

11. இது வந்தால் பத்தும் பறக்கும் என்பர்

14, பெண்ணை இவ்வாறும் அழைப்பர்

21. ஆசிரியருக்கும் மாணவருக்கும் முக்கியமானது (குழம்பியுள்ளது)

31. சூரியனிலிருந்து இதன் மூலமே உலகுக்கு ஒளி வந்தடைகிறது. (குழம்பியுள்ளது)

35. உடம்பின் ஓர் அங்கமான இது இன்றி எதுவும் செய்யமுடியாது.

### மேலிருந்து கீழ்

1. குறுமுனிவர்

2. செய்யுளை இவ்வாறும் கூறுவர்

6. தசரதனின் குலகுரு தெய்வப் பசுவை உடையவர்

16. தமிழர் அணியும் உடை (மாறியுள்ளது)

23. இதைக்கொண்டே பரதன் நாடாண்டான் எனக் கூறப்படுகிறது

26. ஏதும் நடந்தால் இதைத்தான் காரணமாக மக்கள் கூறுவர்.

( முயன்று பாருங்கள் )

**செல்வி. சீ. லோகேஸ்வரி**
மட் / வாழைச்சேனை இ. க.
வாழைச்சேனை.

# சமூக மேம்பாட்டில் சமயக்கல்வியின் பங்கு

கல்வி எனப்படுவது தனியே ஒருவனுடைய பட்டப்படிப்பை மட்டும் குறிப்பிடுவதல்ல. மனிதனிடையே மறைந்து கிடக்கின்ற அறிவு, திறன், மனப்பாங்கு போன்றவற்றை வெளிக்கொணர்ந்து ஒருவனை சமூகத்திற்குப் பொருத்தப்பாடுடையவனாக மாற்றிக்கொள்வதற்கும், நற்பிரஜையாக வாழ்வதற்கும் தன்னுடைய மனவெழுச்சிகளை நேர்மையான முறையில் வெளிக்கொணரச் செய்வதற்கும் வழிகாட்டுவதாகும்.

கல்வியில் பலதுறைகள் காணப்பட்டாலும் சமயக் கல்வியே ஒருவனை முழு மனிதனாக்கும். ஒரு சமூகம் மேம்பாடடைவதற்கு ஒவ்வொரு மனிதனுக்கும் ஒழுக்கம் அத்தியாவசியமானதாகும். இதனை திருவள்ளுவரும் ''ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என வலியுறுத்துகிறார். இன்று ஒழுக்கச் சீர்கேட்டினாலேயே உலகின் பலபாகங்களிலும் அநியாயங்களும் அட்டூழியங்களும் குறைவிலாது இடம்பெறுகின்றன. எனவே இவ் ஒழுக்கச் சீர்கேட்டை நிவர்த்தி செய்வதற்குச் சிறந்த ஊடகமாகத் திகழ்வது சமயக் கல்வியாகும். சமயக்கல்வி மூலமே மாணவரிடையே இலகுவாக ஒழுக்க மேன்மையை வலியுறுத்தலாம். சட்டத்திற்கு அடிபணியாதவன் கூட ஆழ்ந்த சமயப்பற்றினால் சமயத்திற்கும், மத சட்டங்களுக்கும் அடிபணிந்து விடுகிறான்.

''மக்களின் உடல், உள்ளம் ஆன்மா ஆகியவற்றின் இயற்கைப் பேறுகளை வெளிக்கொணர்ந்து விளக்கம் செய்வது கல்வி'' என காந்தி அடிகள் கூறியுள்ளார். இங்கு குறிக்கப்பட்ட ஆன்மா பற்றிய விளக்கம் தருவது சமயக் கல்வியாகும். உலகின் எல்லா நாடுகளிலும் உள்ள கல்வி முறைகளில் சமயக் கல்வி முறையே முக்கியமானதும் தொன்மையானதுமாகும். மனித வாழ்க்கைக்கு என்றும் அடிப்படையாக இருக்கவேண்டிய ஆன்மீக நெறியைக் கூறுவதே சமயக்கல்வியாகும். சமய நெறி என்பது வாழ்க்கை நெறியாகும் என்பதற்கு சமயநெறியில் நின்று வாழ்ந்துகாட்டிய மகான்களின் வாழ்க்கை வரலாறு மக்களுக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. இதற்குச் சிறந்த உதாரணமாக ஆறுமுக நாவலர் அவர்கள் ''மக்கள் சேவையே மகேசன் சேவை'' என்பதற்கிணங்க வாழ்ந்து காட்டினார்.

வேத நூல்களான பகவத்கீதை, தம்மபதம், திருக்குர்ஆன், பைபிள் போன்றவை மனிதன் வாழ்வில் கடைப்பிடித்து நடக்க வேண்டிய அறநெறிகளையே சுட்டிக்காட்டுகின்றது. பகவத்கீதையில் பாண்டவர்களும் கௌரவர்களும் ஒன்றுவிட்ட சகோதரர்களாயிருந்தும் அவர்களிடையே காணப்பட்ட முரண்பட்ட கருத்துக்களால் போர் செய்கிறார்கள் இங்கு அறத்தின் வழி ஒழுகிய பாண்டவர்களுக்கு வெற்றியும் மறத்தின் வழி செயல்பட்ட கௌரவர்களுக்குத் தோல்வியும், ஏன் இறுதியில் அழிவும் ஏற்படுகிறது. இதற்கு மன்னிக்கும் மனப்பான்மை, விட்டுக்கொடுக்கும் தன்மை போன்ற இன்னோரன்ன தன்மைகளே காரணம் என்பதை கீதை கூறுகிறது. கிறிஸ்தவர்களின் பைபிள் எனும் நூலில் யேசுகிறிஸ்து கூறுகிறார் ''ஒருவன் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு என்று. இது மனிதர் ஒவ்வொருவருக்கும் மன்னிக்கும் மனப்பான்மை இருக்கவேண்டும் என்பதனைக் காட்டுகிறது. புத்த பெருமானும் தன்னுயிர்போல் பிற உயிரையும் மதித்து அன்பு செலுத்தவேண்டும் என்ற அகிம்சைத் தத்துவத்தையே

போதித்தார். இவர் ஒரு சந்தர்ப்பத்தில் ''பிள்ளையைக் கொன்று கறி சமைத்தீர் அதன் பெற்றோரை உண்ண அழைத்து வந்தீர்'' என்று உயிர்கள் பலியிடுதலை மறுத்துரைக்கின்றார், அம்பினால் காயமடைந்த புறாவிற்கு நீதிமன்றம் சென்று நீதி கேட்கிறார் இவ்வாறே நபிகள் நாயகமும் சகோதரத்துவ மனப்பான்மையை வளர்க்கவேண்டும் எனக் கூறுகிறார். இவ்வாறு மதங்கள் எல்லாம் கூறுகின்ற கருத்துக்கள் அனைத்தும் சமூக மேம்பாட்டிற்கு அத்தியாவசியமானவையே. எனவேதான் மதங்கள் காட்டுகின்ற வழிமுறைகளைப் பின்பற்றி சமயக்கல்வியை மாணவரிடையே புகட்டுவது சிறப்பானதாகும்.

ஆதிகாலத்தில் மக்கள் இறைவன் எழுந்தருளியுள்ள சந்நிதானத்திலேயே சகல கலைகளையும் கற்றார்கள் கோயில் குருக்களே ஆசிரியராகவும் திகழ்ந்தார். சமயக்கல்வியின் மூலம் அன்பு, தியாகம், அடக்கம், பணிவு, மனிதத்தன்மை, தயவுதாட்சண்யம், கடமை உணர்வு போன்ற அடிப்படைப் பண்புகளைப் போதிக்கவேண்டியது இன்றைய ஆசிரியர்களின் பொறுப்பாகும். ''கடமையைச் செய் பலனை எதிர்பாராதே'' ''நன்றே செய் அதனையும் இன்றே செய்'' என்கடன் பணி செய்து கிடப்பதே'' போன்ற கடமை உணர்வுடன் கூடிய முதுமொழிகளை மாணவர்களிடையே கூறவேண்டும். அன்று அப்பர் ஆலயத்தொண்டே செய்தார் என்றால் தேவாலயமும் வித்தியாலயமும் ஒன்றாயிருந்த காரணத்தால் அத்தொண்டு கல்வித்தொண்டாயிற்று. இன்றைய பாடசாலைகளில் மாணவர்களிடையே சமயக்கல்வி என்றால் ஓர் அலட்சிய மனப்பாங்கு காணப்படுகிறது ஏன் சில ஆசிரியர் மத்தியில்கூட இவ்வாறான மனப்பான்மை காணப்படுவது வேதனைக்குரிய விடயமாகும். மாணவர்கள் கணித, விஞ்ஞான பாடங்கள் கற்பதிலே காட்டுகின்ற அக்கறை சமய பாடத்தில் காட்டுவது குறைவு. இவ்வாறான தன்மை நீங்க வேண்டும்.

சமயக்கல்வியானது மனிதனுக்கு வாழ்க்கை நெறி ஒழுக்கம் பண்பாடு அனைத்தையும் அளிப்பதோடு ஆன்ம அமைதியையும் கொடுக்கிறது. சமய இலக்கியங்களை ஆழ்ந்து நோக்கும்போது அன்பு, வீரம், தன்னடக்கம், பரிவு, தியாகம் போன்ற பல முத்துக்களடங்கிய ஆழ்கடலாகச் சமயம் விளங்குகின்றது. எனவே சமயக்கல்வியை அனைவரும் கற்ப தன்மூலம் சமூக மேம்பாட்டிற்கு வழிசமைக்கலாம் என்பதே உறுதி.

---

ஆக்கம்:

**செல்வி. ம. வசந்தி**

மட்/புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயம்,
வாழைச்சேனை.

---

❀ கல்வி - கல்வி - கல்வி. மிகச் சிறந்த கல்வி அள்ளிக்கொடுங்கள் இளைஞர்களுக்கு! அதைவிட நாம் நம் நாட்டுக்குச் செய்யவேண்டிய அவசரமான காரியம் வேறொன்றும் கிடையாது. **(சிசிரோ)**

❀ ஆசையை அடக்குபவன் ஞானியல்ல. அழிப்பவனும் ஞானியல்ல. ஆசையை மனத்தில் ஒட்டாத பரிபக்குவத்தையுடையவனே ஞானி. **(ஞானி)**

❀ வெற்றியின் இரகசியம் உறுதிப்பாடு. **(தோமஸ் அல்வா எடிசன்)**

ஆண்டுதோறும் தீபம் சுடர்விட்டுப் பிரகாசிக்க
நல்வாழ்த்துக்கள்

உள்நாட்டு, வெளிநாட்டு மதுபான வகைகளுக்கு

★ நீங்கள் நாடவேண்டிய இடம் ★

# டிஸ்ஸோ வைன் ஸ்ரோர்ஸ்

## பிரதான வீதி, வாழைச்சேனை.

☎ 065 - 7249.

ஆசிரியர்களுக்கும் அவர்கள் பணியால்
மலர்ந்த மலருக்கும் வாழ்த்துக்கள்

தரமான பலசரக்குப்
பொருட்களுக்கும்,
சில்லறைச் சாமான்களுக்கும்

வாழைச்சேனையில் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

## சந்திரா ஸ்ரோர்ஸ்

மெயின் வீதி, வாழைச்சேனை.

ஆசிரிய தீபத்திற்கு எமது
மனங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

☆ புதிய, பழைய
திரைப்படங்களுக்கும்

☆ புதிய, பழைய பாடல்களைப்
பதிவுசெய்து கொள்ளவும்.

☆ சொகுசு நிறை திரையரங்கு
காட்சிகளுக்கும்

வரணி... வரணி... வரணி...

கொழும்பில் வெளியாகி மறுதினமே
வாழையூரில் வெளியிடுவோர்

## வரணி வீடியோ ஓடியோ விஷன்

விபுலாநந்தர் வீதி,
வாழைச்சேனை.

கவிதை

# யார் இந்த ஆசான்?

தேசமதன் வித்துக்களாயின்று
    தேர்ந்துவரும் மாணவர்க்கு - சமூக
தேவையுணர்ந்து கற்பிக்க
    தேர்ச்சி பெற்றோனேயாசான்

கல்வி நனை கற்று நல்
    கனதியான அறிவுசேர்த்து - மாந்தர்
பாசமுடன் பரிவு கொண்டுவாழ
    பழக்குபவன் தானேயாசான்.

மானிடரென்றும் வாழ்க்கை
    மரபுகளை பேணிவாழ - நாளும்
ஏணி போலிருந்து நல்ல
    ஏற்றம் காண்பவனேயாசான்.

வாழ்வதன் விழுமியங்களின்று
    வாழ்விழந்து போனதாலே - உலகில்
வாழ்வதற்கேற்ற வழிகாட்ட
    கோல் பிடிப்பவனேயாசான்.

உலகமின்று சிறுகுடும்பமிங்கு
    ஊறிவிட்ட தொல்லைகோடி - எனவே
ஆழமகலமாயறிவூட்டியதை
    அறுத்துவிட வல்லோனேயாசான்.

வாழும்வரை மாணவராயிருந்து
    நாளும்புவி மாறும்நிலைகற்று - மாணவ
அறிவுதிறன் மனப்பாங்கில்
    அற(றி)வொளி ஏற்றுவோனேயாசான்.

"நன்றி"

திரு. ஏ. மகேசன்
ஆசிரியர்
மட்/சந்திவெளி சி. வி. வித்.

# "அன்பும் அறிவும்;

# பண்பும் பணிவும்"

உலகில் மனிதர்களாகப் பிறந்துவிட்ட அனைவருக்கும் இருக்கவேண்டியவைகள் என மேற்சொன்ன அம்சங்களை நான் நினைத்துப்பார்க்கிறேன். இவைகள் எல்லா மனிதர்களிடமும் இருந்துவிட்டால் வீடு, சமுதாயம், நாடு, தேசம் எல்லாம் எவ்வளவு இனிமையாகவும், சந்தோஷமாகவும் இருக்கும் எனக் கற்பனை செய்து பார்க்கும்போதே எவ்வளவோ ஆனந்தமாக இருக்கிறது.

மேற்சொல்லப்பட்ட அம்சங்கள், நமது மக்கள் மத்தியிலே அனேகமாக ஏன் இடம் பெறவில்லையென என் மனம் அங்கலாய்க்கின்றது, சிந்திக்கின்றது. சிந்தித்தபோது பின் வரும் சில எண்ணக்கருத்துக்கள் தோன்றின.

கர்வம்:

இது நிறைய நம்மக்கள் மத்தியிலே வியாபித்திருக்கிறது. அதுவும் படித்தவர்கள் மத்தியிலே இது நிறைய இடம்பிடித்திருப்பது கவலைக்குரியது இதை எண்ணும்போது ''கல்வி கற்றோமென்ற கர்வத்திலே இன்பம் கண்டவர் உண்டோ சொல் என்தோழா, கல்லாத பேரையெல்லாம் கல்வி பயிலவைத்துக் காண்பதில்தான் இன்பம் என்தோழா'' என்று ஒரு கவிஞன் பாடிய பாடல் வரிகள் என் நினைவில் வருவதுண்டு.

கர்வம், ஆணவம், செருக்கு, தலைக்கனம் இவைகளெல்லாம் பெரும்பாலும் ஒரே கருத்தைக் கூறுபவை, இவைகள் நம்மக்கள் மத்தியில் நிறைந்திருப்பது ஒரு துரதிஷ்டமான நிலமை.

ஒற்றுமையின்மை:

இதுதான் நமது முதல் எதிரி. அதுவும் நம்மக்களை மிகுந்த துன்பக்கடலில் மூழ்கடித்துக்கொண்டிருக்கும் ஒரு நோய். எப்போது நமது மக்கள் ஒரு கொடியின்கீழ் அணி திரள்கிறார்களோ அன்றுதான் நமக்கு விமோசனம் என்று நான் எண்ணாத வினாடி, நிமிடம், மணித்தியாலம். நாள், வாரம், மாதம், வருடம் இருக்கமுடியாது.

புரிந்துணர்வின்மை:

நாம் ஒவ்வொருவரும் நமது மனச்சான்றைக் கேட்போம், நமக்கு புரிந்துணர்வு உண்டா என்று, சட்டம் இருக்கிறது, நடைமுறை இருக்கிறது, விதிவிலக்கு இருக்கிறது, மனிதாபிமானம் இருக்கிறது இவையெல்லாமிருந்தும் நம்மில் பலருக்கு புரிந்துணர்வு இருப்பதில்லை காரணம் நான் இந்த ஆக்கத்தில் குறிப்பிட்ட தலைக்கனம் புரிந்துணர்வதற்கு அனுமதிப்பதில்லை.

அன்பு, அறிவு, பண்பு, பணிவு இந்த அம்சங்கள் நிறைந்திருப்பவர்களை என்னால் இனங்காணமுடியும். இவர் இனங்கண்டு எதைச் சாதிக்கப்போகிறார் என்று சிலர் முணுமுணுப்பது எனக்குக் கேட்கின்றது.

நான் சாதாரணமானவன் ஆனால் என்னால் மேற்படி அம்சங்கள் கொண்டவர்களின் நலன்களுக்காக நிறையப் பிரார்த்திக்கமுடியும். எனது பிரார்த்தனை அவர்களை ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் காப்பாற்றும் என்பது

எனது நம்பிக்கை. இப்படி நான் செய்வதெல்லாம், சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டுமென்ற அவசியமே இல்லை. நான் அதை எதிர்பார்ப்பதுமில்லை. இறைவனும் என் மனச்சான்றும் அறிந்திருந்தால் போதுமானது.

ஆசைகள் மனிதர்களிடம் இருப்பது இயல்பு. அவை பேராசைகளாக மாறும் போதுதான் பிரச்சனைகளே உருவாகின்றன, அதுவும் தங்கள் பேராசைகளை நிறைவேற்றுவதற்கு மற்றவர்களைக் குழப்பும்போது முரண்பாடுகள் தோன்றி அனைவரையும் துன்பத்திலாழ்த்தி விடுகின்றன.

மனிதனாகப் பிறப்பது மற்றவர்களுக்கு உதவிசெய்து வாழ்வதற்கே என்று ஆத்மஞானிகள், அறிஞர்கள் அனைவரும் கூறுகிறார்கள். இன்றையச் சூழ்நிலையில் மற்றவர்களுக்கு உதவாவிட்டாலும் உபத்திரவமில்லாமல், துன்பமில்லாமல் வாழ்ந்தால் அதுவே நாம்செய்யும் பெரிய தொண்டாகும்.

நான் இந்த ஆக்கத்தின் தலையங்கத்தில் குறிப்பிட்ட நான்கு அம்சங்களும் நம் மக்களிடம் மேலோங்கி வளரவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

---

**நா. கதிர்காமத்தம்பி**

அதிபர்

மட் / வாழைச்சேனை இந்துக் கல்லூரி.

---



Best Wishes to Asiriya Theepam !

**NADA CIVIL ENGINEERING ( PVT ) LTD.**

**Civil Engineers & General Contractors**

**( I C T A D )**

Regd. No: 05182426.



Proprietor & Director

**Mr. N. R. Pathmanathan**

No. 6, Vanniah's Road,

**BATTICALOA.**

065 - 2503.

" Best Wishes to Asiriya Theepam "

பாவனையாளர்களே !

எங்களிடம் சிங்கர் தையல் மெஷின்,
குளிர்சாதனப் பெட்டிகள், மற்றும் லுமாலா, றலே,
ஹீரோ சைக்கிள்கள், அன்றாடம் தேவைப்படும்
அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தையும்
நியாய விலையில் பெற்றுக்கொள்ள

# T. L. T.

**Haj T. Lebbe Thamby & Brothers**

**Mosque Street — VALAICHENAI.**

☎ 065 - 7245.

ஆசிரியர்களுக்கும், மலர்ந்த
தீபத்திற்கும் வாழ்த்துக்கள் !



எடுப்பான தோற்றத்திற்கும்,
தரம் குன்றா அழகிய 22 கரட்
பவுனுக்கும்

நம்பிக்கையான மஹால்

**'தங்கமஹால் ஜுவலரி'**

பிரதான வீதி.
வாழைச்சேனை.

*தீபமே உன்சுடர் பிரகாசிக்கட்டும்!*



ரமணா
வீடியோ விஷன்
கல்குடா வீதி, பேத்தாழை,
வாழைச்சேனை.

வீடியோ பிரதிகளை
வாடகைக்கும்,
பிரதி செய்யவும், தரமான
வீடியோ படப்பிடிப்பிற்கும்,
நாடவேண்டிய ஒரே இடம்

**Ramana Video Vision**
VALAICHENAI.

# Notes of Lesson, Scheme, Record of Work

# Vs

# School Development

பாடசாலைகளிலே ரீம் இன்ஸ்பெக்ஷன் என்றால்; நோட்ஸ் ஒஃப் லெசன், ஸ்கீம், றெக்கோட் ஒஃப் வேக் எனும் சொற்கள் பிரபல்யம் பெற்று மீண்டும் மறைவதனை நாம் காணலாம்.

இது உண்மையிலேயே பிரச்சினைக்குரிய ஓர் விடயமா?

பிறப்பு, இறப்பு, விவாகம், விவாகரத்து, சொத்துக் கொள்வனவு, வீட்டுச் செலவுகள் ஆகிய எந்தப்பதிவுகள் பற்றியும் பெரிதாக விமர்சிப்பதில்லை.........

ஆனால் வகுப்பறைகளில் சில ஆசிரியர்கள், தாங்கள் கற்பித்த பாடங்களைக்கூடப் பதிவதில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்க முடியாமல் திண்டாடுவதனை நாம் காண்கிறோம்.

பாடப்பதிவினைக்கூடச் செய்யமுடியாவிட்டால், எமது உரிமையினை நாம், வேறு யாருக்கோ விட்டுக்கொடுத்த மாதிரி ஆகிவிடாதா என்ன?

முறையாகப் பாடத்தினைத் திட்டமிட்டுக்கொண்ட ஒருவர் நிச்சயமாக ஒழுங்காகக் கற்பிப்பார். தனக்குரிய நாற்பது நிமிடங்களில் அவர் பாடப்பதிவிற்கும் இடமளித்திருப்பார். பாடப்பதிவில் கண்ணுங்கருத்துமாக இருப்பவர்கள் பாட ஆரம்பத்திலேயே உரிய கூட்டினை நிரப்பிவிடுவதும் உண்டு.

பாடக்குறிப்பினை முறையாகத்தயாரிக்க முடியாதவர்கள் அல்லது முற்றாக எழுதாத ஆசிரியர்களைப் பின்வருமாறு பட்டியல் படுத்துவோம்.

1. சாணக்கியம் நிறைந்தவர்கள்.
2. பாடசாலை நிருவாகத்துடன் நெருங்கி உறவாடுபவர்கள்.
3. தனிப்பட்ட, பாடசாலை, கல்வி நிருவாக ரீதியில் பாதிப்புற்றோர்.
4. உரிய நடைமுறையினை ஏற்காதோர்.
5. தாங்களாகவே தலைக்கு மேலே வேலைப்பழுவை ஏற்றுக்கொள்வோர்:
6. முறையாகப் பாடக்குறிப்பு எழுதவேண்டும் என விமர்சிப்போர்.
7. கல்வியிலே அளவுக்கதிகமாக நாட்டங்காட்டுபவர் எனத் தம்மைத் தாமே கூறிக்கொள்பவர்.
8. இயற்கையிலேயே சோம்பல்மிக்கவர்கள்.
9. எழுதத்தெரியாதவர்கள் அல்லது மயக்கமுள்ளவர்கள்.
10. சாதாரண விடயங்களுக்கெல்லாம் லீவில் நிற்பவர்கள்.
11. ஏமாற்றுபவர்கள்.
12. ஆசிரியத் தொழிலை இரண்டாம் இடத்தில் வைத்திருப்பவர்கள்.

13. பழுத்த அனுபவம் உடையோர் எனக் கூறிக்கொள்வோர்.

14. அதிபர்கள், பிரதி அதிபர்கள்.

வாத்தியக் கருவியினை வைத்திருப்பவன் தான் நினைத்தபடி அதனை நீட்டி முழக்க முடியாது.

சட்டத்தினைக் கரைத்துக்குடித்தாலும் நீதிபதி நிரபராதியைக்கூடச் சிறையில் அடைத்து விடுவதனை நாம் காண்கிறோம்.

ஆக, நாற்பது நிமிடங்களை நாம்முறையாக ஆட்சிசெய்ய முடியாது என்று கொள்ளலாமா?

இங்கிலிஷ் எவ்றிடே - ஆண்டு 8 ஆங்கிலப் புத்தகத்தில், 25ம் பக்கத்தில் இலங்கையில் நடைபெற்ற உண்மைச்சம்பவம் ஒன்று காணப்படுகின்றது.

சிறுத்தையினை விடச் சாதுரியமாகப் பதுங்கிச்செல்லக் கூடியவரும், குள்ளநரியை விடவும் தந்திரமுடையவரான ஒருவர், மான் கொம்புகள் சேகரிப்பதற்காக காட்டிற்குச் செல்கிறார்.

''வனம் என்பது, என்னுடைய தோட்டத்தினை விடவும் எனக்குப் பழக்கப்பட்டவொன்று, அங்கு சில இலைகளும் புதர்களும், முட்டாள் தனமான மிருகங்கள் சிலவுமே உள்ளன. பயப்படுவதற்கு அங்கொன்றும் இல்லை'' என்று சொல்லிச் சென்றவரின் கதி என்னவாயிற்று?

யானையினால் துகள்களாக்கப்பட்ட எலும்புத்துண்டுகளுக்கிடையிலே கிடந்த கீலங்களாக்கப்பட்ட சிவப்புத்துணித் துண்டுகளையும் வெற்றிலைக்குட்டானையுங் கொண்டே அவர் இறந்து விட்டதை எழுத்தாளர் ஊர்ஜிதம் செய்கிறார்.

இலங்கை முழுவதும் இச்சீரழிவு இருக்கும்போது நாம்மட்டும் அலுத்துக்கொள்வானேன் எனச்சிலர் நினைக்கலாம்

இம்மாவட்டத்தில், எமதுபகுதியில் கல்வி மேல்நிலையில் இருந்தால் நாம் அலுத்துக் கொள்ளத் தேவையில்லை.

இச்சீரழிவு தடுக்கப்பட வேண்டின்:

1. கல்வியில் நிர்வாகச் சீர்கேடு சகல மட்டங்களிலும் களையப்படுகிறது எனும் நிலையினைச் சகலரும் ஏற்கவேண்டும்.

2. பாடசாலைகளின் நிர்வாகங்கள் சீர்செய்யப்படல் வேண்டும்.

3. மேற்பார்வை ஒழுங்கும் ஒழுங்காற்று நடவடிக்கையும் வேண்டும்.

4. ஒழுங்கானவர்களின் கௌரவிப்பில் ஒழுக்கம் பேணப்படல் வேண்டும்.

5. தொழிலில் அக்கறையின்மையும் அநாயாசப்போக்கும் தவிர்க்கப்படல் வேண்டும்.

6. ஆசிரியம் அனைவராலும் மதிக்கப்படல் வேண்டும்

மட்டக்களப்பின் வடக்குப்பகுதியில் குறிப்பாகத் தமிழ்மக்களின் கல்விக்குச் சகல தமிழர்களும் சாவுமணி அடித்துக்கொண்டே இருக்கிறார்கள் என்று சொல்லுமளவிற்குத் தான் காரியங்கள் இடம்பெறுகின்றன.

இதனால் அக்கறை உள்ள ஆசிரியர்கள் அலுத்துக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

பாடக்குறிப்பு, பாடத்திட்டம், பாடப் பதிவு என்பது, பூனைக்கு மணிகட்டும் வேலையல்ல.

பூனைகளே கட்டிக்கொள்ளவேண்டிய மணியாகும்.

இல்லாவிட்டால் நிச்சயமாக எல்லோரும் கல்விக்குச் சாவுமணியை உரக்க ஒலிக்கச் செய்தவர்களாவோம்.

பாட ஆசிரியர், வகுப்புத்தலைவர், வகுப்பாசிரியர். தர இணைப்பாளர், பாட இணைப்பாளர், பகுதித் தலைவர், உப அதிபர், பிரதி அதிபர், அதிபர், சேவைக்கால ஆலோசகர்,

பிரதேசக் கல்விப்பணிப்பாளர், பிராந்தியக் கல்விப்பணிப்பாளர் என; அதிகாரமட்டங்கள் எது காணப்பட்டாலும் தன் உணர்வு, குடும்ப உணர்வு, சமூக உணர்வு, சமுதாய உணர்வு இல்லையெனில் கடமையுணர்வும் இல்லையே.

சகல பாடங்களிலும் உள்ள இடைத் தொடர்பினை புத்திசாலியான மாணவன் மட்டுமே உணர்வானேயன்றி இன்றைய ஆசிரியர்கள் அல்ல ஏன்? அதிகாரிகளும் அல்ல எனக் கல்வியியலாளர்கள் கூறுவதில் உண்மை இல்லாமல் இல்லை.

பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் கீழ்ப்பிரிவு, இடைநிலைப் பிரிவுகள், உயர் தரம் ஆகியவற்றில் பாடங்களுக்குரிய ஆசிரிய குழுமங்கள் ஒருமைப்படும்போது எல்லாப்பாடங்களுக்கும் எல்லா ஆசிரியர்களுக்குமுரிய இலகுவான பாடக்குறிப்பும் பாடத்திட்டமும் தயாரித்துக்கொள்ள முடியும் என்பது வெறும் முயற்கொம்புமல்ல ஏட்டுச்சுரக்காயுமல்ல.

தேசிய கல்வி நிறுவகத்தினால் சிலபாடங்களுக்கு சிலவகுப்புகளுக்கு மாத்திரம் பாடக்குறிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

சில அதிகாரிகளும் சில ஆசிரியர்களும் எமது பிரதேசத்திலேயே பாடக்குறிப்பு எழுதுவதில் ஓரளவாவது வல்லமை உள்ளோராய்க் காணப்படலாம்.

வேளைக்கொரு வேஷமும் ஆளுக்கொரு கோலமும் வேண்டாம் என நினைப்பவர்கள் ஒன்றுபட்டு உழைக்க நினைக்காவிட்டால் இருப்பதும் இல்லாமல் போகலாம்.

எந்த ஒரு எண்ணக்கருவிற்கும் நிரந்தர வரைவிலக்கணம் இல்லை. அறிவுத்தொகுதியின் வளர்ச்சிக்கு ஏற்ப அது மாறுபடலாம். இப்போது எம்மிடம் இருக்கும் அறிவுத் தொகுதிக்கு ஏற்ப நாம் ஒரு பொதுமைப் பாட்டிற்கு வரவேண்டும். ஆகக்குறைந்தது பாடக்குறிப்பு, பாடப்பதிவு, பாடத்திட்டம் ஆகியவற்றிலாவது அது ஆரம்பிக்கப்பட வேண்டும். அவ்வாரம்பம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு கடைப்பிடிக்கப்படவும் வேண்டும்.

அப்படி முடியாவிட்டால் சந்திரனில் அமெரிக்கர் காலடிவைத்து முப்பது ஆண்டுகள் என்ன முந்நூறு ஆனாலும், எல்லாம் வெறும் வாய்ச்சௌடாலாகவே முடியுமே தவிர வேறொன்றுமில்லை. இதுவும் கூட விழலுக்கிறைத்த நீரே, ஆய்விடும்.

---

**மு. தவராசா**
உதவி ஆசிரியர்
மட்/மிராவோடை அ. த. க.
வாழைச்சேனை.

---

- தாழ்ந்த இலட்சியத்தில் வெற்றி பெறுவதை விட உயர்ந்த இலட்சியத்தில் தோல்வியடைவதே மேல். **(பிரௌனிங்)**
- நூலறிவு பேசும் மெய்யறிவு கேட்கும்.
- மரியாதை நம் கடன் அன்பு நம் கொடை.
- கல்விக்காக உயிரை அர்ப்பணித்தவன் மரணமடைவது இல்லை. **(முகம்மது நபி)**

# அணையாத தீபம்

இரவு பத்து மணிக்கு மேலாகியும் சுமதி யால் தூங்கமுடியவில்லை. புரண்டு புரண்டு படுத்தாள். வானத்தின் நிலாவொளி யன்னல் கம்பிகளின் ஊடாக பரவியது. படுத்திருந்த அவள் பட்டுமேனியின் அழகை பால் போல் எறித்த நிலா பளிச்சிட வைத்தது. ஏதோ நினைவு வந்தவனாய் சுமதி என அழைத்த சங்கர் அவளின் கண்களால் வழியும் நீரினை காணத் தவறவில்லை.

ஏய் என்ன சுமதி என்ன? ஏன் என்று பதறியவாறு அருகில் சென்றான் அவள் கணவன் சங்கர். ஒன்றுமில்லீங்க என்றவள் நாளை அம்மா செத்து இரண்டு வருடம் ஆக போகிறது. ஓ அதுவா? ஏன் இந்த நேரத்தில் இப்படி அழுகின்றாய்? நாளைக்கு நாம கோயிலுக்கு போகவேண்டும் பூசைக்கு கொடுத்து சுமங்கலா ரீச்சர் பேரில் அர்ச்சனை செய்யவேண்டும். ஆயிரம் வேலையிருக்கு இப்படி ''அழுது வடிஞ்சா என்னாலையும்'' ஒன்றும் செய்யமுடியாது. நாளைக்கு எனக்கு School வேலை நிறைய இருக்கு. பேசாம படுத்து தூங்கு என்றான். சங்கர் அவனது வேலையை முடிப்பதற்காக நகர்ந்து விட்டான். அவள் எப்படி தூங்குவாள் அவள் நினைவலைகள் பின்னோக்கி வீசியது.

அன்று சுமதி ஏன் பாடசாலைக்கு நேற்று வரவில்லை என ஆசிரியை சுமங்கலா கேட்க சுமதி அசையாமல் நின்றாள். ஆனால் அவள் கண்களில் இருந்து பொல, பொல என்று நீர் வடிந்தது. ரீச்சருக்கு ஏன் கேட்டோம் என்று இருந்தது. சுமதியை இடத்தில் இருக்க சொன்ன ஆசிரியை அவளைப்பற்றிய விபரங்களை சக மாணவர்களிடம் இருந்து அறிந்துகொண்டாள். சுமதி தாய் தந்தை யற்ற பிள்ளை என்றும் அவள் பாட்டி வயதானவள் என்றும் சுமதியை கவனித்து கொள்ள பாட்டியால் முடியாத நிலையிலும் உள்ளாள். என்கின்ற உண்மையை சக மாணவர்கள் மூலம் அறிந்துகொண்டாள் சுமங்கலா, அவள் சுமதியின் பாட்டியை சந்தித்து தான் சுமதியை தத்தெடுக்க விரும்புவதாக தெரிவித்தபோது சுமதியின் பாட்டி கரம் கூப்பி சம்மதித்தாள். எட்டு வயது சிறுமியான சுமதி தனது ஆசிரியை வீட்டிற்கு அழைத்து வரப்பட்டாள். புதிய சூழல் புதிய வீடு எல்லாம் புதிதாக இருந்தது. அந்த புதிய வீட்டில் புது செல்வாக்கு பெற்றிருந்தாள் சுமதி. பிள்ளை அற்ற அந்த வீடு சுமதியால் களைகட்டியிருந்தது. சுமங்கலா ரீச்சர் நகர பாடசாலையில் கற்பதற்கு சுமதியை அனுப்பினாள். சுமதியும் தம் கல்வியில் நன்கு கற்று பல்கலைக்கழகம் வரை படித்தாள். அனாதையாக நின்றவளை அன்போடு அறிவையும் ஊட்டி வளர்த்தாள் சுமங்கலா. அன்பே உருவான தன் ஆசிரியை சுமதி ஆசைதீர அம்மா! அம்மா! என்று அழைத்தாள். அவளும் சுமதியை பெற்ற பிள்ளையை கவனிப்பதைவிட பெரும் செல்லமாக கவனித்து வந்தாள். இன்றும் அவள் மனத்தில் பசுமையாக இருக்கின்றது. காலம் உருண்டோடிவிட்டது. சுமதிக்கும் வயது இருபத்தைந்து ஆகிவிட்டது.

சுமங்கலா சுமதிக்கு வரன் பார்க்கும் எண்ணம் கொண்டாள். சுமங்கலாவின் பாடசாலையில் படிப்பித்த சங்கர் என்ற ஆசிரியரை மருமகன் ஆக்கிகொள்ள ஆசைப்பட்டாள். அதற்காக சங்கரிடம் கேட்டபோது சங்கர் தனது அதிபரிடம் எதை சொல்வது என்று தெரியாமல் விழித்தான். காரணம்

அவள் பல்கலைக்கழகத்தில் அவனோடு ஒரே வருட வகுப்பில்தான் படித்தாள். சங்கருக்கும் சுமதிக்கும் ஏற்கனவே பழக்கம் ஏற்பட்டிருந்தது. ஒருநாள் ஆண்டு விழாவின் போது சுமதி பாடல் ஒன்றை பாடினாள் ''நேற்று இல்லாத மாற்றம் என்னது'' பாடலை கேட்ட சங்கரால் அவளை பாராட்டாமல் இருக்கமுடியவில்லை. பாராட்டுகள் தொடர்ந்து பரிணமித்தபோது காதலாக மாறியது. அவர்கள் இறுதியாண்டு வகுப்பில் கற்றபடியால் முற்றுவைக்க வேண்டியிருந்தது. எனவே அவர்கள் காதல் கடிதங்களுடன் மட்டும் நின்றிருந்தது. பூங்கா, பீச், பாக் என்று கொச்சை படுத்தி கொள்ளப்படவில்லை. சுமதியோ எப்பவும் தன் தாய் சுமங்கலாவை போல் சாந்தம் அமைதி கருணை பொறுமை என்பவற்றையே விரும்புவாள். வீண் ஆடம்பரங்களையோ ஆபரணங்களையோ விரும்பாத சுமதியின் அழகு அடக்கமாக துல்லியமாக இருந்தது.

அடர்ந்த நீண்ட கூந்தல் எழிப்பான சிவந்த மேனியும் நீண்ட புருவங்களும் அவனை வெகுவாக கவர்ந்தன.

சுமங்கலா சங்கரின் வீட்டிற்கு ''வரண்'' கேட்டு வந்தபோது சங்கரின் தாய் மகனிடம் விருப்பம் கேட்டாள். சங்கரோ எந்த வித மறுப்பும் இன்றி சம்மதித்தான். தனித்தவள் என்றாலும் தன் வளர்ப்பு மகளின் திருமணத்தை வெகு விமர்சையாக நடத்தினாள். திருமண வைபவம் நடந்து ஒரு மாதம் இருக்கும் திடீர் என்று எங்கும் ஒரே வெடிச்சத்தம் கேட்டது. சனங்கள் எல்லாம் பரபரப்புடன் எங்கு போவது என்று தெரியவில்லை அலறல் சத்தம் அதையும் மீறி குண்டுகள் பொழிந்தது. தூரத்தில் உள்ள கோயிலுக்குச் சனங்கள் ஓடின. தாங்களும் வெளியில் வர வந்த சங்கரை மறிக்க வந்த சுமங்கலாவின் நெஞ்சில் குண்டு பாய்ந்துவிட்டது ''ஆ ... வெடிப்பட்டுவிட்டது தங்கமே என்றாள் மகளிடம்'' அந்த வார்த்தையை தவிர வேறு எதுவும் அவள் பேசவில்லை. அவளின் உயிர் பிரிந்துவிட்டது மக்களுக்கா, பாடசாலைக்கா, சுமதிக்கா அவள் வாழ்வை அர்ப்பணித்த சுமங்கலா ''அணையாத தீபமாக அவர்கள் மனத்தில் எரிகின்றாள். சுமதி நினைவு திரும்பியபோது பொழுது புலர்ந்துவிட்டது. பக்கத்தில் அவள் கணவன் அயர்ந்து தூங்கி கொண்டிருந்தான்.

**திருமதி. கோவிலசோதி-ஆபிரகாம்**
மட்/கோறளங்கேணி அ. த. க. பாடசாலை.

---

❦ நாம் போதிக்கும்படி எல்லோரும் நடக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறோம். நாம் நடக்கிறபடி போதித்தால் எவ்வளவு ஆபத்தாக முடியும்

❦ அயலார்க்கு அன்பு செய்வதில் ஆனந்தம் காண்பவனே உண்மையில் இன்பம் துய்ப்பவன்.

❦ துக்கத்தை அனுபவித்த பின்னரே சுகம் நன்கு தெரிகிறது. நல்ல இருட்டிற்குப் பிறகே ஒளி பிரகாசிக்கிறது.

❦ வீண் ஆடம்பரம் செலவு செய்யாதே. அப்படிச் செய்பவர்கள் சைத்தானின் சகோதரர்கள்.

---

Best wishes to Theepam !

★ *General Hardware Merchants.*
★ *Agents for Crown Paints.*
★ *Water Pumps and Electric Motors.*
★ *S-lon and Electrical Goods.*
★ *"Arpico" Products.*
★ *Agent for Mitsui Cement.*

**Eastern Hardware Stores**

**ஈஸ்டன் ஹாட்வெயார்**

**No. 5, Second Cross, Bazaar Street,**
**BATTICALOA.**

065 - 4777, 065 - 2135.

*Best Wishes !*

**RAJESWARY STORES**

**Distributors for:**

- Ceylon Tobacco Co. Ltd.
- Unilever Ceylon Marketing Ltd.
- Evereday Battery Co. Lanka Ltd.
- Ceylon Nutritional Foods Ltd.
- Millers Ltd.

Prop: **K. K. Shanmugham**

No. 19, 21, Trinco Road,
Battiealoa.

065 - 2417, 065 - 2035.

ஆசிரிய தீபமே உனை
வாழ்த்துகின்றோம்.

- பாடசாலை உபகரணங்கள்.
- போட்டோ கொப்பி பேப்பர்.
- அச்சுக்குரிய கடதாசிகள்.
- சகல நிறத்திலுமான
மை வகைகள்

இத்துடன்
அங்கீகரிக்கப்பட்ட
கடதாசிக் கூட்டுத்தாபன
விற்பனை பிரதிநிதி

**யுனைற்றெற்**
**பு(B)க் சென்ரர்**

இல. 75/A, முனைத்தெரு,
மட்டக்களப்பு.

*065 - 2452.*

தீபமே உன் சுடர்
வெண் சுடராகட்டும்

சகலவிதமான பலசரக்குப்
பொருட்களையும்
சில்லறையாகவும்,
மொத்தமாகவும்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஸ்தாபனம்

**தனலக்ஸ்மி ஸ்ரோர்ஸ்**

**பிரதான வீதி,**
**வாழைச்சேனை.**

# பின்தங்கிய மாணவரின் விடிவுக்கு வழி

" பெய்கின்ற மழையும் எறிக்கின்ற வெயிலும் சமமாக
இருப்பது போன்று கல்வியும் எல்லோர்க்கும் சமமாக
இருக்க வேண்டும். " (காந்திஜீயின் கூற்று)

நமது பாடசாலைகளில் எந்த வகுப்பை எடுத்துக்கொண்டாலும், அந்தந்த வகுப்புக்கேற்ற தரமுடைய மாணவர் சுமார் இருபது, இருபத்தைந்து சதவீதமானவர்கள் மாத்திரமே இருக்கின்றார்கள் எனப் பொதுவாகக் கூறப்படுகிறது. கிராமப்புறப் பள்ளிக்கூடங்களில் இந்நிலை இன்னும் மோசமானதாகவே காணப்படுகிறது. பதினொராம் ஆண்டிற் கற்பிக்கும் ஆசிரியர், ''பத்தாம் ஆண்டில் கற்ற மாணவர்கள் சரியான முறையில் வகுப்பேற்றம் செய்யப்படவில்லை'' என்றும் அதனால் தகுதியற்ற ஒரு பெருங்கூட்டம் தனக்கு தலையிடியாக இருக்கிறது என்றும் குறைபடுகின்றார். ஆண்டு பத்து ஆசிரியரோ அதே குற்றச்சாட்டை .ஒன்பதாம் ஆண்டு கற்பித்த ஆசிரியர் மீது சுமத்தி வருகின்றார். இவ்வாறே ஆண்டு ஒன்று வகுப்புவரை இக்குறைபாடு கூறுவது நீண்டு செல்கிறது.

ஆழ்ந்து சிந்திக்கும்போது மேலெழுந்தவாரியாகக் கூறப்படும் இக்குற்றச்சாட்டுகள் ஆய்வு பூர்வமானவை எனக்கொள்ளல் பொருந்தாது. பிற்பட்ட - பிற்போக்கான - பின்தங்கிய இவ்வகை மாணவர் இரண்டு அல்லது மூன்று சதவீதமானவர்களாகவே இருக்கமுடியும். ஏனையோர் கற்கும் ஆற்றல் நிரம்பப் பெற்றவர்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஏனெனில் நமது கற்பித்தல் பாங்குகள், அதாவது நாம் மாணவருக்கு ஒரு விடயத்தை முதன்முதலாக ஊட்டும் முறை, அவர்களால் எளிதில் புரிந்து கொள்வதற்கு பொருத்தமற்றதாக இருக்கலாம். எனவே மாணவருக்கு எளிதாக புரிந்துகொள்ளக்கூடிய வகையில் நம் கற்பித்தல் அமைதல் அவசியமானது. சலசல என ஒலியெழுப்பிக்கொண்டு ஓடிவரும் ஓடைநீர் சில இடங்களில் தடைப்பட்டு நின்று விடுகிறது. நாம் அதனை ஆராய்ந்து பார்க்கும் போது வழியில் கட்டைகளோ, கம்புகளோ, வேறு ஏதும் பொருட்களோ நீரோட்டத்தைத் தடுத்துக்கொண்டிருப்பதை காண்கிறோம். அத்தடைகளை நாம் அகற்றிவிட்டதும் நீர் மீண்டும் ஓட ஆரம்பிக்கிறது. இது போலவே கற்றலின்போது மாணவருக்கு ஏற்படும் இடர்பாடுகளை நாம் ஆராய்ந்தறிந்து நீக்கவேண்டும்.

நாம் மேலே குறிப்பிட்டுள்ள குறைபாடுகள் வகுப்புகளில் காணப்படுகின்றன என்ற கசப்பான உண்மையை நாம் புறக்கணிக்க முடியாது. ஏதோ அவர்களும் தரம் குறைந்த நிலையில் வந்துவிட்டார்கள். என்று வாளாவிருத்தல் முறையாகாது. தன்னிடம் வந்த டைந்த நோயாளிக்கு சிகிச்சை செய்யும் வைத்தியரைப்போல, பிற்பட்ட மாணவனின் குறைபாடுகளையும் ஆசிரியர் நீக்குதல் வேண்டும். ஆகவே பழியை வேறு எங்கோ போடுவது பற்றி சிந்திக்காமல் ஆசிரியர்கள் ஒன்றிணைந்து மாணவர்களின் குறைபாடுகளுக்குத் தகுந்த பரிகாரம் காணல் கடமையாகும்.

ஆசிரியர்கள் தலைமேல் கைவைத்து அழத்தக்க அளவுக்கு மாணவரின் எழுத்துக்கள் தடம்புரண்டு கிடக்கின்றன. எழுதிய மாணவனைத்தவிர அவனது எழுத்தை வேறு எவரேனும் வாசிக்க இயலாதபடி அவன் எழுதி விடுகிறான். மாணவர் சிலர் தாம் எழுதிய எழுத்துக்களையே வாசிக்க முடியாமல் திண்டாடுவதும் உண்டு. பொதுவாக கீழ்க் காண்பன போன்ற எழுத்துக் குறை

பாடுகள் மாணவர் ஆக்கங்களில் காணப்படு கின்றன எனலாம்.

(அ) i. அ (அ) இ (இ) ஐ (ஐ) ஒ (ஓ) ஃ (ஃ) க (க) கூ (கூ) செ (செ) மே (மே) பி (பி)

ii. சொல் இடைவெளி விடாமை. கண்ணன் வெண்ணெய் தின்றான்.

iii. குறியீடுகள் உரிய இடங்களில் இடப்படாமை:- , ; : . " " முற்றுப்புள்ளி இடும் வழக்கம் அருகி வருகிறது.

iv. உறுப்பமைய எழுதுவதில் தேர்ச்சி யின்மை.

(ஆ) வாசிப்பதில் தேக்க நிலை

i. எழுத்துக்களில் ஒலி வேறுபாடுக ளில் தெளிவில்லாமை.

தமிழ்மொழியை பொறுத்தமட்டில் அதன் ஒலியமைப்பு ஆங்கில ஒலியமைப்பு முறையிலும் வேறுபட்டது என்பதைக் கருத்தில் கொள்ளுதல் சாலச் சிறந்தது.

தமிழில் "அ" (ஆனா) "ஆ" (ஆவன்னா) என்பது போன்ற குறில், நெடில் வேறுபாடு உள்ளது. ஆதலால் ஒலிமுறையில் மாத்திரம் மாணவரை வாசிக்கப் பழக்குதல், மாணவரை குழப்பத்தில் ஆழ்த்திவிடுகிறது. எடுத்துக்காட்டாக மடு என்ற சொல்லையும் மாடு என்ற சொல்லையும் மாணவன் ஒரே விதமாகவே உச்சரிக்கிறான். அதனால் குறில், நெடில் வேறுபாடுகளைச் சின்னஞ் சிறிய பராயத்தில் அவனால் உணரமுடியாமல் போகிறது. எனவேதான் அவன் மேற்குறிப்பிட்ட இரு சொற்களையும் ஒரேவிதமாக உச்சரித்து "மடு" என எழுதுகிறான். இதனை மாணவனின் பிழை என்று கூறி, நாம் ஒதுங்கி நிற்கமுடியாது. எனவே ஒலி முறையில் (வாசிப்புக்கும்) எழுத்து முறையில் (எழுதுவதற்கும்) எழுத்துக்களை அறிமுகம் செய்தல் சாலச் சிறப்புடையது. நூல் நிலைய வாசிப்பை ஊக்கப்படுத்துதல், மாணவர் வாசிப்பதில் நாட்டத்தை அதிகரிக்கச் செய்யும்.

அந்தந்த வகுப்புகளில் தேக்கமடைந்திருக்கும் மாணவரை எவ்வாறு கைதூக்கி விடுவது என்பதையும் நாம் சிந்திக்கவேண்டியவர்கள். மொழியறிவைப் பொறுத்தமட்டில், அதில் மாணவரைத் தேர்ச்சி பெறச் செய்வது தனிப்பட்ட முறையில் மொழி ஆசிரியரின் பொறுப்பு மட்டுமன்று அஃது ஏனைய பாடங்கள் போதிக்கும் ஆசிரியர்களினதும் கடமை ஆதல் வேண்டும். இன்றேல் மாணவரின் மொழித்திறன் வீழ்ச்சி காண்பதைத் தடுத்தல் இயலாத கருமம் ஆகிவிடும். மாணவர்கள் பின்தங்கிய நிலைக்கு ஆளாகும் முதல் நிலையில் அவர்களை நல்வழிப்படுத்தலே சிறந்த மார்க்கமாக அமையும். அத்தகைய செயற்பாட்டை நாம் ஆண்டு இரண்டில், ஆண்டுதோறும் கைக்கொள்ள வேண்டும்.

மாணவன் ஒருவன் ஆண்டு ஒன்றிலிருந்து ஆண்டு இரண்டுக்கு வந்த முதலாம் மாத இறுதிக்குப் பிந்தாமல் அவரது பாட ஆற்றல் களை மதிப்பீடு செய்யவேண்டும். அத்தகைய மதிப்பீடு எண், பேச்சு, வாசிப்பு, எழுத்து, கிரகித்தல், அழகியல், ஆக்கம் போன்ற அனைத்துப் பாடங்களிலும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அந்த மதிப்பீடுகளைக் கொண்டு மாணவரைத் தரமும், தகுதியும் உடையோராக்க உகந்த முறைகளைக் கையாளவேண்டும். இவ்வாறு முதலாறு மாதங்களில் நாம் ஊக்கமாகவும், கரிசனையாகவும் செயற்பட்டால் ஆண்டிறுதியில் மாணவர் வகுப்புக்கேற்ற தகைமையுடன் திகழுவர். அடுத்த ஆண்டில் ஆண்டு மூன்றுக்குச் செல்லும்போது தரம் வாய்ந்த (80%) மாணவர் அணியொன்று தயாராகிவிடும். அரை மனதோடு ஆண்டு மூன்று மாணவரை இது காலவரை பொறுப்பேற்ற ஆசிரியர் தரம் வாய்ந்த புதிய ஆண்டு மூன்று மாணவரை அகமும் முகமும் மலர வரவேற்பர். இவ்வாறே சாதனை படைக்கத்தக்க எழுச்சி பெற்ற ஆண்டு மூன்று மாணவர் சுமார் எட்டு ஆண்டுகள் முடிவில் வெற்றி முரசம் ஒலிக்கத்தக்க பெறுபேறுகளைப் பெற்று ஆசிரியர்களை மகிழ்விப்பர் என்பது திண்ணம். ஆகவே புதிய சிந்தனையோடு ஆசிரியர்களாகிய நாம் செயற்படுவோம். பிற்பட்ட மாணவர்களை முன்னணியில் வைப்போம்.

**திருமதி. ப. கனகசிங்கம்**
பிரதி அதிபர்
மட் / வாழைச்சேனை இந்துக்கல்லூரி.

# “ஆசிரியர்களும் முகாமைத்துவ அறிவை வளர்த்துக்கொள்ளவேண்டும்”

முகாமைத்துவக் கல்வியும், பயிற்சியும் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளிலும், வளர்ச்சியடைந்த நாடுகளிலும் கூடியளவு முக்கியத்துவம் பெற்று வருகின்றன. கல்வி முகாமைத்துவமானது வர்த்தக, கைத்தொழில் முகாமைத்துவங்களினின்றும் பல அம்சங்களில் வேறுபட்டது.

முதலாவதாக, ஆசிரியர்கள் பாடசாலையில் இலாப நோக்கடிப்படையில் செயலாற்றுவதில்லை. இரண்டாவதாக, கல்வியின் விளைவுகளை அளவிடுவது சற்றுக் கஷ்டமானது. மேலும் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் குறிப்பிட்ட ஒரு பாடசாலையில்கூட ஆசிரியர்க்கு ஆசிரியர் வேறுபடலாம். இத்தகைய பல காரணங்களை முன்னிட்டு நோக்கும்போது, கல்வி விளைவுகளை அதிகரிப்பதற்கு அதன் முகாமைத்துவம் தொடர்பாக, குறிப்பாக ஆசிரியர்கள் கூடிய அக்கறை எடுக்க வேண்டியது அவசியமாகின்றது.

''உண்மையில் ஒவ்வொரு ஆசிரியரும் குறிப்பிட்ட மாணவர் தொகையினருக்கு ஒரு முகாமையாளரே. வகுப்பறையானது ஒரு குழு நடத்தையின் சகல சட்டதிட்டங்களும், ஊக்குவித்தல் நுட்பங்களும், தலைமைத்துவமும் தொடர்பாடலும் பிரயோகிக்கப்பட வேண்டிய பாடசாலை எனும் தாபனத்தின் சிறு கூறாகும்.'' அந்த அடிப்படையில் நோக்கும்போது இன்றைய காலக்கட்டத்தில் எமது பிரதேசத்தில் கல்வி விளைவுகளை, அடைவுகளை அதிகரிப்பதற்கு, அதன் முகாமைத்துவம் தொடர்பாக ஒவ்வொரு ஆசிரியரும் சுய அபிவிருத்தியை ஏற்படுத்த ஆசிரியர்கள் தங்களைத் திட்டமிடுவோராகக் கருதவேண்டும். அத்துடன் தவறுகளைத் திருத்திக் கொள்ளும் மனப்பான்மையும் கொண்டிருக்க வேண்டும்.

பொதுவாக முகாமைத்துவமானது ஒரு செயற்பாட்டின் தொடர்புக் கூறுகளை உள்ளடக்கியதாகும்.

1. பகுத்தாய்தல். 2. திட்டமிடல்.
3. ஒழுங்கமைத்தல். 4. நெறிப்படுத்தல்.
5 கட்டுப்படுத்தல், 6. இயைவுபடுத்தல்.
7. மதிப்பிடல்.

என்னும் ஏழு தொழிற்பாடுகளும் கல்வி விளைவுகளை மேம்படுத்துவதற்காகப் பாடசாலைகளில் கையாளப்படுகின்றன. கல்வி விளைவுகளை மேம்படுத்தல் என்பது உள்நோக்கு என்பதாலோ அன்றி ஊக அடிப்படையிலான செயற்பாடுகளாலோ ஏற்படக்கூடியதல்ல. மிகக் கவனமானதும், ஒழுங்குமுறையானதுமான பகுப்பாய்வு ஒவ்வொரு சூழ்நிலையையும் பொறுத்து மேற்கொள்ளப்படல்வேண்டும்.

டேவிற் என்னும் கல்வியியல் ஆய்வாளர் கருத்துப்படி, ‘ஆசிரியர்கள், தலைவர்களாகவும், அபிவிருத்தியாளர்களாகவும், முதல்நிரை முகாமையாளர்களாகவும், மேற்பார்வையாளர்களாகவும் மட்டுமன்றி ஆளணி முகாமையாளர்களாகவும் இருத்தல் வேண்டும்.' - என்று கூறப்படுகிறது. இக்கூற்றிலிருந்து ஆசிரியர்களுடைய முகாமைத்துவ முக்கியத்துவம் புலப்படுத்துகின்றது.

ஆசிரியர்களுக்கு இத்தகைய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டபோதிலும், எமது கல்விப் பிரதேசத்தில் ஆசிரியர்களைப்பொறுத்த மட்டில் பல பிரச்சனைகள் இருக்கின்றன. பாடசாலைகளில் ஆசிரியர்களது திருப்திகரமற்ற கற்பித்தல் செயல்பாடுகளின் நிறைவேற்றத்திற்குப் பல காரணங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. தமது பாடப்பரப்புக்களில் போதிய அறிவின்மை, தொடர்பாடலில் குறைபாடுகள், அவர்களது திட்டமிடல் செயற்பாட்டில் தகுதியின்மை காரணமாக தமது கருமத்தைப் பூர்த்திசெய்துகொள்ள வேண்டிய முடிவுத்திகதி தெரியாதவராக இருப்பது. மாணவர் மத்தியில் நல்லொழுக்கத்தை நிலைநாட்டத் திறமை போதாத நிலை, சிறந்த கல்வி அடைவினை ஏற்படுத்தத் தேவையான தகுதிக் குறைவு, வளப் பற்றாக்குறைகளுக்கு ஏற்பத் தம்மை இணக்கப்படுத்திக்கொள்ள முடியாத நிலை, பாடசாலையின் சூழ்நிலைக்கும், அங்கு எதிர் நோக்கும் பிரச்சனைகளுக்கும் ஏற்ப அவற்றைச் சமாளிக்கும் திறமையின்மை, ஆசிரியர்களிடம் போதிய பாட அறிவின்மை என்பன சில உதாரணங்களாகும்.

நமது ஆசிரியர்கள் சிறந்த ஆற்றலும், ஒழுக்கமும் கொண்டிருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. பெருந்தொகையான பெற்றோரும், மாணவர்களும், ஆசிரியர்களது கடமைபற்றிக் குறைவான நம்பிக்கையுடையோராகக் காணப்படுகின்றனர். ஆசிரியர்கள் கடமையுணர்வு குறைந்தும், தமது கடமையில் ஈடுபாடு இன்றியும் காணப்படுவது ஆய்விலிருந்து வெளிக்கொணரப்பட்டுள்ளது. இதன் காரணமாக அவர்களது கற்பித்தல் திருப்தி மட்டத்திற்குக் கீழேயே காணப்படுகின்றது.

ஆரம்பப் பாடசாலைகளிலும் சரி, இரண்டாம் நிலைப் பாடசாலைகளிலும் சரி ஒவ்வொரு ஆசிரியரும், அவர்களது மாணவர்கள் தொடர்பாக முகாமைத்துவக் கருமங்களை மேற்கொள்ளவேண்டியுள்ளது. அவர்கள் பாட உள்ளடக்கத்தை ஆய்வு செய்யவேண்டும். கலைத்திட்டச் செயற்பாடுகள், பாடங்கள், வேலைத்திட்டம் என்பவற்றைத் திட்டமிடவேண்டும். முழு ஆண்டுக்குமான செயற்பாடுகளை ஒழுங்கமைக்கவேண்டும். திட்டமிடப்பட்ட கற்றற் செயற்பாடுகளில் மாணவர்களை நெறிப்படுத்தலும் வேண்டும், அது மட்டுமன்றி மாணவர்களது கற்றற் செயற்பாடுகளையும், நடத்தைகளையும் கட்டுப்படுத்தலும் வேண்டும். மாணவர் அடைவுகள், கற்றற் செயற்பாடுகள் என்பனவற்றை மதிப்பிடலும் மிகவும் அவசியமானதாகும்.

பல பாடசாலைகளில் ஆளணியின் இடையேயுள்ள தொடர்புகள் அதாவது ஆசிரிய-மாணவ, ஆசிரியர்-ஆசிரியர், அதிபர்-ஆசிரியர் தொடர்புகள் பெருமளவிற்குத் திருப்திகரமாக இல்லை. இத்தகைய திருப்திகரமற்ற ஆளணியினர் தொடர்புகளும் பிரச்சனை தரும் காரணிகளுள் ஒன்றாகவுள்ளன, ஆசிரியர்கள் எதிர்நோக்கும் இத்தகைய பல்வேறு பிரச்சனைகள். அவர்கள் முகாமைத்துவத் திறன்களைப் பெறுவதாலும், அவற்றைப் பிரயோகிப்பதாலும் குறைக்கப்படவோ, தீர்க்கப்படவோ முடியும். ஆகவே முகாமைத்துவ நுட்பங்களையும், திறன்களையும் விளங்குவதால் ஆசிரியர்கள் பயன்தரும் பாடசாலையொன்றின் நிலையை உயர்த்துவதற்குப் பங்களிக்கமுடியும்.

ஆசிரியர்கள் எதிர்கால அதிபர்களும், கல்வி நிர்வாகிகளுமாவர். ஆகையால் சுய அடிப்படையிலான முகாமைத்துவக் கல்வி அவர்கள் தம் தொழிலில் எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தீர்க்கவும் உதவும்.

---

**செல்வி. கந்தசாமி புஷ்பராணி**
B. A. Hons - Dip - in - Edu - Planning
திட்டமிடல் உத்தியோகத்தர்,
பிரதேச கல்வி அலுவலகம்,
வாழைச்சேனை.

---

பிறக்கும்போது நமக்கு என்ன இல்லையோ மனிதனான பின்பு நமக்கு என்ன என்ன இல்லையோ அவற்றையெல்லாம் கல்வி தருகிறது. (ரூஸோ)

# யார் கெட்டிக்காரன்.........?

மகாத்மா காந்தியடிகள் ஒருமுறை இங்கிலாந்துக்கு விஜயம் செய்தபொழுது, அங்குள்ள பாடசாலை ஒன்றைத் தரிசிக்கச் சென்றார். வகுப்பறை ஒன்றைப் பார்வையிடுவதற்காக காந்தியடிகள் சென்றபொழுது அவரை வரவேற்ற வகுப்பாசிரியர், மாணவர்களை ஒவ்வொருவராக காந்தியடிகளுக்கு அறிமுகம் செய்தபொழுது, ''ஐயா இந்த மாணவன் கணிதத்தில் கெட்டிக்காரன், இவன் விஞ்ஞானத்தில் கெட்டிக்காரன், இந்தப் பிள்ளை மிகவும் அடக்கமானவன்'' என்று புகழ்ந்துகொண்டு சென்றார். கடைசியாக வகுப்பறையின் பின் வரிசையில் உள்ள மாணவன் ஒருவனைக்காட்டி ''ஐயா, இவன் மகா மோசமானவன், படிப்பில் கவனம் செலுத்துவதில்லை, மிகவும் முட்டாள்'' என்று கூறி அறிமுகப்படுத்தினார்.

இதனால் அந்த மாணவனின் மனம் மிகவும் கவலையடைந்து முகம் வாடி வதங்கிப் போனது. இதனைக் கவனித்த காந்தியடிகள், அந்த ஆசிரியரைப் பார்த்து ''வண்ணத்துப் பூச்சிக்கு எத்தனை கால்கள்?'' என்று கேட்டார். அந்தக் கேள்விக்கு சரியான விடை தெரியாமல் ஆசிரியர் பேந்தப்பேந்த விழித்தாராம். பின்னர் அந்த மாணவனை நோக்கி அதே வினாவைக் கேட்டபொழுது, வண்ணத்துப் பூச்சியை பிடித்து, பிய்த்து விளையாடிய சிறுவன், ''ஆறு கால்கள் ஐயா'' என மகிழ்ச்சியுடன் சரியான விடையைக் கூறினான்.

பின்னர் அந்த ஆசிரியரைப் பார்த்து ''இந்தச் சின்னக் கேள்விக்கே சரியான விடை தெரியாமல் இருக்கின்ற நீரல்லோ முட்டாள், ஆனால் இந்த மாணவன் மிகவும் கெட்டிக்காரனாய் இருக்கின்றானே'' என்று, சிறுவனின் முதுகில் செல்லமாக தட்டியபொழுது, ஆசிரியரின் முகத்தில் அசடு வழிந்ததாம்.

தகவல் திரட்டல்:

திரு. இ. ஜீவரெட்ணம்
(ஆசிரியர்)
மட்/கிரான் விவேகானந்தா வித்தியாலயம்,
கிரான்.

குழந்தை பசியில் அழுதால், தாய் ஊட்டும் உணவை குழந்தைதானே விழுங்கவேண்டும்.

அதேபோல் ஆசிரியர்களும் எடுத்துத் தருவார்கள் விழுங்கும் திறமை நம்மிடம் தானே இருக்கிறது.

ஆசிரிய தீபங்கள் சிறக்கவும், அவர்கள் பணி சுடர் விடவும்
வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!!

உங்கள் தேவையே எங்கள் சேவை
உங்கள் சுபிட்சமே சங்கத்தின் இலக்கு
கடமை கண்ணியம் கட்டுப்பாடுடன்
திருப்தியான சேவையை வழங்கிடுவோர்.

- பால் வழங்குனர்களே நியாயமான விலையில் பால் விற்பனை செய்திட
- குறைந்த கட்டணத்தில் பார ஊர்தியை வாடகைக்கு அமர்த்திட
- வைபவங்களை சிறப்பிக்கத் தேவையான இரும்புக் கதிரைகளை வாடகைக்கு பெற்றுக்கொள்ள

— நாடுங்கள் இன்றே நாடுங்கள் —

# கோறளை வடக்கு
# பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

*பதிவு இல: மட / 181 - 7-4-1978.*

**பிரதான வீதி, வாகரை.**

தீபங்களால் மலர்ந்த தீபமே
உன்சுடர் பிரகாசிக்கட்டும்

நவநாகரீக பாணியில்
ஆண்களுக்கான, சோட்ஸ், ஜீன்ஸ்,
சேட் போன்றவற்றையும்
குழந்தைகளுக்கான நவநாகரீக
பாணியிலான உடைகளை
குறித்த தவணையில்
தைத்துக்கொள்ளவும்.

## முகா மொட் ரெயிலர்ஸ்

புதுக்குடியிருப்பு,
வாழைச்சேனை.

*ஆசிரிய தீபத்திற்கு*
*எமது வாழ்த்துக்கள்*

- யானை மார்க் குளிர்பான விற்பனை பிரதிநிதி.
- மட்டக்களப்பு — கொழும்பு துரித சௌகரிய பயணத்திற்கு

"ஜேசு ரவல்ஸ்"

- உள்நாட்டு விமான சேவை "லயன் எயார்" ஆசன பதிவிற்கு

நாடவேண்டியது

## தயா ஸ்ரோர்ஸ்

தரன் பில்டிங்
278/A. திருமலை வீதி,
மட்டக்களப்பு.
☎ *2031, 2156, 2335.*

# அன்பின் பரிமாணமும் ஆத்ம திருப்தியும்

"குட்மோர்னிங் மேடம், குட்மோர்னிங் மேடம்'' அன்றலர்ந்த பூக்களால் அர்ச்சிக்கப்படுவதுபோல இவள் தனது காரியாலயத்துக்கு வந்து ஆசனத்தில் அமரும் முன்பே இவள்மீது காலை வணக்கங்கள் பட்டுச் சிதறிப்போகின்றன. எத்தனையோ காலை வணக்கங்களுக்கு மத்தியில் தர்மினியின் சிரித்த முகமும், மாநிற முகத்துக்குக் களையூட்டும் அந்தச் சிரிப்பும், அவள் வழமையாகச் சொல்லும் அந்த குட்மோர்னிங்கும் இவள் நினைவில் வந்து போகின்றன.

இந்தக் கல்லூரிக்கு இவள் வந்த இந்த மூன்று வருடத்துக்கிடையில் கல்லூரி எவ்வளவோ முன்னேற்றம் கண்டிருந்தது. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் எத்தனையோ மாணவர்கள் சித்திபெற்று, அவர்கள் பொருளாதாரமும் மேம்பட்டிருந்தது. க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் முதல் தடவையிலேயே பல மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லத் தகமை பெற்றிருந்தனர். செய்தால் எதனையாவது "புகழுக்காக'' மட்டுமன்றிச் "சேவையாகவே'' செய்யவேண்டும் என்னும் கொள்கையுடைய இவள் உண்மையிலேயே அதில் வெற்றியும் கண்டிருந்தாள்.

இந்த வெற்றிக்கெல்லாம் இவளோடு தோள்கொடுத்து உதவியவள் தர்மினியே. இன்று இவளோடு அவள் இல்லை. சிரித்துச் சிரித்து அறிவாகக் கதைக்கும் தர்மினி ஒரு நாளிரவு நடந்த "ஷெல்'' அடியில் ஒரு சிறிய இரும்புத்துண்டிற்குத் தன் தலையில் இடம்கொடுக்க முடியாமல் இறந்து போய் விட்டாள். எவ்வளவோ அறிவைத் தன்தலையில் சுமந்துகொண்டு புத்திசாலித்தனமாகவும், சாதுர்யமாகவும் இவளது தோளோடு தோள் நின்று கல்லூரிக்காக உழைத்த அவள் தன் மூளை சிதற இறந்து கிடந்தது கண்டு இவளது இருதயமும் சுக்கு நூறாகத்தான் சிதறி விட்டிருந்தது.

கடமைக்கும், கட்டுப்பாட்டிற்கும் பெயர் போன இந்தச் செல்வி. பிரியதர்ஷினி தருமரெத்தினம் "இருதயமே இல்லாதவள்'' எனப் பலரால் வர்ணிக்கப்பட்டிருக்கின்றாள். ஆனால், இந்த இருதயமே இல்லாத இவளைத் தன்பால் இழுத்து "அன்பு'' என்றால் என்னவென்று காட்டியதும், இந்தக் கல்லூரிக்கு இவள் வரக் காரணமாயிருந்ததும், படித்துப் பட்டம் பெற்றும் திமிருடன் உலவிய இவளுக்குச் "சிவகுரு''வானதும் இவளைச் சமூகத்துக்கு ஏற்றவாறு "முழுமனுஷி'' யாக்கியதும் அந்தத் தர்மினியேதான் அல்லவா?

சிரமப்பட்டுத் தர்மினியின் நினைவைக் கடமையெனும் புனித கைங்கரியத்துக்காக ஒதுக்கிவிட்டுத் தன் அலுவல்களைக் கவனிக்கின்றாள் பிரியதர்ஷினி. பாடசாலை நிர்வாகத்துடன் கற்பித்தலை மறக்காத இவள் தன் பணிகளையெல்லாம் நிறைவேற்றிவிட்டுக் குவார்ட்டர்ஸை நோக்கி நடக்கும்போது மணி மூன்றாகிவிட்டிருந்தது.

குவார்ட்டர்ஸ் மேசையில் கிடந்த மாமாவின் கடிதம் அவளுக்குச் சிரிப்பைத்தான் இந்த வேதனையிலும் கொடுக்கின்றது. "எங்கோ ஒரு பட்டிக்காட்டிலே இருந்துகொண்டு, "ஷெல்'' அடிக்கு மத்தியில் காலம்

கழிக்க உனக்கு விதியா? யாரோ தர்மினி பற்றிப் பக்கம் பக்கமாக எழுதுகின்றாய். நாளைக்கு உனக்கும் இது நடவாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? இது கண்டதும் உடன் கொழும்பு புறப்பட்டு வந்து கனடா வருவதற்கான ஆயத்தங்களைச் செய்யவும்'' — மாமா.

மாமாவின் கடிதம் சிந்தனையைக் கிளற, இவள் சாப்பிடாமலே நினைவில் ஆழ்ந்து போகின்றாள். இருபத்திரண்டு வயதிலேயே விஞ்ஞான பட்டதாரியாகிப் பல்கலைக்கழகம் என்னும் பூங்காவிலேயிருந்து பச்சைக்கிளியாகப் பறந்து வந்தவள்தான் இவள். அழகானவள் என்பது யாரையும் கிறங்க வைத்தாலும் அலட்சியமும், திமிரும் கூடவே குதியாட்டம் போட்டுக்கொண்டிருக்கும் ''உளவியல்'' என்றாலே ''கிராம்'' என்ன விலை? என்று கேட்கும் ரகம் இவள்.

வறுமையின் நிழலே படியாத இவளுக்குக் கிடைத்த முதல் பாடசாலையே இந்தக்கல்லூரிதான். அப்போது இது வெறுமனே ஒரு தமிழ் வித்தியாலயமாகவிருந்தது. ''கஷ்டப் பிரதேசங்களுக்கு ஆசிரியர் இல்லை'' என்ற கூக்குரல்களைத் தொடர்ந்து இவளது சகாக்கள் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டனர், ''என்ன கரிமூஞ்சிகளோ இதுகளுக்கெல்லாம் ஒரு விஞ்ஞான பாடம், அந்தக் காட்டூரிலே என்னால வேலை செய்ய முடியாதப்பா.'' இவளின் அப்பா பிரபல வர்த்தகர். செல்ல மகளுக்கு உடனேயே ''மாறுதல்'' கிடைத்தது.

''அந்த ஊரையும், கரிமூஞ்சிப் பிள்ளைகளையும் நினைத்தாலே எனக்கு அலஜிக்'' இப்படி எல்லோரிடம் தோளைக் குலுக்கிக் கொண்டு கூறுவாள். பெண் பார்க்கவரும் மாப்பிள்ளைகள் யாரையுமே இவளுக்குப் பிடிக்காது. இவள் ஒவ்வொரு காரணம் சொல்லி மாப்பிள்ளைகளைத் தட்டிக்கழித்தாள். காலன் காரணம் சொல்லாமலேயே இவள் தாய் தந்தையரை ''விபத்து'' எனும் பெயரில் கவர்ந்துகொண்டு போனான்.

பொழுதுபோகாமல் இவள் மேலும் படிக்க நினைத்தாள். பட்டப் பின்படிப்பு முடியக் ''கடமையே முதலானது'' என்னும் கருத்துடன் உளவியலும் அறிந்தவளாக வெளி வருகின்றாள். கூடவே ஓரிரண்டு நரைகளும் தலையிலிருந்து வெளிவருகின்றன. பழகும் முகங்களெல்லாம் இப்போது ''பொய்முகங்கள்'' போல இவளுக்குத் தென்படவாரம்பிக்கின்றன. நகர எல்லையிலே உள்ள பிரபல்யமான மகளிர் கல்லூரியில் கடமையை ஏற்றுக்கொள்ளுகின்றாள் இந்தக் கடமைக்கும், கண்டிப்புக்கும் பெயர்போன அதிபர் பிரியதர்ஷினி.

அன்று புதிய மாணவர்களைச் சேர்க்கும் நாள். பிரியதர்ஷினி கல்லூரியைச் சுற்றி மேற்பார்வை செய்துகொண்டு வரும்போது ''குட்மோனிங் ரீச்சர்'' என்னும் குரல் கேட்டுத் திரும்பிப் பார்க்கின்றாள். ''ரீச்சர் என்னை உங்களுக்கு ஞாபகமில்லையா? நான் தான் ரீச்சர் தர்மினி. உனக்கு விஞ்ஞான பாடம் சுட்டுப்போட்டாலும் வராது. நீயெல்லாம் படித்து என்னத்தைக் கிழிக்கப்போகின்றாயோ? என்று திட்டுவீங்களே. அதே தர்மினிதான் ரீச்சர்.''

பிரியதர்ஷினிக்கு அவள் குத்தலாக அறிமுகம் செய்தாளா அல்லது கிராமத்துப் பெண்ணுக்கேயுரிய வெகுளித்தனமா? என ஆராயமுடியவில்லை. மாநிறமான அந்த முகத்திலே ஜொலித்த அந்தக் குங்குமமும் அவளது ஒயிலான சிரிப்பும் ஒரு தனிக்கவர்ச்சி என இவள் நினைக்கின்றாள். தர்மினியின் பாடசாலைதான் இவளுக்கு முதலில்கிடைத்த தமிழ் வித்தியாலயம். அங்கு கற்பிக்கும்போது படிப்பிலே மிகவும் விருப்புடையவளான தர்மினியை இவள் ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை. ''நீயெல்லாம் விஞ்ஞானம் படித்து என்னத்தைக் கிழிக்கப்போகின்றாய்?'' அடிக்கடி அவள் ஆர்வத்தை இப்படித்தான் அடக்கியிருக்கிறாள் பிரியதர்ஷினி மனதிற்குள் வேறு மாதிரித் திட்டிக்கொள்ளுவாள். ''இவளுடைய கரிமூஞ்சிக்கு விஞ்ஞானம்தான் ஒரு கேடு.''

தர்மினியைப் பற்றிய பழைய நினைவை மீட்டிக்கொண்டிருந்த மேடம் பிரியதர்ஷினி, தர்மினி தன்மகளை அந்தக் கல்லூரியில் சேர்த்துவிட்டுச் சென்ற பிறகும் விக்கித்துப் போய் நின்றிருந்தாள். ''பல கஷ்டங்களுக்கு மத்தியில்தான் ரீச்சர் என்னுடைய மகளை இக்கல்லூரியிலே சேர்த்திருக்கிறேன். நான்

படிக்க ஆசைப்பட்டேன் நடக்கவில்லை. என்னுடைய மகளையாவது படிக்கவைக்க வேண்டும்.'' தர்மினியின் பெரிய மனுஷத்தனம் இவளுக்குப் பிரமிப்பாக இருக்கின்றது.

''இந்தக் கரிமூஞ்சி'' எதுக்கு லாயக்கு என்று நினைத்தேனே? கச்சிதமாகக் குடும்பம் நடத்தும் பாங்கு ஒன்றே போதாதா? மங்கலமான முகத்தில் மஞ்சளும், குங்குமமும் ஜொலிப்பதுதான் என்ன அழகு? வீடுவந்த பின்னர் சிறு பிள்ளைபோல ஓடிச்சென்று கண்ணாடியில் தன்முகத்தைப் பார்க்கின்றாள் பிரியதர்ஷினி. வாடிய முகத்தில் கருவண்டுக் கண்களும் களையிழந்துபோன முகத்தில் ''ஸ்டிக்கர்'' பொட்டும்... மேலே பார்க்க முடியாமல் ''பொலபொலவென்று'' கண்ணீர் வடிக்கின்றது.

ஆமாம்! முதல் தடவையாகப் பிரியதர்ஷினி ஏனோ தனக்காக அழுகின்றாள்; அன்புக்காக அழுகின்றாள். எங்கோ காட்டூர் எனத்தான் கருதிய பாடசாலையில் தன்னை ''அறிவுப் பிச்சை'' கேட்டு வலம் வந்த மாணவியை எப்படியெப்படியெல்லாம் அவமானப்படுத்தியிருக்கின்றாள் இவள். ஆனால் அவளோ இவளை ''ரீச்சர் ரீச்சர்'' என்று தன் அன்பினால் எப்படிக் குளிப்பாட்டி எடுத்துவிட்டுப் போய்விட்டாள்.

இந்தச் சம்பவம் நடந்து இரண்டொரு மாதங்களின் பின்னர்தான் கடமையாற்றிய பிரபல கல்லூரியிலிருந்துதானே ஒரு மாறுதலுக்காக அந்தக் கிராமத்தில் சேவைசெய்ய விரும்புவதாகக் கூறி, மாறுதல் எடுத்துக் கொண்டு வந்த இவள் ஏனோ எல்லோருக்கும் ''புரியாத புதிர்'' ஆகவே இருந்தாள்.

இங்கு வந்தபின்னர், இருபத்திநான்கு மணி நேரமும் அதிபராக உழைத்த இவளுக்கு வலதுகையாக விளங்கியவள் தர்மினிதான். இந்தக் கிராமத்துப் பெண்ணுக்கு இவ்வளவு அறிவு எங்கேயிருந்து வந்தது? பாடசாலை அபிவிருத்திச் சபையில் இருந்து கொண்டு இக்கல்லூரிக்காக எவ்வளவு உழைத்திருக்கின்றாள்? நாட்டுப் பிரச்சினையா? பாடசாலைப் பிரச்சினையா? அல்லது சமூகப் பிரச்சினையா? எல்லாவற்றையும் இந்தத் தர்மினியால் எவ்வாறு அக்குவேறு ஆணிவேறாக அலசமுடிந்தது? பொருத்தமான தீர்வையும் அவளால் காண முடிந்திருந்தது. ஆனால், அதனை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள அவள்தான் பிரபல்யமானவளாக இல்லையே என இவள் நினைத்துக் கொள்ளுகின்றாள். சிறியதானாலும் அறிவொளி வீசும் அந்தக் கண்களைக் காணும்போது பிரியதர்ஷினி மனம் குன்றிப்போய் விடுவதும் உண்டு. என்னிடம் இருந்த அறிவில் ஒரு சிறுதுளியை இவளுக்குக் கொடுத்திருந்தால் இன்று இந்தச் சமூகத்திற்கு நல்ல ஒரு அறிவாளியும், நிருவாகியும் கிடைத்திருப்பாள்.

''கணீரென'' ஒலித்த பிள்ளையார் கோயில் மணி பிரியதர்ஷினியை நினைவலையினின்றும் இழுத்து வருகின்றது. கல்விகற்க ஆசைப்பட்ட தர்மினிக்காகவும் இந்தக் கல்லூரிக்காகவும், ஏழைச்சிறார்களுக்குமாகத்தான் இங்கிருந்து இன்றும் சேவை செய்யத்தான் வேண்டும் என்ற முடிவுடன் பிரியதர்ஷினி எழுந்து நிற்கின்றாள்.

''நாட்டுப் பிரச்சினை, நாட்டுப் பிரச்சினை'' என்று வீணாகத் தலையிலே அடித்துக்கொண்டு நம் கடமையிலே இருந்து தவறிவிடக்கூடாது மாமா. நாட்டுப் பிரச்சினை இருக்கும்போது திருமணங்கள் நடைபெறவில்லையா? வீடுகள் கட்டப்படவில்லையா? கொண்டாட்டங்கள் நடைபெறவில்லையா? கடமையிலிருந்து தப்பிக்கொள்ள மட்டும் அதனை நாம் ஏன் சாதகமாக்கிக்கொள்ள வேண்டும்? நான் கனடா வருவதானால் என்னுயிரை மட்டும்தான் பாதுகாக்கமுடியும் ஆனால், இங்கிருந்து சேவை செய்வதனால் எத்தனையோ அறிவு ஜீவிகளை இந்தக் கிராமத்துக்குத் தரமுடியும். பெரியவரான உங்களது வேண்டுகோளைத் தட்டிவிட்டதற்கு என்னை மன்னித்து விடுங்கள்.

அன்புடன்,
பிரியதர்ஷினி.

அன்றிரவு கொழும்புத் தபால் வண்டி அவளது தபாலைச் சுமந்துகொண்டு விரைந்து செல்ல, இவள் ஏதோ ஒரு மனநிறைவுடன் கண்களை மூடிக்கொள்ளுகின்றாள்.

( யாவும் கற்பனை )

**திருமதி. ராஜலோகினி செல்வராஜா**
மட் / வாழைச்சேனை இந்துக் கல்லூரி,
வாழைச்சேனை.

# Student's Management and Classroom Control

In order to teach a subject well and to get maximum educative value the teacher should have a proper management of the class. First of all the teacher should have a good knowledge of what he teaches. He also has to use his management techniques when he is in the class room. But writing out endless pages or shouting or humiliating students are just not effective and not acceptable. Every teacher should keep his voice at normal level and he should not short to be hard.

The teacher should also have his own experiences in the relevent subjects what he teaches. He must know the working of the mind of the pupil. Concentration of subjects for the long periods of time is not effective for young children. Therefore activities must be changed every 20 - 25 minutes.

The teacher must be aware of the class wo k of the students. When the children do their seat work the teacher should not stand behind the teacher's desk. He must walk around the class room and encourage the students to do their work correctly. Sometimes some students create many difficulties in the class room. They will make noise whiie the teaching is going on. In order to control their noise the teacher should stop his lesson for a while and wait till the class comes under normal, but the teacher must realize that the class room does not always have to be silent. Therefore the teacher must allow the children to express themselves freely. If a child wants to share his own ideas with the class, the teacher must stop the lesson and listen to the children. While doing so the naughty party automatically wile stop their noise.

In conclusion the class room while learning takes place must have a pleasant environment and the teacher must be enthusiastic and ready to encourage the students. Finally when learning takes place the teacher should be form and ready to motivate the children to pay attention. Interest in the subject will drive away disorder among students.

---

**Mr. M. Thevaretnam**
*Principal.*
*Bt / Karungalisolai*
*Sri Krishna Vidyalayam,*
*VALAICHENAI.*

---

*Our Best Wishes to "Asiriya Theepam"*

# "WEALTH FROM WASTE"

**Re-Cycling of Paper and Board will help**

**to reduce cost of Production**

**to Save energy**

**to reduce Pollution**

**GIVE US YOUR WASTE PAPER - WE WILL GIVE YOU MONEY**

**For Further Details Contact:**

**General Manager:**
326015.

**Supplies Manager:**
438105.

# NATIONAL PAPER COMPANY LIMITED

**( Pioners of Re - Cycling )**

***356, Union Place, Colombo - 2.***

# வழிகாட்டியின் வழியிலே...

வானம் சுத்தமாகத் தன் சுதந்திரத்தை இழந்து வருணதேவனின் ஊழித் தாண்டவத்திற்குத் துணைபோகும் நேரம் சிந்தனையில் ஆழ்ந்துகொண்டிருந்த அரவிந்துக்கு, வானம் சிறிது சிரிக்கவே சந்திரனைக்கண்ட அல்லி மலர்போல முகம் மலர... பின் தன் துவிச்சக்கர வண்டியை மிதிக்கத் தொடங்கினான்.

ஆம் அரவிந் கல்வியெனும் ஆற்றில் நீந்துவதற்கு அவன் பட்டபாடுகள் கொஞ்சமல்ல. அவன் கதையை எத்தனை பக்கங்கள் எழுதினாலும் முற்றுப்பெறாத தொடர் கதையாகவே அமையும் என்பது அவன் அறிந்த உண்மை. இதன் பிரதிபலிப்பே தனக்கு வந்த பதவிகளை விட்டு, கால ஓட்டத்தின்பின் புனிதமான அந்த ஆசிரியர் தொழிலுக்கு அருகதையானான்.

அரவிந் இன்று ஒரு கலைமாணிப் பட்டதாரி ஆசிரியன். ''டிப்புளோமா'' இறுதி ஆண்டுப் பரீட்சைக்குத் தன்னைத் தயார் செய்துகொண்டிருந்தான். மிருதுவான தோற்றம், சாந்தமான குணம், கணீர் என்ற தொனி மொத்தத்தில் ஒரு ஆசிரியருக்குரிய தகமை அவனிடம் குடிகொண்டிருந்தது.

பாடசாலையின் விடிவுக்காக தன் உடல், பொருள், ஆவி அத்தனையையும் குறியாக்கி கடிகாரம்போல் இயங்கலானான் அந்த உழைப்பின் ஊதியமே க. பொ. த. (சா/தா), (உ/த) பரீட்சையின் பெறுபேறுகள். இது அவனின் திறமைக்கு ஓர் உந்து சக்தியாக அமைந்தது.

அன்று காலை பாடசாலையை அடைந்த அரவிந் நேரத்தைப் பார்க்கிறான் ஏழுமணி பதினொரு நிமிடம் நேரே அதிபரின் அறைக்குள் நுழைந்தவன் அதிபருக்கு காலை வணக்கத்தைத் தெரிவித்துவிட்டு, ஏனைய கடமைகளையும் முடித்துவிட்டு வகுப்பாசிரியர் என்ற முறையிலும் வகுப்பறையை நோக்கி நகர்கிறான். ஆசிரியரின் வரவுக்காக எதிர்பார்த்துக்கொண்டிருந்த மாணவர்களின் நிலையை எண்ணி ஒரு கணம் அசந்து போனான். ''காலம் பொன்னானது அது கடந்தால் திரும்பாதது என்பதற்காகவா இத்தனை ஆர்வம்?'' எனத் தனக்குள்ளேயே எண்ணிக் கொண்டவன் வகுப்பறையை நோக்கி ஒரு கண்ணோட்டம் விடுகிறான் ஓர் இடம் மட்டும் காலியாக இருந்தது அது வேறு யாருடையதுமல்ல ஆரணியினுடையதே.

ஆம்! ஆரணி உயர்தர வகுப்புக்குக் காலடி எடுத்துவைத்து ஒருமாதம் கழிந்துவிட்டது எப்படியும் வாழலாம் என்றில்லை இப்படித்தான் வாழவேண்டும் என்று கல்வி வாழ்க்கைக்கு உதாரண புருஷராக வாழ்ந்து காட்டுபவள் ஆரணி. ஆரணி கல்வி வாழ்க்கையில் அன்றிலிருந்து இன்றுவரை இரண்டாவது நிலையென்றால் என்னவென்று தெரியாதவள். இதற்குக் காரணம் ஊக்கம் மட்டுமல்ல ஒழுக்கம், நேர்மை, வாய்மை இவை எல்லாமே!

மழலை மொழி பேசாத குழந்தையின் அழும்குரல் கேட்டு அதனைப் புரிந்து செயல்படும் அன்னையைப்போல் அரவிந்தும் தனது மாணவச் செல்வங்களை நன்கு அறிந்தவன். ஆயினும் அன்று ஆரணி வராமைக்குக் காரணம் புரியாத புதிராகவே இருந்தது.

அன்று பாடசாலை முடிவுற்றதும் அரவிந் ஆரணியின் வீட்டை அடைந்தான். சாய்மானக் கட்டிலில் சாய்ந்தவாறு அரவிந்தின்

வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்த ஆரணியின் அப்பா நல்லசிவம் ''அரவிந்தா வாப்பா வந்திரு'' எனக்கூறி நாற்காலியில் அமர்த்தியவாறு உரையாடிக்கொண்டிருந்த வேளை, ''சார் இந்தாங்க'' என்ற ஆரணி யின் குரல்கேட்டு தேனீரை எடுத்துக்கொண்ட அரவிந்திடம்''சார் சார் எனக்கு ரியூசனுக்குப் போகப் பிடிக்கல அப்பாதான் போ... போ... எனச் சொல்லுறாரு'' எனச் சிறுபிள்ளைத் தனமாகக் கூறிய ஆரணியிடம் ''பிள்ளை யின் முன்னேற்றத்திற்காக அப்பா கூறுவதி லும் நியாயம் இருக்கம்மா'' என ஆரணிக்கு அரவிந் சமாதானம் கூறினாலும் இன்றைய நாகரிக உலகில் காலைமுதல் மாலைவரை எங்கு பார்த்தாலும் ரியூசன்தான் இது நாம் அன்றாடம் காணும் உண்மை பாடசாலை யில் யாவும் கற்பிக்கப்பட்டால் ''ரியூசன்'' என்பது ''பகல் நிலவு'' ஆகிவிடும் என்ப தும், கல்வியைத்தவிர வேறு எந்த உலக விடையங்களையும் அறியாதநிலை முழுநேர ரியூசனால் ஏற்படும் என்பதும் அரவிந் அறி யாத ஒன்றல்ல. ஆரணி எதைச் செய்தா லும் நன்மையில்தான் முடியும் என்பது அர விந்துக்கு நன்கு தெரியும்.

அமைதியான பேச்சுக்கு மத்தியில் ஆரணி மீண்டும் தொடர்ந்தாள்... ''அப்பா தந் தையை தெய்வமாகப் போற்று, குருவைத் தெய்வமாகப் போற்று என்னும் ''உபநிடத'' சிந்தனைக்கேற்ப வாழ்வுக்கு வழிகாட்டிய உங்களையும், ஆசிரிய சமூகத்தையும் தெய்வ மாக மதிக்கிறேன். என் கனவெல்லாம் பல் துறை மேதையாக இந்த சமூகத்தைக் கட்டி யெழுப்பவேண்டும். அதற்காகவே மீதி நேரங் களை பயனுள்ள முறையில் பயன்படுத்து கின்றேன். ''தெரு விளக்கை நம்பிய ஆபிர காம் லிங்கன் ஜனாதிபதியாகவில்லையா?'' இந்த பாடசாலைக்குப் பெருமை சேர்ப்பது ஒவ்வொரு மாணவரினதும் கடமை. அதை நான் மனப்பூர்வமாக நம்புகிறேன் அதைவிட மேலாக ஆசிரியரை நம்புகிறேன் அப்பா'' எனத் தன் உள்ளக் கிடக்கையைக் கொட் டித் தீர்த்தாள். ''பிறர் நலத்துக்காக தன்னை வளர்த்துக்கொள்வதில்தான் எத் தனை ஆர்வம் இப்படி ஒரு உள்ளம் உடை யவர்தான் ஆசிரியராக வரவேண்டும்'' என்ற அங்கலாய்ப்பு தனக்குள்ளேயே எழ மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான்.

அன்று ஆசிரியர் தினம் பாடசாலை அலங்கரிக்கப்பட்டு கோலாகலமாகக் காட்சி யளித்தது இது மாணவர்களின் உயர்ந்த குணத்திற்குப் பாலம் அமைத்தது. அன்றைய தினத்தில் அதிபர், ஆசிரியர்கள் உரையைத் தொடர்ந்து மாணவர்களின் சார்பில் மாண வத் தலைவியான ஆரணியே பேச ஆரம் பித்தாள். ''கல்விக் கண்ணைத் திறக்கும் ஆசிரியர்கள் எம் மத்தியில் நல்லறிவு புகட்டி சமூகத்துக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காய் அறி யாமை இருளகற்றி நாட்டிற்குத் தேவை யான விஞ்ஞானிகள், கணித மேதைகள், வைத்தியர்கள், நீதிபதிகள் போன்ற பலரை நாட்டிற்குத் தந்து மாணவர்களை உயர்வின் சிகரத்திற்கு ஏற்றிவிடும் ஏணியாகவும், கல் விக் கரையினின்றும் சேர்த்துவிடும் தோணி யாகவும் வாழ்வுக்கு வழிவகுத்து சமூக சிற்பி களாக உள்ள எம் ஆசான்கள் சமூகத்தின் கண்ணாடியாக விளங்கும் பாடசாலையை மாசுபடாமல் வளம்படுத்தி, தரப்படுத்தி குறைவிலா நிறைவு செய்யும் குருநாதர்களை என்றும் மறந்ததில்லை. இத்தருணத்தில் அவர்களை இதய சுத்தியோடு வரவேற்று ஆசிகளைப்பெற்று மங்காத தீபமாய் இதயத் தில் ஏற்றி அவர்களின் வழிகாட்டலில் நாமும் வழிகாட்டுவோம்'' எனக்கூறி பேச்சை முடித்தாள்.

கொடுத்த அந்தக் குறைவான நேரத்தில் நிறைவான கருத்துக்களைக்கூறி விடை பெறும் நேரம் அரங்கத்தில் அமோக வர வேற்பு இருந்தது. இவ்வாறு பல சந்தர்ப்பங் களில் ஆரணியின் திறமையை அறிந்த அர விந் அவளின் அறிவுக்கு உரமூட்ட பல்வேறு அறிவுரைகளையும், பல அறிஞர் புத்தகங் களையும் பலவழிகளிலிருந்தும் பெற்று அவ ளின் அறிவுப்பசிக்குத் தீனிபோட்டான்.

இவ்வாறு நாட்கள் வாரங்களாகி வாரங் கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களை எட்டின. ஆரணிக்கு இருவருடங்களும் நடந் தேறியது. ''நிறைகுடம்'' போல் கல்வியிலே திகழ்ந்த அவள் பரீட்சையை ஒருவாறாக முடித்துக்கொண்டு பெறுபேற்றை எதிர் பார்த்தவாறு மேலும் பல புத்தகங்களை விருந்தாக்கினாள். காலதேவனின் சுழற்சி யால் நாட்கள் நாளொரு வண்ணமாக நகர பரீட்சை முடிவும் வந்தேறியது. எல்லோரும்

எதிர்பார்த்தவாறு அந்தப் பாடசாலையின் முடிவுகள் மன நிறைவைத் தந்தன. இது மாணவர்களின் ஊக்கத்துக்கும், ஆசிரியர்களின் திறமைக்கும் சான்று பகர்ந்தது. அதிலும் ஆரணி நான்கு பாடங்களிலும் திறமைச் சித்தி எய்தி எல்லோர் மனதையும் கவர்ந்தது மட்டுமல்லாது அரவிந்தின் உழைப்பிற்கும் ஊதியமாய் அமைந்தது.

இவ்வாறு ஒவ்வொரு வருடமும் மாணவர்கள் பல்கலைக் கழக அனுமதியை எட்டிக்கொண்டிருந்தனர். ஆரணியும் தனது பல்கலைக் கழக வாழ்க்கையில் ''கிளாஸ் அடித்து'' முதன்மையாகத் திகழ்ந்து ஆசிரியரின் நன்மதிப்பைப் பெற்றதால் ''விரிவுரையாளர் பதவி'' காத்துக்கொண்டிருந்தது. தன்னை வளம்படுத்திக்கொள்ள சிறிதுகாலம் பணிபுரிந்தாள். ஆயினும் தான்கற்ற கல்விச் செல்வத்தை தான் கற்ற பாடசாலைக்கே சமர்ப்பணமாக்கவேண்டும் என்ற ஒரே நோக்கினால் அப்பணியில் நாட்டமில்லாது தன் சொந்தக் கிராமத்துக்கு விரைந்தாள்.

ஆரணியின் விருப்பப்படி ஆசிரியர் பதவியும் அவள் கரம் கிடைக்க அன்று திங்கட்கிழமை எட்டு வருடங்களுக்குப்பின் தான் படித்த கல்லூரிக்கு புது மெருகோடு காலடி எடுத்துவைத்த ஆரணியின் கண்கள் பாடசாலையின் பசுமையையும், புதிய புதிய ஒழுங்குமுறைகளையும் கொள்ளை கொண்டன. பார்த்த வண்ணமே அதிபரின் அறையை நோக்கிய ஆரணி அங்கே அதிபராக அரவிந் இருக்கக்கண்டு ஆனந்தம்பொங்க நின்றவள் ''இத்தனைக்கும் காரணம் இவர் தானா?'' என எண்ணிக்கொண்டவள் அதிபரின் சிறந்த வழிகாட்டலின் பின் மாணவ சமுதாயத்தின் இலட்சியப்பாதையின் விடிவுக்காக சிறந்த ஒரு வழிகாட்டியாக வகுப்பறையை நோக்கி நகர்ந்தாள்.

(யாவும் கற்பனை)


தேவ இரக்கம் இளங்கோ

மட் / வாழைச்சேனை இந்துக் கல்லூரி.


உன்னைப் பார்த்ததும் சிரித்துப் பேசுகிறவர்கள் பலர் இருப்பார்கள். அவர்கள் அனைவரையும் நம்பிவிடாதே. நீ இல்லாத இடத்தில் உன்னைப் பாராட்டுகிறவனே உண்மையான நண்பன்.

முன்னால் சிரித்துப் பேசி பின்னால் நிந்தித்துப் பேசும் யாரையும் நீ நல்ல நண்பனாகக் கொள்ளக்கூடாது அவர்கள் நட்பின் ஆற்றலை உணராதவர்கள். அவர்களுடன் நீ நட்புக் கொண்டால் உன்னுடைய நட்பில் ஆத்மீகம் இருக்காது.

எல்லா மனிதர்களிடத்தும் ஈஸ்வரன் இருக்கின்றான். ஆனால் ஈஸ்வரனிடத்தில் எல்லா மனிதர்களும் இல்லை இதுதான் அவர்கள் துன்பப்படுவதற்குக் காரணம்.

(ஸ்ரீ இராமகிருஷ்ணர்)

# இளமைத் துளிகளில்.........

வாழ்க்கையில் ஒருமுறை
வருவதுதான் இளமை...
கடந்து வந்த காலங்களில்
கற்ற கலைகள்தான் எத்தனை எத்தனை

❀ ❀ ❀

பாடசாலை செல்ல
படலை வரை சென்று விட்டு
வயிற்று வலி உருவாக்கி
வாந்தி எடுப்பது போல் நடித்து
பாதை யோர மழைநீரில்
வேண்டு மென்று சறுக்கி
காயம் வராமல் விழுந்து
"கட்" அடித்ததும்...

❀ ❀ ❀

இருட்டு வேளையிலே
திருட்டு இளநீருக்குப் போய்
தோட்டக்காரன் வந்தபோது
அவ்விடத்திலே மாட்டிக்கொண்டு
மணிக் கணக்கில் அதிலிருந்து
தூங்கி முழித்ததும்...

❀ ❀ ❀

பால்நண்டு அடிக்கவென்று
பக்கத்து ஊர் கடற்கரைக்கு போய்
"பை" நிறையப் பிடித்து
மண்ணோடு சேர்த்துப் பொரித்துச் சாப்பிட்டு
பலருக்கு பல் உடைந்து
பதறிப் போனதும்...

❀ ❀ ❀

பின்னேர வேளையில்
பிரத்தியேக வகுப்பென்று கூறிவிட்டு
படம் பார்க்கப் போய் அமர்கையில்
பக்கத்து வீட்டுக்காரரைக்கண்டு
பதுங்கித்தவழ்ந்து சென்று
பலர் காலில் முட்டியதும்...

❦ ❦ ❦

வருடாந்தம் வருகின்ற
ஊர்க் கோயில் திருவிழாவில்
அரிச்சந்திர நாடகம் போட்டு
வசனத்தில் இடை மறந்து
"அன்பே வா" படக்கதை பேசி
கல்லெறிவர பின்வழியால் ஓடியதும்...

❦ ❦ ❦

காதலெனும் காற்றை
சுவாசிக்க போக - அது
கரியமலவாயுவாகி மூச்சு திணறவைக்க
சோகச் சுமையை துயரத்துடன் சுமந்ததும்...

❦ ❦ ❦

எத்தனை எத்தனை
இன்னும் எத்தனை எத்தனை
இனியும் வருமா? - அந்த
ஏகாந்த இளமை?...

ஆக்கம்: **திரு. செ. கலையரசன்**
ஆசிரியர்
மட் / கிண்ணையடி சரஸ்வதி
வித்தியாலயம்,

❦ கல்வி பெற விரும்பினால் நாவை அடக்கு **(லவாட்மன்)**

தீபங்களே எங்கும் என்றும்
உங்கள் சுடர் பரவட்டும்



சகலவகையான
சிற்றுண்டிகளையும்,
குளிர்பானங்
களுக்கும்,
வைடவங்களுக்கேற்ப
தேவையான
உணவுப் பொருட்களையும்
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
சிறந்த இடம்

## றமிஸ் ஹோட்டல்

**பிரதான வீதி,**
**வாழைச்சேனை.**

ஆசிரிய பணி என்றென்றும் சிறப்புற
வாழ்த்துக்கள்





22 கரட்டில்
அழகிற் சிறந்த தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்

**அம்பிகா நகை மாளிகை**

நம்பிக்கை! நாணயம்!! நேர்மை!!!
இவற்றிற்கு இன்றே நாடுங்கள்

**அம்பிகா நகை மாளிகை**
**மெயின் வீதி, வாழைச்சேனை.**

ஆசிரிய தீபமே உனை வாழ்த்துவதில்
அகமகிழ்கின்றோம்



''ஆள்பாதி
ஆடைபாதி''
மற்றவர்களைக்
கவர

**''கணேஸ் நியூ டெயிலர்ஸ்''**

தரமான முறையில்
சேட், றவுசர், காற்சட்டை
அழகிய டிசைன்களில் உடனுக்குடன்
தைத்துக்கொள்ள

## கணேஸ் நியூ டெயிலர்ஸ்

பிரதான வீதி, வாழைச்சேனை.

தீபத்திற்கு எமது வாழ்த்துக்கள்



**அன்பளிப்புப் பொருட்கள்,**
**வீட்டுப்பாவனைப் பொருட்கள்,**
**விளையாட்டுப் பொருட்கள்**
**ஆகியவற்றுக்கு நீங்கள்**
**நாடவேண்டிய ஒரே இடம்**

## பிள்ளையார் ஸ்ரோர்ஸ்

**பிரதான வீதி,**
**வாழைச்சேனை.**

# "சாது மிரண்டால்?" .........

"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் எனும் அணியாரம் படைத்த தமிழ்நாடு'' என்று கூறிய முகத்தான். சிலப்பதிகாரக் காவியம் செந்தமிழ் வீரன் பாரதியின் நெஞ்சையள்ளிய செய்தி புலப்படுகிறது. ''தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தேறும் சிலப்பதிகாரம்'' என்று கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை கூறியதால் தேன் நிகர் காவியம் இது என்பது தெளிவாகிறது. இவ்வாறாக பலப்பல அறிஞர்களின் கருத்தையும் புலவர்களின் உள்ளத்தையும் ஆராய்ச்சி வல்லுனரின் அறிவினையும் சிலப்பதிகாரம் காலம் காலமாக ஆட்கொண்டு வந்திருக்கிறது.

அந்தவகையிலே சிலப்பதிகாரத்தின் முக்கிய கதை மாந்தர்களின் முதனிலைப்படுத்தப்படுபவள் கண்ணகியாவாள். அநத கற்புத் தெய்வத்தின் இருவிதப்பட்ட குணவியல்புகளையும் விளக்குவதே இக்கட்டுரை.

சாதாரண பெண்களுக்கு இல்லாத பெரும் குணம் கொண்டவள் கண்ணகி அதாவது அடக்கமுடமை, தகை சான்ற சொற்காத்தல், அருளுடைமை, மெய்யியல்பு, நாணுடமை, மனைத்தக்க மாண்பு. அட்டித் தொழில்வண்மை போன்ற சிறந்த சாதுவான குணங்கள் கொண்டே தன் கணவனான கோவலனை நிர்வகித்தாள்.

அப்படியிருந்தும் பொன் செய் கொல்லனால் பொய்க்குற்றம் சாட்டப்பட்டு கோவலன் கொலை செய்யப்பட்டதை அறிந்த கண்ணகி நீதிமுறையை நிலை நிறுத்தவும், குற்றமற்ற கோவலன் மீது சுமத்தப்பட்ட பழியைத் துடைப்பதற்குமாகவே பொங்கி எழுந்தாள். போராடிப் புரட்சி செய்தாள், வீட்டுக்குள்ளே ஒதுங்கியிருந்த கண்ணகி வீதிக்கு வந்து வீராவேகத்தோடு சீறி எழுந்தாள். சாதுவான குணம்படைத்த கண்ணகி நாட்டையே தீமூட்டி எரிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டாள்.

முதலில் கண்ணகியினது சாதுவான குணங்கள் சிலவற்றை நாம் நோக்கின் அவை பின்வருமாறு அமையும்.

1. கோவலனும் கண்ணகியும் திருமணம் புரிந்தபின் எழுநிலை மாடத்து இடைநிலத்து இருந்தபோது அவன் அவளைப் பார்த்து ''மாசறு பொன்னே வலம்புரி முத்தே'' என உலவாக் கட்டுரை பல பாராட்டியபோது எவ்வித மறு மாற்றமும் மொழியாது அடக்கத்தோடு இருந்த பண்பு அவளது அடக்கமுடமையைக் காட்டுகிறது.

2. கவுந்தியடிகளும் கோவலனும் கண்ணகியும் மதுரை மாநகர் செல்லும்போது வம்பப்பரத்தையும் மறுமொழியாளனும் அவர்களைப் பார்த்து ஏளனம் புரிந்தனர். அவ்வேளை கவுந்தியடிகள் அவர்களைப் பார்த்து ''முள்ளுடை காட்டில் முதுநரி யாகுக'' எனச் சாபமிட்டபோது கண்ணகி அவர்கட்கு இரங்கி ''செய் தவத்தீர் நம் திருமுன் பழைத்தோர்க்கு உய்திக்காலம் உரையீர்'' என வேண்டினாள். இப்பண்பு கண்ணகியினது அருளுடைமையைக் காட்டுகிறதல்லவா?

3. மேலும் பல காய்கறி கொண்டு மதுரையில் மாதரிமனையில் தன் கணவனுக்கு உணவு சமைத்து தன் காதலன் அடிகளைக் கழுவினாள். தன் கையாலே தண்ணீர் தெளித்து தரையினை மெழுகி குமரி வாழை

யின் குருத்தகம் விரித்து ''அமுதம் உண்க அடிகள் ஈங்கு'' என அழைத்து உண்பித் தாள் இப்பண்பு அவளது அட்டித் தொழில் வண்மையைப் புலப்படுத்துகிறது.

4. வீட்டைவிட்டு வெளியிலே வராத கண்ணகி வெயிலின் கொடுமையையும் நடந்து செல்வதால் உண்டாகும் துயரமும் அறியாத அத்துணை மெல்லியல்புடையவள் என்பதை அவள் புகார் நகரை விட்டு சிறிது தொலைவு நடந்தவுடனேயே தன் கணவனுடன் ''மதுரை மூதூர் யாதென'' வினவுகிறாள். இப்பண்பானது கண்ணகி மெல்லியல்புடையவள் என்பதைக் காட்டுகிறது.

மேற்கூறியவாறு எல்லாம் நல்ல சாதுவான குணங்கள் பல கொண்ட கண்ணகி தன் கணவன் கள்வன் எனக்கண்டு கொலை செய்யப்பட்டதை அறிந்ததும் பொங்கி யெழுந்து சீறுகிறாள். வீட்டுக்குள் ஒதுங்கி யிருந்தவள் வீதிக்கு வந்து வீராவேசத்தோடு கனல் பறக்க நீதி கோருகிறாள். இவற்றுக்குச் சில உதாரணங்கள் வருமாறு.

1. சிலம்பு விற்கச்சென்ற தன் கணவன் என்னானான்? என்று தெரியாமல் ''காதலற் காண்கிலேன் கலங்கி நோய்கைம்மிகும் ஊதுலை தோற்க உயிர்க்கும் என் நெஞ்சன்றே'' என அரற்றினாள் கண்ணகி ''அரசுறை கோயில் அணியார் நெஞ்சிழும் கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே''... குறைகழல் மாக்கள் கொலை குறித்தனரே'' எனக் கேட்டதும் அவள் பட்ட துன்ப நிலைக்கு எல்லையுண்டோ? (உதாரணம்)

''பொங்கி எழுந்தாள் விழுந்தாள்
பொழிகதிர்த்
திங்கள் முகிலோடுஞ் சேண் நிலம்
கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள் தன் கேள்வனை
எங்கணா என்னா இணைந்தேங்கி
மாழ்குவாள்
அன்பனை இழந்தேன் யான் அவலங்
கொண்டழிவலோ...''

என்னும் பாடல்களில் இருந்து அவள் பட்ட துயரம் எமக்குத் தெரிகிறதல்லவா.

2. மேற்கூறியவாறு துன்பத்துடன் புலம்பிய கண்ணகி வெட்டுண்டு கிடந்த தன் கணவனைக் கண்டாள்.

''என்னுறு துயர்கண்டும் இடருறும் இவள்
என்னீர்
பொன்னுறு நறுமேனி பொடியாடிக்
கிடப்பதோ!
பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும்
உண்டுகொல்
கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறா உம்
பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும்
உண்டுகொல்''

என அரற்றினாள். தன் கணவன் தொழுதகைய திருந்தடியைத் துணைவனைக் கையாற் பற்றினாள் ''வேந்தன் தனைக் கண்டித் திறங் கேட்பேன்யான்'' என்று கூறிப் பாண்டியனின் அரண்மனை அடைந்தாள்.

தன் கணவன் ''கள்வன்'' என வீண்பழி சுமத்தப்பட்டு கொலையுண்டமை அறிந்ததும் கண்ணகிபால் அமைந்த அடக்கம், நாணம் பொறுமை ஆகிய அனைத்தும் புறந்தோடி விட்டன. ''பீடு அன்று'' எனச் சுருங்கிய சொற்களால் பேசும் இயல்பினளான அவள் அப்போது வெஞ்சினம் உற்றவளாய் இணையரி சிலம்பொன்று ஏந்தியவளாய் வாயிற் காவலனைக்கூட விட்டு வைக்காது ''வாயிலோயே வாயிலோயே அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து அறிவிப்பாயே'' என விரித்துப் பேசலானாள்.

அது மட்டுமா?

அரிமா ஏந்திய அமளிமிசை இருந்த பாண்டியப் பேரரசனைப் பார்த்து தேரா மன்னா! செப்புவதுடையேன்...... கண்ணகி என்பதென் பெயரே...... ''என்காற் பொற் சிலம்பு மணியுடையரியே'' என நீண்ட தொடர்களால் தன் நிலை எடுத்துக்கூறிப் பாண்டியனின் வாயினாலே ''யானோ அரசன் யானே கள்வன் கெடுக என் ஆயுள்'' எனச் சொல்லவைத்தது அவளது சீற்றத்தின் எதிரொலி அல்லவா?

3. கண்ணகி மதுரையை எரித்தபோது எரிவெம்மை பொறுக்காத மதுராபுரித்தெய்வம் கண்ணகிக்கு எதிரே நிற்பதற்கு அஞ்சிப் பின்புறத்தே வந்து "கேட்டிசின் வாழி நங்கை என்குறை" எனக் கெஞ்சியது. கண்ணகியோ தன் திருமுகத்தை வலப்புறமாகத் திருப்பி "யாரை நீ என்பின் வருவோய் ....." என்று கேட்டாள் எனின் இவள் அஞ்சாமையை என்னென்பது.

எனவே

சாதுவாகக் காணப்பட்ட கண்ணகி தன் கணவன் கள்வன் எனக்கண்டு கொலையுண்ட தன்பின் சீறிப்பாயும் சிங்கமாகிறாள். தன் கணவன்மீது சுமத்தப்பட்ட வீண்பழியைத் துடைக்கும் முகமாகவே அவள் பொங்கியெழுந்தாள். புரட்சி செய்தாள், போராடினாள், வீட்டுக்குள் அறக்கொள்கையுடன் வாழ்ந்தவள் வீதியில் மறக்கொள்கையுடன் சொற்போர் புரிகிறாள்.

கண்ணகியின் சீற்றத்தால் மதுரை எரிகிறது. பாண்டியனும் கோப்பெருந்தேவியும் உயிர் துறக்கின்றனர். கண்ணகி தெய்வமாகிறாள் போன்ற இன்னோரென்ன நிகழ்வுகள் இடம்பெறுகிறது. ஆகவே பெண்மையானது அடங்கியிருப்பது மட்டுமல்ல அடக்கத்தில் ஆற்றலை அடக்கி வைத்திருப்பது. ஒதுங்கியிருப்பது மட்டுமல்ல பெண்மை ஒதுக்கத்தில் வீரத்தை ஒடுக்கி வைத்திருப்பது, பணிந்திருப்பது மட்டுமல்ல பெண்மை பணிவிற்குள் துணிவை பற்றியிருப்பது பெண்மையாகும்.

எனவே கண்ணகி மேற்கூறிய கருத்துக்களுக்கு இலக்கணமாகவே திகழ்ந்தாள். சாதுவாகக் காணப்பட்ட கண்ணகி தனது கணவனின் பிரிவின்பின் வெகுண்டெழுந்து மதுரை மூதூரின் மேற்கூறிய நிகழ்வுகளுக்குக் காரணமாகிறாள். சாது மிரண்டால் காடுகொள்ளாது அல்லவா!......

**பூ. தர்மபாலன்**
மட்/கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலயம்,
வாழைச்சேனை.

1. ஒருவன் படித்தவனாக இருக்கவேண்டும்.
2. படிக்கிறவனாக இருக்கவேண்டும்.
3. படித்தவன் சொல்வதைக் கேட்பவனாக இருக்கவேண்டும் ஆனால் நாலாவது நபராக (ஆளாக) இருக்கக்கூடாது. (முகம்மது நபி)

❀ கற்றவன் கண்ணாலும் மனதாலும் பார்க்கிறான். கற்காதவன் கண்ணால் மாத்திரம் பார்க்கிறான். (மார்க் ஓட்சா)

❀ பிழையை எடுத்துக்காட்டாமல் விடுவது கல்வித்துறையில் ஒழுக்கமின்மையை ஆதரிப்பதாகும். (கால்மாக்ஸ்)

❀ ஞானம் அதிகரிக்க அதிகரிக்க வார்த்தை குறைகிறது.

# சமூகத்தின் பார்வையிலே ...?

**ஐயா !**

ஒக்டோபர் 6ந் திகதியை யாருமே மறக்க முடியாத நாள் ஏன் தெரியுமா? இன்றுதானே நாம் ''ஆனா'', ''ஆவன்னா'' என்றால் என்ன, ஒரு தொழில் என்றால் என்ன? ஒரு கலை என்றால் என்ன அதை நமக்கு அப்படியே புகட்டி உள்ளுணர்வுடன் சேர்த்து விட்ட ஆசிரியர்களை கௌரவப்படுத்தும் நாள். ஆம் இன்றுதான் உலக ஆசிரியர் தினம்.

சமூகமே சொல்கிறது, வெள்ளைக்காரன் எதையும் நேரத்திற்கும் குறித்த நாளிலும் செய்வதில் கெட்டிக்காரன். அதை ஒழுகும் சில காக்கைநிறத்தவர் கூட இதனால்த்தான் ''அவன் வெள்ளைக்காரன்'' என போற்றப்படுகின்றனர். இருந்தும் அறிவொளி பரப்பி அறியாமை நீக்கி கடமையை உணரச்செய்து குறித்த வேலையை குறித்த நேரத்தில் கடமையாற்றும் திறமையை வளர்ப்பவர்கள் இவ் ஆசிரியர்கள்.

ஐயா!

இதுமட்டுமல்ல, சமூகத்தில் உள்ள சாதாரண பிரஜை ஒருவர் மூலமாவது, கண்டனத்திற்குள்ளாகும் ஒரு சமூகப் பிராணியும் இவ் ஆசிரியர் சமுதாயமே. ஒரு தந்தை தனது குழந்தையை ஆசிரியரிடம் ஒப்படைத்து ''இவன் வகுப்பில் ஒழுங்காக வேலை செய்யாவிட்டால், கண்ணை மட்டும் விட்டுப்போட்டு மற்றைய இடங்களை அடித்து உடைத்தாலும் பரவாயில்லை. நான் வந்து கேட்கவே மாட்டேன்,'' என ஒரு சீருடைக்காரனாக நினைப்பதும் இவ் ஆசிரியரையே.

இதுமட்டுமல்லாமல், நீதியான உழைப்பு, நெறி தவறி பிழைக்கத் தெரியாமை, ஏமாற்றப்படுபவராக மற்றோரால் நினைக்கப்படுபவர், சத்தம்போட்டு வலியுறுத்தி நியாயம் கற்பிக்க அல்லது சண்டை பிடித்து மற்றையவர்களை பலவீனப்படுத்த தெரியாத ஒரு சமூகத்தின் உயர் பிராணியே இவ் ஆசிரியர் தான். இத்துடன் இன்றைய கல்விமுறைக்கமைய, ஒரு மாணவன் எதை எம்முறையில் விளங்க விரும்புகின்றானோ அல்லது அவனது நடவடிக்கைகள் எந்தளவில் உள்ளதோ அந்தளவிற்கு ஆசிரியரானவர் கீழிறங்கி மாணவனுடன் நண்பராக இருந்து ஆடியும், பாடியும், அவன் விரும்பும் பாணியில் வழிப்படுத்துவார். ஒரு பெற்றோர் ஒப்படைக்கும் மாணவரை, எப்பாணியிலும் பயிற்சியளித்து உருவாக்கும் பொறுப்புடையவராக இவ் ஆசிரியர் சமுதாயம் கொண்டுள்ள வல்லமையை நீங்கள் யாவரும் அறிவீர்கள்.

இவற்றையெல்லாம் விட 40 பேர் கொண்ட வகுப்பில் 40 சோடிக்கண்களுக்கும் முன்பாக நின்று பரிவு, பாசம், நடிப்பு போன்ற அத்தனை செயல்கள் மூலமும் மாணவரை கவரும் ஒரு சோடிக்கண்களான ஆசிரியர் பகீரத பிரயத்தனம் செய்து தனது கடமையை செவ்வனே நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபட, 4 சோடிக்கண்கள் அலை பாய்ந்து அங்கும் இங்கும் நோக்குவது கண்டால் ஆசிரியர் அடைவாரே ஒரு ஆத்திரம்... அப்பப்பா அதை எழுத்தில் வடிக்கவே முடியாது.

ஐயா! இதேபோல்த்தான் பாட இறுதியில் மதிப்பீடு இடம்பெற அதில் 75% மான மாணவர்கள் திறமையாக பதிலளிக்க அது கேட்டு அடைவாரே ஒரு ஆனந்தம் இதையும் எழுத்தில் வடிக்கவே முடியாது. இதை விட மேலாக, ஆசிரியர் ஒருவர்தான் கற்பித்த மாணவன் ஒருவன் உயர்தொழிலாற்றினால் அவனை, அது ''எனது மாணவன்,'' அது ''எனது மாணவன்'' என உயர்த்திப் பேசும் மனப்பாங்கு கொண்டவராகக் காணப்படுவார்.

இவை இப்படியிருக்க, அன்றும், இன்றும் ஆசிரிய சமுதாயமானது அடையும் வேதனைகள் பற்றியும், நிலை பற்றியும் அறிய ஆவ

லாய் உந்த நான் யாரை நாடி கேட்டறிவது. சமூகத்தில் ஆசிரியர் பற்றிய நிலைப்பாடு தான் என்ன? சமூகம் ஆசிரியர்மேல் கொண்டிருக்கும் அபிப்பிராயம் பற்றிய சில உண்மைகளைக் கண்டறியவேண்டும் இதற்கு நான் யாரை அணுகுவது என யோசித்து, இறுதியில் சமூகத்தின் சாட்சிகளாக சில அனுபவசாலிகளைச் சந்திப்பதால் பயனுண்டு எனவும் சிந்தித்து அந்த அனுபவசாலிகள்மூலம் கேட்டறிந்த உண்மைகளை உங்கள் மனக்கண் முன் நிறுத்துகின்றேன்.......

அன்று திங்கட்கிழமை நான் யாரைச் சந்திப்பது என யோசித்தபடி சென்ற என் கண்ணில் ஓட்டமாவடி பிரதேச செயலகம் கண்ணில்பட உள்ளுற ஒரு சந்தோஷம். நேரமும் முற்பகல் 11-25 எனவே நான் நினைத்த செல்லையா - சிவகுருநாதன் ஓய்வாக இருப்பார் என நினைத்து உள்ளே சென்றேன். என் ஊகம் தவறு, இருந்தும் எனக்காக சிறிதுநேரம் ஒதுக்கி என்னுடன் என் பேட்டிக்குத் தயாரானார்.
நான் கேட்டேன்,

ஐயா! ஆசிரியத்தொழில் பற்றி அல்லது ஆசிரியர் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

அது ஒரு கௌரவமான தொழில். தொழிலுக்கோ அல்லது ஆசிரியருக்கென்றோ தனியான பண்பு உண்டு என்றும் கூறி, ஆசிரியர் ஒரு ஏணி எனவும் கூறி மகிழ்வித்தார்.

நானும் உடனே, அப்படியானால் ''ஆசிரியர் தினம்'' கொண்டாடுவதன்மூலம் எதை உணரலாம்? ஐயா, அதாவது, எதிர்கால சந்ததியினர் ஆசிரிய சமுதாயத்தில் கூடிய பற்றினை வைத்துக்கொள்ள உதவும் ஒரு விழா. ஆனால் இதனை மாணவர்கள் ஆசிரியர்கள் மாத்திரம் இணைந்து கொண்டாடுவதைவிட, கல்விப்பணிப்பாளர் பிரதேசத்தில் உள்ள பல பெரியவர்கள்மூலம் ஒரு குழு அமைத்து அவர்கள் உதவியுடன் ஆசிரியர்களுக்கு விழா எடுக்க வழிசெய்வது மேலும் சிறப்பிக்கும். அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் தலைமை தாங்கி விழா நடத்தவும் விரும்புகின்றேன் என்றார்.

மேலும், நான் கேட்டேன்.

ஆசிரியர்கள் அணியும் கடந்தகால, நிகழ்கால உடைகள் சம்பந்தமாக என்ன கூறுகின்றீர்கள்?

உடையானது நாகரீக முன்னேற்றத்திற்கமைய சரியானது. இருந்தும் அன்றைய காலகட்டத்தில் ஆசிரியர், மாணவரிடையே வயது வித்தியாசம் அதிகம். எனவே உடையிலும் மாற்றம். மரியாதை காணப்பட்டது. இன்று அவ்வாறில்லை.

எது எப்படியிருப்பினும் சிலதேவைகளை நிறைவேற்ற ஆசிரியர்கள் மாணவர்களை ஈடுபடுத்தல் தவிர்த்தல் நல்லது. அதாவது சிகரட் வாங்குவதற்கு ஒருசில மாணவரை உபயோகிப்பது ஏனைய மாணவர் மத்தியில் மனத்தாக்கத்தை ஏற்படுத்தும். எனவும் கூற நான் அடுத்த கேள்வியைத் தொடுத்தேன்.

இன்றைய மாணவர்களது அடைவுகள் பெறுபேறுகள் அதிகரித்துக் காணப்படுவதற்கான காரணம்பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்? விஞ்ஞான முன்னேற்றம், ஆசிரியர்களுக்கான நல்ல பயிற்சிகள், ஆசிரியர்களின் நல்ல வழிகாட்டல் என்பனவற்றைக் கூறலாம். இப்பெறுபேறு மேலும் சிறக்க ஆசிரியர்கள் இருதொழில் செய்வதை விடல் நலம். பொருளாதாரக் கஷ்டம் இருப்பது வேதனைதான். அதைக்கூட அரசு குறைப்பதற்கு பல திட்டங்களை வகுத்துள்ளதனால் இனிமேல் மேலும் பெறுபேறுகள் தரமானவையாக வருமென எதிர்பார்க்கலாம் எனக் கூறினார்.

நீங்கள் தொடர்ந்து படித்து இதைவிட சிறப்பான நிலையை அடையமுடியாமல் போனமைக்கு தாங்கள் விட்ட தவறா அல்லது ஆசிரியர் எவராவது தடையாக இருந்தனரா?

நான் எனது படிப்பைத் தொடரமுடியாமல் போனமைக்கு எங்கள் பொருளாதார நிலையே காரணம். நான் படிப்பை இடையில் நிறுத்த எனக்கு கற்பித்த இரு ஆசிரியர்கள் வீடு வரை வந்து படிப்பை தொடரச்சொல்லி தெண்டித்தனர். அதேவேளை

எங்களுக்கு கற்பித்த ஆங்கில ஆசிரியர் சுயநல மிக்கவர். மற்றையவர்கள் கற்று அறிவதை விரும்பாதவர் ஏனோதானோ என்ற மனப் பாங்கில் நடந்துகொண்டவரது துரோகத் தனத்தையும் எங்கள் மாணவர் நண்பர்க ளால் மறக்கவே முடியாது.

இருந்தும் இன்றும் அந்த பாடசாலை நாளை நான் மீட்டு என்னை இந்நிலைக்கு உயர்த்திய என் குரு தெய்வங்களை நினைவு கூற உதவிய உங்களுக்கு ''நன்றி'' எனக் கூற நானும் திருப்தியடைந்து விடைபெற் றேன்.

இருந்தும் இன்னும் ஒருசிலரைக் கண்டு ஆசிரியத் தொழில்பற்றிக் கேட்டால் என்ன? என நினைத்து அந்நாளை எதிர்பார்த்தேன்.

அன்று புதன்கிழமை பி. ப. 1-45 மணி யிருக்கும் கடமை முடிந்து வீடு நோக்கி விரைந்துகொண்டிருந்த கிட்டத்தட்ட 50 வயது மதிக்கத்தக்க மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தரை பார் வீதியில் வழிமறித் தேன்.

ஐயா! நான் ஒரு ரீச்சர். எனக்கூறி உங் கள் பெயரென்ன? என்றேன். அவரும் என் னவோ ஏதோ என்று சிவலிங்கம் - மகாலிங் கம் என்றார்.

நானும். ஒன்றுமில்லை ஐயா. உங்களை எங்கள் ''ஆசிரிய தீபத்திற்காக'' பேட்டி காண விரும்புகின்றேன் என்றதும் அவரும் சம்மதிக்க,

ஆசிரியத் தொழில்பற்றி என்ன நினைக் கிறீர்கள்? என்றேன்.

என்னை எனது பெற்றோர் ஒரு ஆசிரி யரை நம்பி ஒப்படைக்க, அவர் தனது 60% செயற்பாடாலும் எனது 10% செயற்பாடா லும் செயற்பட்டே நான் இந்நிலைக்கு வரக் காரணம். இதேபோல் நானும் எனது பிள் ளைகளை ஆசிரியர்களை நம்பியே அவர் களது 60% செயற்பாட்டை நம்பியே ஒப் படைத்துள்ளேன். பிள்ளைகள் தமக்கு 40% செயற்பாடு இருக்குதென்று உணர்ந்தால் வெற்றியே.

இருந்தும் ஆயிரமாயிரம் மாணவர்கள் ஒப்படைக்கப்படும் ஆசிரியர் நடித்தாவது வாழவேண்டும். அவர் மாணவர்களுடன் கொண்டுள்ள தோழமை உணர்வு நல்வழி யைக் காட்டுவதாக அமைய வேண்டுமே யொழிய தனது பலவீனத்தைக் காட்டுவதாக அமையக்கூடாது. இல்லையேல் தோழமை யுடன் பழகுவதால் கிண்டல், கேலிக்கு மாண வர் மத்தியில் பஞ்சம் இல்லாமல் இருக்கும். எனவே ஆசிரியர் கவனமுடன் பழகவேண்டும் என்றார்.

அடுத்து ஒரு முக்கிய வினாவைத் தொகுக் கலாம் என நினைத்து......

அண்மையில் ஆசிரியர்கள் சம்பள உயர்வு பெற்றது பற்றி என்ன நினைக்கிறீர்கள்? உயர்வு சரியானதா?

உண்மையில் ஆசிரியரானவர் தனது தொழிலைச் செய்தால் மிகவும் கஷ்டமான தொழிலே ஆசிரியர்த் தொழில்தான். அத் துடன் பொருளாதார வளர்ச்சிக்கமைய அரசு செய்த சரியான நடவடிக்கைதான் சம்பள உயர்வு வழங்கியமை.

அதேவேளை அரசாங்கம், ஆசிரியரின் வேலைப்பளுவையும் குறைப்பதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். அதாவது ஒவ் வொரு வகுப்பிலும் மாணவர் தொகையை குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அப் போதுதான் சம்பள உயர்வால் அடைந்த உண்மையான பலனைக் காணலாம்.

எனக்கூறி சைக்கிளில் ஏறப்போனவரை மறித்து, ஐயா... இன்னுமொரு அதாவது, தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தடை யாக இருக்கின்றதா?

எனக் கேட்டேன். உடனே பக்கப்பார் வையால் மேலே பார்த்துவிட்டு,

இல்லை, தொலைக்காட்சி சமூகத் தையோ, மாணவரையோ சீர்குலைக்கின் றது என்று சொல்வதற்கில்லை. தொலைக் காட்சியில் கல்வி சம்பந்தமான விடயங் களும், ஏனைய சமூக முரண்பாடான நிகழ்வு

களும் காட்டப்படுகின்றதுதான். என்றாலும் அதன்மூலம் மாணவர் கெட்டுப்போகின்றார்கள் என்று கூறமுடியாது. காரணம் தொலைக்காட்சி, திரைப்படம் போன்றவை இல்லாத காலத்தில் இராமனின் மனைவி சீதையை இராவணன் அபகரித்துச் சென்றது குறிப்பிடத்தக்கதல்லவா. எனவே பார்ப்பதில் தேவையானதை எடுத்து தேவையற்றதை விடுவது அவரவர் விருப்பு. எனக் கூறியதும், என்னை நான் சுதாகரித்துக் கொண்டு விடை பெற்றேன். அடுத்து நான் தேடியவர் வரிசையில் இடம்பிடித்தவரின் கருத்தை நோக்குவோம்.

அன்று செவ்வாய்க்கிழமை, வேலைநாள். ஒரு தேவை கருதி மட்டக்களப்பு பிரதம தபால் நிலையத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே சென்றதும் இங்கும் ஒருவரை பேட்டி கண்டால் என்ன என நினைத்து,

விற்பனைப் பகுதியில் இருந்த பெண் அலுவலரான திருமதி, மேரி கொலஸ்ரிக்கா - குகதாசன் என்பவரை நாடி ''ஆசிரிய தீபம்'' பற்றிக்கூறி கேள்விகளைத் தொடுத்தேன்.

ஆசிரியத் தொழில் பற்றி என்னகூற விரும்புகிறீர்கள்? என்று கேட்டேன்.

உண்மையிலேயே இந்த உலகிலேயே உயர் தொழில். சமூகத்தை [கெடுக்கவோ அல்லது உயிர்ப்பிக்கவோ கூடிய தன்மை கொண்ட தொழில் என்றால் ஆசிரியர் தொழில்தான். நான் கூட ஆசிரியராக வரவே விரும்பினேன் தவறிவிட்டது. இதனால் எனது பிள்ளைகளையாவது ஆசிரியராக வரவைக்க விரும்புகின்றேன் என்றார்.

அப்படியானால், நீங்கள் ஆசிரியர் ஒருவரின் கடமைபற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

ஆசிரியர்கள் தங்கள் கடமையை சரியாக ஒழுகுபவர்கள் இதனை நான் அனுபவத்தில் கூட காண்கின்றேன். எனக்கு கற்பித்தவர்கள் சரியானமுறையில் தங்கள் பணியை மேற்கொண்டார்கள். இதனால்த்தான் இன்று அவர்கள் மாவட்ட கல்விப்பணிப்பாளர், பிரதேச கல்விப்பணிப்பாளர், உயர் பாடசாலை அதிபர்கள் போன்ற பதவிகளை வகிக்கின்றனர். இத்துடன் அவர்களிடம் கற்ற விடயங்கள் பசுமரத்தாணிபோல் பதிந்துள்ளதனால் இரசாயனவியல், பௌதீகவியல் போன்ற பாடங்களை எனது குழந்தைகளுக்கு என்னால் சொல்லிக்கொடுக்க முடிகின்றது என்றார்.

சரி அடுத்த கேள்வி சற்று வித்தியாசமானது எனக்கூறி,

ஆசிரியர்கள் இன்று அதிக சம்பளம் பெறுவது பொருத்தமற்றது என பலரும் குறைபடுகிறார்களே. உங்கள் கருத்து என்ன?

நிச்சயமாக ஆசிரியர்கள் அதிக சம்பளம் பெறவே வேண்டும். மேற்குலக நாடுகளில் அதிக சம்பளம் பெறுபவர்கள் ஆசிரியர்கள் தான். ஆசிரியத் தொழிலின் மகத்துவம் கஷ்டம் உணர்ந்தே அதிக சம்பளம் வழங்குகிறார்கள்.

ஏனெனில், காலை 7-00 மணி — மதியம் 2-00 மணிவரை அதாவது சுமார் 6 மணி நேரம் நின்ற நிலையில் தனது உடல், உழைப்பு மாத்திரமின்றி தன் வாயால் வரும் ஒலியின்மூலம் நாட்டுக்குத் தேவையான மனித வளத்தை உருவாக்கித்தரும் இவ் ஆசிரியர்களுக்கு வழங்கிய சம்பள உயர்வு நியாயமானதே. மற்றும் காத்தாடியின்கீழ் வேலை செய்பவர் அல்ல ஆசிரியர். இத்துடன் ஏனைய தொழில் புரிபவர்கள் மேலும் பலவகை சலுகைகளைப்பெற இவை எதுவும் பெறாத ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவேண்டியதொன்றே. என அடித்துக்கூறியதும், சற்றுத்துணிவுடன்,

ஆசிரியர்களுக்கான '' ஆசிரிய தினம் '' கொண்டாடுவதுபற்றி என்ன கூறுகிறீர்கள்? எனத் தொடுத்தேன் வினாவை,

நாங்கள் கற்ற காலத்தில் இப்படி விழா நடைபெறவில்லை என்ற கவலையாக இருக்கிறது. இவ் விழாவை பெற்றோரும் இணைந்து நடாத்துதல் பெருமைக்குரியதாக இருக்கும். ஏனெனில் படைத்தது இறைவன். வழிப்படுத்தி எடுப்பது ஆசிரியர். எனவே குருவும் போற்றுதற்குரியவர். அவர்களை வாழ்த்த கிடைப்பது நமது அதிஷ்டம்.

இத்துடன் இன்று பாடசாலைகளில் பெரியகுறை என்னவென்றால் ஆசிரியர் பற்றாக்குறையே. இதை உணர்ந்து கற்று வேலையற்று இருப்பவர்கள் தொண்டர் அடிப்படையிலாவது சேவையாற்ற முன்வருவது விரும்பத்தக்கது. இதேபோல் இன்று மலைநாடுகளில் வேறு தொழில் புரிபவர்களாக இருந்தும் மாலை நேரங்களில் இலவசமாக மாணவர்களுக்கு கற்பிக்கின்றார்கள். ஆங்கிலப் பாடம் இவ்வாறு கற்பிக்கப்படுகின்றது. அங்குபோல் இங்கும் வேறு தொழில் புரிந்தாலும் தங்கள் திறமையை அறிவை மாலை நேரங்களில் மாணவர்களுடன் இலவசமாகப் பகிர்ந்தால் சமூகத்தின் கல்வி வளர்ச்சி மேலானதாகவிருக்கும் எனக்கூறவும் தவறவில்லை. நானும் தவறாமல் நன்றிகூறி விடைபெற்றுக்கொண்டு அடுத்தவரைத் தேடினேன்.

நான் உங்களுக்கு அறிமுகப்படுத்தும் புதியவர் ஆயுள்வேத மத்திய நிலைய டாக்டர் அருந்ததி - இராசையா அவர்கள். இவரை 19-10-95 (வியாழக்கிழமை) அன்று மதியபோசன இடைவேளையில் சந்தித்தேன்.

வழக்கம்போல் அறிமுகத்துடன், ஆசிரியத் தொழில்பற்றி உங்கள் கருத்து என்ன? என வினாவ,

மகத்தான தொழில் சமூகத்தை விரும்பிய வகையில் மாற்றமுடியுமானவர்கள். ஆசிரியர்கள் குலைந்தால் சமுதாயமே சீர்குலைந்துவிடும். அதேவேளை சில ஆசிரியர்கள் சமுதாயத்திற்கு செய்யும் பணியாக, தங்கள் ஆசிரியத் தொழிலைவிட்டு வேறு தொழிலுக்குச் செல்வதே சமுதாயத்திற்கு ஆற்றும் சிறந்த பணியாக அமையும். ஏனெனில் சகலவிதமான தராதரமும் இருந்தும் கற்பிக்கும் திறனோ அல்லது விருப்போ, பல்வேறு சூழலிலும் இருந்துவரும் மாணவர்களைப் புரிந்துகொள்ளாத தன்மை கொண்டவர்களால் மாணவர் ஏமாற்றப்படுகிறார்கள். எனவே இப்படியானவர்கள் தமக்கு பிடித்த துறையில் நுழைவதால் கற்பிக்கும் திறனுடைய ஆசிரியர்கள் நுழைந்து குறையை நிவர்த்தி செய்யக்கூடியதாகவிருக்கும். இது சமூகத்திற்குச் செய்யும் உயரிய பணியாகும்.

ஏனெனில் எனக்கு இரண்டாம் மொழி கற்பித்த ஆசிரியர் கைக்கொண்ட சுயநலத்தால் கிராமத்திலிருந்து நகரப் பாடசாலைக்கு உயர்வகுப்பில் அனுமதிபெற்று வந்தபோது அங்கேயே கற்றுவந்த ஏனைய மாணவர்களுடன் ஈடுகொடுத்து கற்கமுடியாத நிலையை உணர்ந்தேன். இன்றுகூட வேதனைப்படுகின்றேன் என்றார்.

உங்கள் உயர்வில் ஆசிரியர் பணி எவ்வளவு மதிப்பிடத்தக்கது?

நான் கற்பதற்கும் நல்வழிப்படுத்துவதற்கும் உதவியவர்கள் எனது தாயும் என்னைக் கற்பித்த மறக்கமுடியாத ஆசிரியர்களும் எனக் கூறத்தவறவுமில்லை.

உடன், தொடரும் வினாவாக, ஆசிரியர் தொழிலுக்கும் உங்கள் தொழிலுக்கும் உள்ள பொறுப்புகள்பற்றி என்ன கூறுகிறீர்கள்? என வினாவ,

வைத்தியர்களும், ஆசிரியர்களும் ஆற்றும் பணியானது உயிருடன் ஆற்றும் பணியாகும். நோய் ஏற்பட்டால் நாங்கள் குணப்படுத்துவோம். அந்த இடத்தில் சீர்படுத்துவோம். ஆனால் ஆசிரியர் தொழில் பூரண மூளை வளர்ச்சி, மனப்பாங்கு, அறிவு, ஆற்றலையும் எழுச்சியடையச்செய்து ஒருபூரண மனிதனாக்கும் வல்லமை பொருந்திய தொழிலாகும். எனக் கூறினார்.

நான் இறுதியாக இவரிடம்,

ஆசிரியர் மாணவருடன் பழகும் தோழமை முறைபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

சகல தொழில் துறைகளிலும் தோழமை முறை நல்லதே, இருந்தும் இன்றைய கல்வி முறைக்கமைய. கற்றலுக்கு துணைபுரிபவர்களே ஆசிரியர்கள். எனவே கண்டிப்புடன் கூடிய தோழமை தன்மை கொண்டவர்களாக இருத்தல் நல்லது என்றார். நானும் நன்றிகூறி விடைபெற்றேன். இருந்தும் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவரிடம் கருத்துக்களைக் கேட்டறிந்தால் எவ்வளவு சிறப்பாக இருக்குமென நினைத்துக்கொண்டேன்.

எனவே, மட்டக்களப்பு நகரத்தில் தற்போது வசித்தாலும் இலங்கையின் பலபாகங்களிலும் கடமைபுரிந்த அவரை நினைத்தபடி இரவு 6-30 மணிபோல் அவரது வீட்டை அடைந்தேன்.

அங்கு ஆசிரியர் திருமதி. கிருஷ்ணலீலா-பத்மநாதன் அவர்கள் கடமையில் ஓய்வு பெற்றிருந்தாலும், தையல் இயந்திரத்தில் ஏதோ தைத்தபடி இருந்தார். அருகில் ஓய்வு பெற்ற அதிபர் திரு. கே. பத்மநாதன் அவர்களும் இருந்தார். எனக்கு ஒரு ஆசிரிய குடும்பத்தையே சந்திப்பதில் பெருமகிழ்ச்சி. ஏனெனில் இவர்களது இரு குழந்தைகளும் ஆசிரியர்களாக கடமை புரிகின்றார்கள்.

பின், என்னை அறிமுகப்படுத்திவிட்டு ஆசிரியர் தினம் பற்றி அவர்களின் கருத்தைக் கேட்டேன்?

அவர்கள் என்னிடம் ஆசிரியர் தினம் பற்றி கேட்டறிந்துவிட்டு, ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவென ஒரு தினம் அவசியமில்லை. ஏனெனில் கடமையை கண்ணென மதித்து ஒழுகும் ஆசிரியர்கள் தினம் தினம் கௌரவிக்கப்பட்டே வருகிறார்கள். ஒரு மாணவனாவது கௌரவிக்கவே செய்வான். இருந்தும் உலகளாவிய ரீதியில் ஒரு தினம் ஒதுக்கியது பெருமைக்குரியது எனக்கூறினார்.

அத்துடன் கிராமப்புற பாடசாலைகளில் நடைபெறும் ஆசிரிய தினம் பற்றித் தெரியாது. ஆனால் நகரப்புற பாடசாலைகளில் மாணவர்கள் ஆசிரிய தினத்தில் பரிசுப் பொருட்கள் வழங்குவதாக அறிகின்றோம். மாணவர்களின் பொருளாதார நிலமைக்கமைய பரிசுப்பொருளின் பெறுமதி வேறுபட ஆசிரியர்களின் தன்மையும் மாறிவிடும். இதனால் பரிசுப்பொருள் அழகல்ல என்றதும், அடுத்த வினாவைத் தொடுத்தேன்.

அன்றைய காலகட்ட ஆசிரியர்களின் சேவையிலும், இன்றைய காலகட்ட ஆசிரியர்களின் சேவையிலும் உள்ள வித்தியாசம் என்ன?

அன்றும் இன்றும் உரியமுறையில் வகுக்கப்பட்ட வழியில் கல்விச் சேவையானது காணப்படுகின்றது. இருந்தும் அன்றைய ஆசிரியர்கள் நாட்டின் பலபாகங்களிலும் சேவையாற்றினர். இன்று ஒரு பாடசாலையிலேயே பன்னெடுங்காலம் கடமைபுரிகின்றனர். இப்படியானவர்கள் கிராமப்புற பாடசாலைகள் பற்றியோ, மாணவர்களின் விருப்பு வெறுப்பு பற்றியோ அறியாதவர்களாக இருப்பது வேதனையானது. இந்நிலை மாறுவது விரும்பத்தக்கது.

இத்துடன், கற்பிக்கும் ஆசிரியர் பாடசாலையின் சூழல் பழக்க வழக்கத்திற்கேற்ப மாறாமல், தனது பழக்க வழக்கங்களுக்கமைய சூழலை மாற்றக்கூடிய திறமையுடையவராக இருக்கவேண்டியது அவசியம்.

ஆசிரியர் கடமையுணர்வு, நேர்மைமிக்கவர்கள் இதேபோல் மாணவர்களும் பயபக்தியுடையவர்கள். எனவே விசாரணைகள் செய்யவேண்டியேற்பட்டால் தீர விசாரித்த பின் தண்டனையளித்தல் நல்லது. இல்லையேல் அம்மாணவன் பாடசாலையை விட்டு விலத்தியோடும் நிலையும் ஏற்படும்.

அதேவேளை, பாடசாலைக்கு வராத மாணவர்களை தண்டித்தல் வேண்டும். பாடசாலைக்கு வந்தால் எதையாவது கற்பான். வராவிட்டால் யாவும் சுத்த சூனியமாக இருக்கும். எனவே வரவை அதிகரிக்க வைத்தல் அவசியம். இது தனது அனுபவத்தில் கிடைத்த உண்மை என ஓய்வுபெற்ற அதிபர் திரு. கே. பத்மநாதன் கூறவும் தவறவில்லை.

பாடசாலையில் பெற்றோர் ஆசிரியர் தொடர்புகொள்ளல் சீரற்றே காணப்படுகிறது. நீங்கள் கற்பித்த காலத்தில் எப்படி? இதை நிவர்த்திசெய்ய ஏற்றவழிமுறைஎன்ன?

உண்மையில் அன்றும் கூட பெற்றோர் வந்து தங்கள் குழந்தைகளின் நிலைபற்றி ஆசிரியருடன் கலந்துரையாடுவதேயில்லை. இதை மாற்ற பாடசாலையின் அதிபர் நடவடிக்கை எடுக்கலாம். ஒரு மாதத்தில் ஒரு நாளை ஒரு வகுப்பிற்கு ஒதுக்கி அந்நாளில் அவ்வகுப்பு மாணவர்களது பெற்றோரை வகுப்பாசிரியருடன், அதிபரும் தொடர்பு கொண்டு குறைநிறைகளையும் மதிப்பீட்டையும் பற்றி உரையாடலாம் என நினைக்கின்றேன் என்றார்.

அடுத்த கேள்வியை அதிபர், ஆசிரியரிடம் கேட்பதே பொருத்தமென நினைத்து,

தாங்கள் கற்பித்த காலத்தில் ஆசிரியர்களது சம்பளம் ஏனைய உத்தியோகத்தருடன் ஒப்பிடுகையில் மிகக்குறைவு என அறிகின்றோம். இருந்தும் நீங்கள் விரும்பியா ஆசிரியத்தொழிலை நாடினீர்கள்?

விரும்பியே ஆசிரியர் தொழிலை நாடினோம். அன்று ஆசிரியத் தொழில் பெறுவதே சடுங்கஷ்டம் ஆசிரியர் பயிற்சிக் காலத்தில்கூட சம்பளமோ கொடுப்பனவோ தராது, பயிற்சி முடிய 3 - 4 வருடங்களாவது காத்திருக்கவேண்டும். நியமனக் கடிதம் கிடைத்து 14 நாட்களுக்குள் பதவியை ஏற்கவேண்டும். இல்லையேல் உடன் அறிவிக்கவேண்டும். அறிவிக்காமல் நின்றால் அதன்பின் எவ்வித அரசாங்க வேலைக்கும் விண்ணப்பிக்க முடியாது. பொருத்தமற்றவராகவே அரசாங்கம் கணிக்கும்.

இருந்தும் சேவை, கற்பதை வழங்கும் விருப்புடன் இத்தொழிலை ஏற்றோம். சம்பளம் குறைவாக இருந்தாலும் பொருளாதார நிலமையில் சீவிக்கப் போதுமானதாக இருந்தது. தோட்டம் செய்தல், வயல் செய்தல் மூலம் கூட சீர்செய்யக்கூடியதாக இருந்தது.

இன்று ஆசிரியர்கள் சம்பள உயர்வைப் பெறுவது, ஏனைய தொழில் புரிபவர்களுடன் ஒப்பிடுகையில் அவர்களுக்கு ஈடாக உள்ளது. கூடிய சம்பளம் பெறும் ஆசிரியர்கள் இனிமேலும் கல்விக்கடை வைக்காது இலவசமாக மேலதிக வகுப்புக்கள் வைத்தல் பெருமைக்குரியது.

எனக்கூறி முடித்ததும், தாங்கள் கற்பித்த காலத்தில் ஆசிரியர்களுக்கிடையே சமத்துவம் பேணப்பட்டதா? அதாவது நகர்ப்புறத்தில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கும் கிராமப்புறத்தில் கடமைபுரிந்த ஆசிரியர்களுக்கிடையிலான உறவு எவ்வாறிருந்தது.

அன்று கிராமப்புறத்தில் கடமையாற்றிய ஆசிரியர்களை, நகர்ப்புறத்தில் கடமையாற்றிய ஆசிரியர்கள் குறைவாகவே நோக்கினர். கிராமப்புறத்தில் கற்பிக்காமல் ஏமாற்றுபவர்களாக நினைத்தனர். இதனால் கிராமப்புறத்தில் பலகாலம் சேவையாற்றிய பின் நகர்புற பாடசாலைக்கு மாற்றலாகி வந்தால் அங்கிருக்கும் அதிபர், ஆசிரியர்களினால் மேலே சொன்னவாறு தவறாகவே நினைப்பர். அதிபர் சிலவேளைகளில் மறைமுகமாக மதிப்பீடு செய்யும் முறை காணப்பட்டது.

அடுத்து, தாங்கள் கற்பித்த காலத்தில் பொருளாதார ரீதியில் அடைந்த கஷ்டங்கள் ஏதும் உண்டா?

ஆம், எமது நாட்டைப் பொறுத்தவரை இன்று அதிகாலையிலே புறப்பட்டு கடமைக்கு செல்லும் சமுதாயம் என்றால் அது ஆசிரியர் சமுதாயந்தான். அன்று அதிகாலை 6-20க்கு புகையிரதம் மூலம் புறப்பட்டு பாடசாலையை அடைவோம். அப்போ பொருளாதாரக் கஷ்டமே இல்லை. ஆனால் 1972ம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதாரக் கஷ்டம் ஆசிரியர்களையே பாதித்தது.

மண்ணெண்ணை, தேங்காய் விலையேற்றம் எப்பொருளையும் வரிசையில் நின்றே பெறவேண்டிய நிலை இது எங்கள் கடமையைச் செய்வதில் பின்னடைவை ஏற்படுத்தியது. துணி வாங்குவது என்றாலும் கூட வெள்ளைச் சீருடைத்துணிகூட வரிசையில் நின்றே பெறவேண்டிய நிலைகாணப்பட்டது. இதுகூட நிலமையை மேலும் சங்கடத்திற்குள்ளாக்கியது. ஏதோ ஆசிரியன் தேனீ என்பதற்கிணங்க அலுவல்கள் நடைபெற்றது.

இறுதியாக அன்றைய ஆசிரியர்கள் உடைக்கும் இன்றைய ஆசிரியர் உடைக்கும் உள்ள வித்தியாசம் பற்றி கூறுகிறீர்களா?

அன்று எமது நாட்டில் தமிழ்மொழிமூல ஆண் ஆசிரியர்கள் அனைவரும் எந்த இனத்தைச் சேர்ந்தோராக இருந்தாலும் அவர்கள் வேஷ்டி சால்வையையே அணிந்தனர். ஆங்கிலத்தில் சரளமானவர்கள். ஆனால் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர் மாத்திரமே நீளக்காற்சட்டை அணிவர். ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் மேலே சொன்ன உடையே அணியப்பட்டது. பெண்கள் சாறியையே அன்றும் இன்றும் அணிகின்றனர்.

ஆனால் இன்று இன, மத, மொழி ரீதியான உடை என்பது மறைந்து கொண்டு போகின்றது. இன்று இலங்கையின் தேசிய உடைக்கான அந்தஸ்த்தை நீளக்காற்சட்டையே பெற்றுள்ளதுபோல் உள்ளது. இலங்கையர் அனைவரும் இதையே விரும்பி அணிகின்றனர். இதனால் ஆசிரியர்களும் காலத்திற்கேற்ப மாறியுள்ளதில் தவறில்லை.

நான் ஒய்வுபெற்ற திரு. திருமதி. பத்மநாதன் ஆசிரிய தம்பதிகளுக்கு நன்றிகூறி விடைபெற்றுக்கொண்டேன்.

" நன்றி "

---

பேட்டி கண்டவர்:

**சாமித்தம்பி - மோகனதாஸ்**
( பகுதித் தலைவர் )
மட்/பேத்தாழை விபுலாநந்த வித்தியாலயம்,
வாழைச்சேனை.

---


Best Wishes for Asiriya Theepam

# CHANDRA STORES

*Agents for:*

**Ceylon Biscuits Ltd.**

**I. C. L. Marketing (Pvt) Ltd.**

**No. 1, Trinco Road, BATTICALOA.**

1ம் இடம் பெற்ற கவிதை

# கல்விக்கு ஓர் புரிந்துணர்வு

புரிந்து உணர்ந்து செய்கின்ற கருமம்;
பூமாலைகளைத் தேடித்தரும்
புரியாமல் தெரியாமல் பூசி மெழுகுதல்;
புகழைக் கெடுத்து புண் வேதனையைத் தரும்.

சரியாகப் பாடத்தை கற்றறிந்து அதன்வழி;
சாற்றுகின்ற கல்வியே நாட்டில் சரித்திரம் படைக்கும்;
அரிதாய்க் கிடைத்த மானிடத்தில் நம்;
அறிவை உயர்த்துவதே ஆன்றோர்க் கழகாம்.

சுற்றி இருப்பவர் சூழலறிந்து;
சுதந்திரமாய் செயல்பட வழியமைத்து;
கற்றறிந்த காரியத்தை கச்சிதமாய்;
மாணவர்கட்கு ஊட்டுவதே ஆசிரியர் கடன்.

நெற்றி வியர்வை சிந்த நெகிழ்ந்திழைத்து;
நெஞ்சு நிறைந்த பிள்ளையை நீளறிவு பெற,
பற்றுதலுடன் பாடசாலைக்கு அனுப்பும்;
பாங்கான பெற்றோர் கனவு ஆசிரியர் கையில்.

சத்தியம் வென்றிடும் போது சாந்தி நிலவும்;
நித்திலம் கொழித்து நிலம் சிறப்புறும்;
இத்தனையும் புரிந்து போதனை செய்ய;
வித்தகப் பெரியோரே விரைந்து எழுக.

**திருமதி. க. சண்முகம்**
மட்/கோரகல்லிமடு அ. த. க. பாடசாலை,
கிரான்.

# சித்திரக்கல்வியின் சிறப்பிற்கு சில ஆலோசனைகள்

— என். டபிள்யூ. அருள்சீலன்
இந்துக் கல்லூரி, வாழைச்சேனை.

பொதுவாக இன்றையக் கல்வி நிலையினை நோக்கின் கணிதமும் தமிழும் சேர்த்து எப்படியும் இரண்டு மூன்று திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்கள் சித்தி பெற்றால் போதும். உயர்தரம் படிப்பதற்குத் தகுதி பெற்றுவிடலாம் என மாணவர்கள் பதில் தரக்கூடும். இவைகளை மாத்திரம் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டதல்ல எமது கல்வித்திட்டம்.

மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளின் போது எழும் சிக்கல்கள் பற்பல. இவற்றைத் தீர்க்கும் உளவியற் கருத்துக்கள் பலவற்றை கல்விச் சிந்தனையாளர்களும் அறிஞர்கள் பலரும் முன்வைத்திருக்கிறார்கள். இவைகளில் ''ரசனை அனுபவம்'' முக்கிய இடம் பெறுகின்றது. ரசிப்பதால் சுவையைத் தோற்றுவிக்கலாம். கலைப்படைப்புக்களை முற்றாக உணர்ந்து அனுபவிக்கமுடியும். குறை நிறைகளை ஆளமாக ஆராய்ந்து விமர்சிக்கும் ஆற்றலைப் பெறமுடியும். கற்பனை மூலம் உள்ளத்தால் நுகர்ந்து சிந்திக்கும் மனவெழுச்சியைத் தோற்றுவிக்கமுடியும். ரசிக்கும் தன்மையால்தான் ஆக்கத்திறனை விருத்தியடையச் செய்யமுடியும். முழுமையான ஆழுமையைத் தோற்றுவிக்கவல்ல ரசனையின் பத்தையூட்டும் அழகியல் பாடம், படைப்பாற்றல் மிக்க மாணவர்களைத் தோற்றுவிற்பதிலும், கற்பனைத் திறனை விருத்தி செய்வதிலும் ஏனைய பாடங்களில் ஆர்வத்துடனும் விருப்பத்துடனும் ஆய்வுடனும் ஈடுபடத்தக்க மனோபக்குவத்தையும் பெற்றுக்கொடுக்கும்.

கலைப்படைப்புக்கள் ஒரு தேசிய சொத்தாகும். படைப்பாற்றல் மிக்க மாணவர்களால் புதிய ஆக்கங்கள் படைக்கப்படும் பொழுது அது தேசத்தின் விருத்திக்குக் காரணமாய் அமைகின்றது. சித்திரக்கல்வி பயிலும் மாணவர்கள் ஆக்கச் சிந்தனையின்பால் திருப்பப்படுகின்றனர். இந்த ஆக்கச்சிந்தனை வாழ்க்கையின் பல சவால்களுக்கு முகங்கொடுக்கவல்ல சக்தியாகின்றது.

கடந்த காலங்களில் அறிவானது ஆசிரியர் மூலமே பெறப்பட்டது. தற்காலத்தில் கற்றலுக்காக பல ஊடகங்களின் பயன்பாடுகள் சேர்ந்துள்ளமையால் ஆசிரியர் பணிக்குப் பெருஞ்சவால் தோன்றியுள்ளது. நவீன முறைகளையும் புதிய ஊடகப் பயன்பாடுகளையும் தேடியோடவேண்டிய நிலையேற்பட்டுள்ளது. உலகின் பலவித மாறுபாடுகளுக்கு ஈடுகொடுத்து நிற்கும் காலமிது. இவ்வேளையில் சித்திரப்பாடத்துக்கான முழுமையான பாடப்பரப்பினைக் கொண்டுள்ள ஒரு பாட நூலோ அல்லது எழுத்துமூல கோவைகளோ சிங்கள மொழியில் உள்ளது போன்று தமிழில் வெளிவராதது பெரும் குறையாகவே யுள்ளது.

சித்திரக் கலைப்பாடத்துக்கென தனி யான ஒரு கல்விப்பணிப்பாளரோ அல்லது கல்வியதிகாரியோ அத்துறை நிபுணத்துவம் மிக்க ஒருவர் நியமிக்கப்படவில்லை. சங்கீதப் பாடத்துக்கான கல்விப்பணிப்பாளர் செல்வி. றஜனி நடராஜாவே இப்பாரிய பொறுப் பினையும் ஏற்று அரும்பெரும் சேவையாற்றி வருகின்றார். அத்துடன் சேவைக்காலப் பயிற்சி ஆலோசகர் திரு. சோ. கமலச்சந்தி ரன் ஆசிரியர் ஆற்றிவரும் சேவையும் பாராட் டத்தக்கதொன்றாகும். அண்மைக் காலங் களில் அவர் தொகுத்து வெளியிட்ட ''சித்தி ரக்கலை'' ''சித்திரம்'' போன்ற அரியநூல் கள் மாத்திரமே எம் வசமுள்ளன. ஆனால் அகில இலங்கை ரீதியிலான பரீட்சைகளுக்கு அவை போதுமானதன்று. திரு. க. நவரெத் தினம் அவர்கள் இயற்றி வெளியிட்ட ''இலங் கையிற் கலை வளர்ச்சி'' என்ற நூலையும் இவற்றுள் குறிப்பிடலாம். சமகாலச் சித்திரப் பாட பரீட்சை வினாக்களுக்கு விடைகாணின் எகிப்து, கிரேக்கம், இந்தியா போன்ற புரா தன நகரங்களில் காணப்படும் சித்திர சிற் பக் கட்டிடக்கலை பற்றியும் புராதன குகை ஓவியங்கள் பற்றியும் ஆளமான அறிவு பெற் றிருக்கவேண்டியுள்ளது.

சித்திரப்பாடம் ஒரு புதிய மலர்ச்சி காண வேண்டுமெனில் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள் ஏன் கல்வித்துறை சார்ந்த அமைச்சுக்கூட புதிய உத்திகளைக் கையாள வேண்டும். இப்பாடம் சம்பந்தமாக மாண வர்களினதும் ஆசிரியர்களினதும் நிலமை களைப் பெற்றோரும் உணரவேண்டும். அப் போதுதான் மாணவர்கள் பரீட்சை மண்ட பத்தில் தமது முழு ஆழுமையை வெளியிட முடியும்.

## நூறு ஆண்டுகள் வாழ.........

- பிறர் பொருளில் ஆசை கொள்ளாதீர்கள்.
- அனுதினமும் பணிபுரியுங்கள்.
- அனைவரையும் நண்பராகக் கண்டு பழகுங்கள்.
- தேவைக்கு மட்டும் திட்டமிட்டுப் பொருளீட்டி, எவரிடமும் கையேந்தி யாசிக்காமல் வாழுங்கள்.
- மனதில் எப்போதும் மங்களமான எண்ணங்களே ஏகுமாறு பார்த்துக்கொள்ளுங்கள்.
- நல்லார் பொல்லார் ஆகிய எல்லாரையும் கருவிகளாக கொண்டு கடவுள் தம் காரியங்களைச் செய்து முடிக்கிறார். தாகத்தில் தவிப்பவனுக்குச் சேற்றுத் தண்ணீரும் அமிர்தம் போன்றது. அருள்தாகம் பிடித்தவனுக்குச் சமயம் ஒன்றில் உள்ள குறைபாடு இடைஞ்சல் ஆவதில்லை.

# ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவேண்டும்

கல்விப் பயிர் வளர்க்கும் ஆசிரியர்கள், அதிபர்கள் வாழும் காலத்திலேயே மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலைச் சமூகம் ஆகியோரால் பாராட்டிக் கௌரவிக்கப்படல் வேண்டும். அப்போதே கல்வித்துறையில் பணியாற்றுவோர் உற்சாகமும், சேவை மனப்பான்மையும், உடல், உள அபிலாசைகளையும், ஆளுமையையும் முதலாகக் கொண்டு கல்வி அபிவிருத்தியில் சிறந்த பணியாற்றுவர்.

பாராட்டு தனிப்பட்ட ஒருவரையோ, அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கோ நடாத்துவதன்றி ஆசிரியர்கள், வாழும், கடமையாற்றும் காலம் வரை கௌரவிக்கப்பட்டுக்கொண்டே வரவேண்டும்.

முன்னைய ஆசிரியர்கள் தொழிலாகவன்றி சேவையாக ஆசிரியத் தொழிலைப் புரிந்தார்கள். சலுகைகளை அனுபவிப்பதிலேயே இன்றைய ஆசிரியர்கள் பலர் ஆர்வங்காட்டி வருகின்றார்கள். இந்த மனப்பான்மையை அகற்றத் தமிழ் ஆசிரியர்களான நாம் முயன்று பெரிதும் உதவவேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டம் தற்போது கல்வியில் மிக வேகமாக முன்னேறி வருகிறது. எனினும் நகரம் சார்ந்ததான அந்த முன்னேற்றம் கிராமங்களுக்கும் வியாபிக்கவேண்டும். இதற்கு முழு ஆசிரியர்களும் தலை நிமிர்ந்து கல்வி உயர்ச்சிக்குப் பாடுபட வேண்டும்.

இன்று ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பணியாற்றி வருகின்றார்கள். ஆனால் ஆசிரியர்களுக்கு நிவாரணம் வழங்கக்கூடிய சலுகைத் திட்டங்கள், இடமாற்றத் திட்டங்கள் திருப்தியாக அமைக்கப்படவில்லை.

கல்வி நிர்வாகப் பன்முகப்படுத்தல் திட்டம் ஆசிரியர்களுக்குப் பல்வேறு கஷ்டங்களை ஏற்படுத்தி வருகின்றது. பிரதேச, மாவட்ட, மாகாண கல்விப்பணிப்பாளர்களிடையே வலுவான இணைப்புத்தன்மை இல்லாததால் அதிபர்கள், ஆசிரியர்கள் சிரமமடைய வேண்டியுள்ளது.

கல்வி நடவடிக்கைகளுக்காக மொத்த வருமானத்தில் 5%மான தொகை செலவு செய்யப்படுகிறது. உலகில் கல்விக்காக கூடிய செலவைச் செலவிடும் முதலாவது நாடாக ஜப்பானும், இரண்டாவது நாடாக இலங்கையும் திகழ்கின்றன.

ஆசிரியர் சமுதாயத்தை ஏணி என்றும், தோணி என்றும் இன்றைய உலகம் போற்றுகின்றது. ஆனால்; ஆசிரியர்கள் என்றும் ஏணியாகவும், தோணியாகவும் இருக்க நினைப்பது தவறானதாகும். ஏணியிலும், தோணியிலும் தாங்களும் ஏறி தமது தரத்தினை உயர்த்திக்கொள்ள முன்வரவேண்டும். நமது நாட்டில் 197000 ஆசிரியர்கள் பணிபுரிகின்றார்கள். இவர்களில் தினமும் 30,000 பேர் லீவில் நிற்கின்றனர். என்ற அதிர்ச்சியான செய்தி கல்வி அமைச்சினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் மூலம் தெரிய வந்துள்ளது.

இவைகளை ஆசிரிய சமுதாயம் ஓரளவு சிந்தித்து உணருமேயானால் மாணவரின் அடைவு மட்டத்திற்கும், கல்வி அபிவிருத்திக்கும் கூடுதலாக பங்காற்ற முடியும். அத்தோடு, மாணவர், பெற்றோர், சமுதாயம் ஆகிய கல்விச் சமுதாயத்தின் கௌரவிப்பையும் நன்மதிப்பையும் பெற்று உயர்வதற்கு ஆசிரியர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் என அறியலாம்.

— (சந்தியூரன்)

---

க. கிருஷ்ணபிள்ளை
மட்/சந்திவெளி சி. வி. வித்தியாலயம்,
முறக்கொட்டான்சேனை.

## அன்புடன் நவில்கின்றேன் நன்றிகள் பல

''நீதிநெறி ஒழுக்கமென்ற நிறைகளன்றி
நேர்மையற்ற தேர்வுகளை நீக்கி நிற்போம்''

- அன்புடன் ஆசிச்செய்தியை உவந்தளித்த மாகாணச் செயலாளர் அவர்களுக்கும்,
- ஆசிச் செய்தியையும், வாழ்த்துச் செய்தியையும் உவந்தளித்த கௌரவ கல்விப் பணிப்பாளர்களுக்கும்,
- இம்மலரை சிறப்பாக வெளியிட சகலவிதத்திலும் ஒத்துழைப்பு நல்கிய நிருவாகத்தினருக்கும்,
- அன்புடன் ஆசிச் செய்தியை வழங்கியதுடன், அவ்வப்போது ஆக்கமும், ஊக்கமும், ஆலோசனையும் வழங்கிய எமது பிரதேசக் கல்விப் பணிப்பாளர் **திரு. எஸ். நாகேந்திரம்** அவர்களுக்கும்,
- விளம்பரங்களைச் சேகரித்து தந்துதவிய சகல ஆசிரியர்களுக்கும்,
- ஆக்கங்களை படைத்துத் தந்த ஆசிரிய, சகோதர, சகோதரிகளுக்கும்
- இம்மலரை குறுகிய காலத்திற்குள் அச்சிட்டு உதவிய ஆதவன் அச்சகத்தினருக்கும்,
- ஆக்கங்களையும், விளம்பரங்களையும் மீள வடிவமைத்துத் தந்த **திருமதி எஸ். மோகனதாஸ்** அவர்களுக்கும்,
- சிறப்புப் பிரதிகள் பெற்று மலரைச் சிறப்பித்து ஆசிரியர்களை கௌரவித்த பெருந்தகைகளுக்கும்,
- இந்நூல் பூரண வடிவில் வெளிவர சகலவழிகளிலும் அயராது உழைத்த மலராசிரியர் **திரு சா. மோகனதாஸ்** அவர்களுக்கும்.

எமது நூலாக்கக் குழு சார்பில் இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்கின்றேன்

இவ்வண்,
**திரு. இ. ஜீவரெட்ணம்**
செயலாளர்.

தீபங்களால் சுடர் விடும்
ஆசிரியதீபம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

# "மக்களின் சேவைக்கு மக்கள் வங்கி"

மக்கள் மனதில் என்றென்றும் இடம் பிடித்துள்ள மக்கள் வங்கியின் சேவைகளான,

★ சேமிப்புக் கணக்கு
★ நடைமுறைக் கணக்கு
★ விஷேட கடன் திட்டங்கள்

ஆசிரிய நலனில் பங்கெடுக்கும் விஷேட திட்டமான,
"குருசெத" கடன்திட்டம்

மாணவர்களுக்கான,
பல விஷேட அம்சங்களைக் கொண்ட
"*சிசு உதான*" சேமிப்புத் திட்டம்
தற்போது உதயமாகியுள்ளது.

*மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள மக்கள் வங்கிக் கிளையை நாடுங்கள்.*

## மக்கள் மனதை அறிந்த வங்கி
## மக்கள் வங்கி

ஆசிரிய தீபங்கள் சிறப்புறவும் தீபம் சுடர்விடவும்
வாழ்த்துக்கள்

*நம்பிக்கை!* *நாணயம்!!*

உறுதியான தொழில் நுட்பம் உண்மையான உத்தரவாதம்
குறித்த தவணையில் விரும்பிய வகைகளில்
சகலவிதமான பாவனைப் பொருட்களுக்கும்
நாடவேண்டிய தொழில் நிலையம்

# "றோயல் என்ஜினியரிங் வேக் சென்ரர்"

# "ROYAL ENGINEERING WORK CENTER"

- வெல்டிங் வேலைகள்
- டயர் வேலைகள்
- ஸ்பிறே பெயின்டிங்
- கேஸ் வெல்டிங்
- ஓட்டோ எலக்ரிக் வைண்டிங்
- இரும்பு பட்டறை வேலைகள்
- குஷன் செற்
- சாப்பாட்டு மேசைகள்
- இரும்பு கட்டில்கள்
- கதிரைகள்
- பிளேட் ரக்
- டவல் ட்ரக்

மற்றும்,

இரும்பு கேற், ரஸ்க், கிறீல்கள், செங்கல், ஓடு, சீமெந்து, கருங்கல்,
கம்பிகள், மற்றும் கட்டடப் பொருட்களையும்,

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

## றோயல் என்ஜினியரிங் வேக் சென்ரர்

## பிரதான வீதி, வாழைச்சேனை.

ஆசிரிய தீபங்கள் நலம்பெற
காலமெல்லாம் வளம் பெற
அவர்கள் பணி சுடர்விட்டு
குவலயத்தில் சிறப்புற
உளம் கனிந்த வாழ்த்துக்கள்.

☆ பாமர மக்களுக்கான கிராமிய வங்கிச் சேவை,
☆ அரசாங்க விலைக்கமைய மண்ணெண்ணை, டீசல், விநியோகம்,
☆ தெளிவானதும், கவர்ச்சியானதுமான உடனடி போட்டோ பிரதிகள் பெற்றுக்கொள்ள,
☆ தரமான சிகரட் விற்பனைச் சேவை,
☆ அத்தியாவசிய சேவைக்கு சொகுசான ஒட்டோ சேவை, சொகுசு நிறை பஸ் சேவை,
☆ 17 கிளைகளினூடாக நுகர்ச்சிச் சேவை,

இவை அனைத்துடனும்,
அடையாள அட்டை, அனுமதிப் பத்திரங்கள், கடவுச் சீட்டுக்கள், சான்றிதழ்கள் போன்றவற்றைப் பாதுகாத்துக்கொள்ள

"லெமினேற்றிங்" செய்யவும்

ஒரே இடம்

# கோறளைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

அனைத்துச் சேவைகளுடனும் எமது சமாசத்தில் பாவனைச் சாமான்களும் விற்பனைக்குண்டு என்பதை அறியத்தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

பதிவு இல: மட / 129 / 9 - 31971.

பிரதான வீதி, வாழைச்சேனை.

☎ 065 - 7224.

ஆதவன் அச்சகம், அரசடி, மட்டக்களப்பு.